உட காலம், விடியற் காலம், dawn.

உடக்கு, உடம்பு, body.

உடக் கெடுத்துப் போதல், உடம்பு மெலிந்து போதல், to grow thin and emaciated, as in tuberculosis; 2. சதை யற்றுத் தோலுமெலும்பு மாதல், to be reduced to skin and bone.

உடக்கை, உள்ளங்கை, as in

"ஒருளான உடக்கை யது தன்னில் தேய்க்க
உத்தமனே வெகுதூர மோடுந் தானே"
(கருவூ. குருநூல்)

(In Palmistry) the palm of the hand.

உடசத் தோல், வெட்பாலைப் பட்டை, the bark of the ivory tree; 2. குடசப் பாலைப் பட்டை, the bark of a twining plant — Asclepias volublis.

உடசம், வெட் பாலை, dysentery rosebay — Nerium antidysentericum alias Holarhena antidysentericum; 2. பன்ன சாலை, அதாவது ஓலைக் குடிசை, the habitation of a hermit erected with palmyra or other leaves.

உடசிப்பி, சிப்பி முத்து, oyster pearl, as distinguished from pearls got from other sources.

உடணம், இஞ்சி, ginger; 2. மிளகு Pepper, 3. சுக்கு dried ginger, 4. திப்பிலி மூலம், root of piper longum — Piper cubeba.

உட நடை யலங்கம், திகைப் பூச்சி, a peculiar insect inducing perplexity of mind. For details see under its proper head.

உடப்பு, துறட்டு முள் மரம், West Indian cock spur — Pisonia georgina alias P. aculeata.

உட முள், வேல மரத்தின் முள், the thorn of the Acacia tree.

உடம், வேல மரம், babool tree — Acacia (genus)

உடம் படல், உடம் படுதல், உயிருக்கும் உயிருக்கும் ஏற்பட்ட பொருத்தம், harmony of soul to soul.

உடம் படுத்த நோய், திரிதோஷக் கோளாறுகளி னாலும் மனோ வியாகூலத்தினாலும் சுபாவ மாகவே வுடம்பி லேற்படும் நோய், a disease of an idiopathic type due to the morbid diathesis of the body arising from the action of any of the three fundamental bodily humours or from the dynamical energies of the mind.

உடம்பறியாமற் போதல், மூர்ச்சித்துப் போதல், swooning; 2. உணர்ச்சி யற்றுப் போதல், becoming senseless; to be void of perception; 3. மெய் மறத்தல், becoming unconscious.

உடம்பறியாமை, தன்னை மறத்தல், literally, unconsciousness as in swoon etc; 2. சுழுத்தி நிலை, (In Yoga philosophy) a state of insensibility to one's own surroundings; 3. மருள், (In religious philosophy) a degree of delight that arrests the whole mind or in which the mind is carried away, as it were, from the body — Ecstasy.

உடம்பிலை, நெடு நாரை, fragrant cherry nutmeg — Polyalthia fragrans.

உடம்பிறுகல், உடம் புறுதிப் படல், உடம்பு வலுவடைதல், the state of being invigorated.

உடம்பின் கூறு, see, உடற் கூறு.

உடம்பு, உடல், body; 2. பொன், gold; 3. உயிருக் கிருப்பிடம், the abode of the life or the soul.

உடம்பு, சாதாரணமாகச் சட வஸ்துக்களாகிய எலும்பு, இரத்தம், தசை, நார் முதலியவைகளால் ஆக்கப்பட்டு, உயிருக் கிருப்பிடமாக விருந்து கொண்டு இவ்வுலகில் உயிர் வாழ்க்கைக்குக் காரணமாக வுள்ள மனிதர் அல்லது பிராணிகளின் கூடு, (In Physiology) the physical or the material frame together with its constituent parts, such as, bone, blood, flesh, tendons etc. of man or of any other animal. It forms the seat of life and means of our material existence in this world; 2. தசை, இரத்தம், கொழுப்பு, எலும்பு, நரம்பு முதலியவைகளி னுறுப்புக்களானவை, பிராணன், உதானன், சமானன் முதலிய தசவாயுக்களின் பேதங்களோடு ஒன்றாகக் கலப்பதால் உயி ருண்டாகி, ஆத்துமா, மனம், அறிவு, புத்தி முதலியவைகளுடன் கூடிப் பிண்டமாகத் திரண்ட வோர் கூடு, (In Philosophy) the trunk or animal frame with its organs and life, which are derived from the union of the seven component parts, namely flesh, blood, marrow, bone, nerve etc, with the ten vital airs. It maintains its existence in harmony with the mind, the intelligence, the soul, the sense, etc.; 3. பூர்வ கர்மப்படி, வந்து நேர்ந்த வுடம்பு, (In Religious Philosophy) any animated body assumed as a result of the deeds of former births; 4. ஆகமத்தின்படி வகுக்கப்பட்ட மூவகை உடம்பு, தூலம், சூக்குமம், காரணம், (In Agama Philosophy) the three-fold enumeration of the bodies viz.- the physical, the subtle or the astral and the causal; 5. வேதாந்தத்தின்படி வகுக்கப்

பட்ட, யாதனா, பூதனா, பரிணாமா என்ற மூவகை உடம்புகள், (In Vedantha Philosophy) the three classifications of bodies viz.—

(a) யாதனா சரீரம், தண்டனையை யனுபவிக்கத் தக்க சரீரம், இதற்குப் புரியட்டக மென்றும் பெயர், the body capable of undergoing unending suffering in hell. It is also called the Astral body.

(b) பூதனா சரீரம், the body as it exists in its present state - the physical body..

(c) பரிணாம சரீரம், திரி படைந்து நேர்ந்த தேகம், அஃது தூல தேகம் போன்றது, a body changed from the present state i.e., a modified form resembling the physical body.

உடம்பு கட்டு விடல், உடம்பு தளர்தல், Infirmity through old age.

உடம்பு கறுத்தல், உதடு முதலியவை கறுத்தல், சுரத்தினா லேற்பட்ட வோர் வகைத் தோஷம், a kind of Dosha (defect) arising from fever — Asphixiated condition.

உடம்புகா, சுடு தொரட்டி, painted-leaved tailed tick trefoil — Uraria picta.

உடம்பு காந்தல், உடம்பு வெப்பங் கொள்ளல், body becoming hot.

உடம்புக் கட்டு, உடம்பி னுறுப்புகள் தளராதிருத்தல், the firmness of the structure of the body.

உடம்புக் கத கதப்பு, சுரத்திற்கு முன்னதாக வெழும்பும் கொதிப்பு, the rising heat as felt just before fever.

உடம்புக் கன கனப்பு, சுரங் காய்வதா லான கொதிப்பு, heat as felt after the appearance of fever — Temperature.

உடம்புக் கனப்பு, see உடம்பு கன கனப்பு.

உடம்பு தேறுதல், நோயால் குன்றிய வுடம்பு வலுவடைதல், to be strengthened from a canvalascent state; picking up strength by a patient; 2. உடம்பு குணப்படல், to recover health.

உடம்பு நடுக்கம், நோய், பயம், கோபம், முதலியவைகளினா லுடம்பில் ஏற்படும் மோர் வித அசைவு, trembling (tremor) arising from disease, fear, anger or excitement; 2. குளிரினா லுடம்பு உதறல், சாதாரணமாக உடம்பு நடுக்கம் அடியிற் கண்ட

காரணங்களினா லுண்டாகும், a shaking fit from cold. Tremor generally may occur from the following causes:-

(a) பாஷாணத்தினா லேற்பட்ட நடுக்கம், a tremor resulting from arsenic poisoning — Arsenic tremor.

(b) உதறு வாதம், அல்லது நடுக்கு வாதத்தினா லுண்டாவது, a persistent tremor from paralysis agitans — Continuous tremor.

(c) தசைச் சுறுக்கத்தா லேற்பட்ட முறை வரிசை யுள்ள நடுக்கம், the rhythmic trembling due to alternate contraction and expansion and stretching, as in old age, of muscles — Fibrillary tremor.

(d) சூதக வாயு சம்பந்தமான நடுக்கம், a tremor seen in hysterias — Hysteric tremor.

(e) இரச வேக சம்பந்தத்தினாலும், முறிவினாலு மேற்படும் நடுக்கு வாதம், a kind of tremor due to mercurial poisoning — Tremor mercurialis.

(f) அதிகக் குடி போதையினா லேற்பட்ட நடுக்கம், trembling of drunkards; tremor of alcoholics (habitual drinkers of alcohol) — Delirium tremens.

(g) உலோக விஷ சம்பந்தத்தினா லேற்பட்ட நடுக்கம் a tremor seen in various metallic poisonings — Metallic tremor.

(h) கை, கால், முடக்கமா யிருக்கும் போது அசைக்க முயன்றால் அப்போதுண்டாகும் நடுக்கம், tremor of the limbs on attempting voluntary motion - Intentional tremor.

(i) அபினி போதையா லேற்படும் நடுக்கம், the tremor of opium users — Tremor opiophagorum.

உடம்பு நன்றாயிருத்தல், உடம்பு சௌக்கியமா யிருத்தல், to be hale and hearty.

உடம்பு பிடித்தல், உடம்பிற் சதை பெருகுதல், picking up flesh; 2. உடம்பைக் கையாற் பிடித்து அமுக்குதல், the process of pressing the parts of a person's body — Shampooing.

உடம்பு புரட்டுதல், உடம்பி னின்று அழுக்கைத் திரட்டி யெடுத்தல், to remove the dirt from the body.

உடம்புப் பொடி, அழுக்கைப் போக்கவும், மேனியை மினுக்கவு முபயோகிக்கும் ஸ்நானப் பொடி, a powder for rubbing over the body, in place of soaps and cosmetics which are now used in bathing.

உடம்பு வறட்சி, உடம்பின் மேற்றோ லுலர்ந்து காணல், abnormal dryness of the skin — Xerosis; 2. உடம்பின் மேற்றோல் சொர சொரத்து வறண்டு உதிரு மோர் நோய், a disease marked by roughness and dryness of the skin, especially in a disease like ichthyosis — Xeroderma.

உடம் பெடுத்தல், பிறத்தல், to take birth or to be born; 2. சதை பிடித்தல், to pick up flesh. See உடம்பு தேறுதல்.

உடம் பெரிப்பு, உடம் பெரிச்சல், burning sensation in the body. See உடம் பெரிவு.

உடம் பெரிவு, உடம்பின் எரிச்சல், இது இரத்தாதிக்கம், பித்தாதிக்கம், வறட்சி முதலிய காரணங்களினா லேற்படும், burning sensation in the body. This is generally due to the aggravated condition of blood and bile.

உடம்பை, கலங்கல் நீர், turbid water.

உடம்பைத் தேற்றல், நோயா லிளைத்த வுடம்பை மருந்து கொடுத்துத் தேற்றுதல், toning up

the body with medicine; 2. இளைத்த வுடம்பிற்குத் தகுந்தபடி ஊட்டங் கொடுத்தல், strengthening the body by nourishment during convalescence; 3. உடம்பை வலு வடையச் செய்தல், in vigorating the system.

உட லதிர்ச்சி, காயம் அல்லது மனோ வியாகூலத்தினால் நரம்புக் குண்டாகு மதிர்ச்சி, a sudden vital depression, due to an injury or emotion acting on the nervous system — Shock.

உட லந்தம், உடம் பழிவு, disintegration of the body.

உடலம், உடம்பு, body common to man and brute.

உடலற் பனை, திப்பிலிப் பனை, elephant's palm — Caryota urens.

உட லனல், உடம்பில் நிற்கும் சூடு, animal heat.

உடலாதி யந்தம், உடல் முழுமை, the body as a whole.

உடலிம்பனை, கூந்தற் பனை, elephant's palm — Caryota urens. See உதலிப் பனை.

உட லிரண்டுயி ரொன்று, கிளிஞ்சல், bi-valve; 2. இரண்டு உடம் புள்ள

வோர் கோர ரூபமான பிண்டம், a monster fetus with two bodies. It is supposed to be a defect in the development of twins.

உட லிருந்த வீடு, உடலினின் றுயிர் நீங்குவதற்கு முன்னதாகவே தன்னுடைய செய்கைகளினால் ஆசா பாசங்களை யறுத்து மாயையினின்று விலகி நிற்றல் அதாவது சீவன் முக்தி, a stage at which one is liberated from subjection, controlling power or influence and is freed from all bondage or restraint of any kind; emancipation of the soul before the death of the body.

NOTE.— Men of this type are mostly indifferent to all concerns of life and are hidden in the mood of the thought of Atman.

They are really lost to the world and centred in the bliss of awakening existence.

They have indeed a course of empirical existence, but in it they are mostly unconcerned. They are actuated by no selfish desire, but always by a cosmic sense to do good to others. They live for others until the occasion arises. When they enter the Deep and forsake the flesh and the acquired personality. Men of such liberated souls are called Jeevan Mukthas (*ஜீவன் முக்தா*) in the language of Agama Philosophy.

உட லிறந்த வீடு, இறந்த பின் எல்லா வித பாச பந்தங்களினின்றும் விடுதலை யடையும் சீவாத்துமா, அல்லது விதேக முத்தி, liberation of the soul from all bondage and restraint after death — Emancipation of the soul. c.f. உடலிருந்த வீடு.

உட லுருக்கி, பொதுவாக வுடம்பை உலரச் செய்யும் நோய், generally it is a term for any disease which results in emaciation of the body; 2. குடலைச் சுற்றி யிருக்கும் சவ்வுக்குத் தாபிதங் கண்டு அதனால் குழந்தைகளுக்கு நோயுண்டாகி வுடம்பை யிளைக்கச் செய்யு மோர் வகை நோய். இதற்குக் கணைச் சூடு என்றும், உள்ளுருக்கி என்றும், தமிழ்ப் பெயர்களும் பால சோஷணம் என்ற வடமொழிப் பெயருமுண்டு. இவ்வுடம்பின் மெலிவு அடியிற் கண்டபடி வேறுவிதக் காரணங்களினாலும் உண்டாகலாம், tuberculosis of the mesenteric glands in children, resulting in digestive derangement and wasting of the body — Tabes mesenterica or Tabes mesarica. The wasting or emaciation may also be caused in any of the following ways:-

1. நீரிழிவினால் நரம்பு தளர்ந்து உடம்பு மெலிதல், a peripheral neuritis occuring in diabetic patients — Diabetic tabes.

2. கர்ப்பச் சூட்டினால் நோயுற்று உடம்பு மெலிதல், muscular emaciation from congenital causes — Hereditary tabes.

3. முள்ளந் தண்டுக் கழிவு கண்டு அதனாலுடம்பை யிளைக்கச் செய்தல், wasting away of the body due to the degeneration of the vertebral column; locomotor ataxia — Tabes dorsalis.

உட லுற்பத்தி, கருக்குழியில் பிண்டம் ஜனித்தல், the development of the products of conception in the womb.

உட லூதல், உடம்பு பருத்தல் அல்லது வீங்கல், இது அடியிற் கண்டபடிப் பல காரணங்களை முன்னிட்டு ஏற்படலாம். அவையாவன, swelling of the body — Edema. This may be caused through several causes as mentioned below viz;—

1. கர்ப்ப தொந்தத்தினா லுண்டாகும் உடம்பு வீக்கம், local swelling due to a peculiar inherited tendency — Hereditary edema.

2. வாயு தோஷத்தினால் உடம்பு மெலிந்து காணும் வீக்கம், swelling marked by rapidly spreading wind with destruction of tissues — Malignant edema.

3. பிறந்த குழந்தைக்கு உடம்பு சில்லிட்டு நிறங் குலைந்து காணும் வீக்கம், spreading edema with cold and livid skin found in new born children — Edema neonatorum.

4. இரத்தம் நீர்த்தலினாற் காணும் வீக்கம், swelling occuring from a watery condition of the blood — Non-inflammatory edema.

5. உப்பிலாப் பத்தியம் காக்கும் போது உப்பைச் சேர்த்தலினா லுடம்பூதல், swelling produced by addition of or by increase of salt in the diet of a patient — Salt edema.

6. உடம்பில் எப்பாகத்திலாவது வாத நீர் தங்குவதனா லேற்படும் வீக்கம், temporary swellings in any part of the body, due to effusion of fluid — Flying edema.

உட லெடுத்தல், see உடம் பெடுத்தல்; 2. உடற் கொழுத்தல், becoming fat; to put on flesh; 3. பிறத்தல், to be born; to take birth.

உட லெரிவு, see உடம் பெரிவு.

உடல், உடம்பு, body; 2. பொன், gold; 3. உப்பு, salt; 4. மூவகை வுடம்பு, தூலம், சூக்குமம், காரணம், the three-fold enumerations of the body viz; the physical, the subtle or the astral, and the causal, See உடம்பு.

உடல் கனத்தல், உடம்பு பருத்தல், to grow stout and heavy.

உடல் கனப்பு, உடம்பு காந்தல், growing hot.

உடல் காய்தல், சுர மடித்தல், to suffer from fever.

உடல் தடித்தல், உடல் பருத்தல், growing stout.

உடல் தளிர் காணல், மெலிந்த தேகம் மறுபடியும் சதை பற்றல், putting on flesh.

உடல் துளிர்த்தல், see உடல் தளிர் காணல்.

உடல் நீர் முறித்தான், தேத்தான் கோட்டை, clearing nut — Strychnos potatorium.

உடல் நோய்க் கூறு, உடம்பை யடுத்த நோய்களி னியல்பு, the nature of bodily diseases.

உடல் பாரிப்பு, உடற் பருமன், grossness or fleshiness of the body — Corpulency.

உடல் பூரித்தல், see உடல் பூரிப்பு.

உடல் வகை, தூலம், சூக்குமம், காரணம் என மூன்றாம், the three kinds of bodies namely the physical, the astral, and the causal.

உடல் விடா வீடு, See உடலிருந்த வீடு.

உடல் விடு வீடு, See உடலிறந்த வீடு.

உடல் வெதுப்பு, உடம்பை யடுத்த உஷ்ணம் அல்லது சூடு, bodily heat; animal heat.

உடல் வெள்ளை, உடம்பில் சில வுறுப்புகளில் மாத்திரம் காணும் மேற்றோல் வெளுப்பு, abnormal whiteness in patches on the skin or particular parts of the body, — Leucoderma.

உடல் வேதிச்சி, கொடி வேலி, leadwort — Plumbago Zeylanica.

உடற் கடுப்பு, உடம்பினி லேற்பட்ட யெரிவு, burning sensation in the body; 2. உடல் வெதுப்பு, which see; 3. உடம்பின் குத்தல், darting pain in the body, as in rheumatism.

உடற் கட்டு மந்திரம், மந்திரத்தினால் பிறருக்குத் தீங்கு விளைவிக்க வேண்டித் தேவதைகளை ஏவி விடுவதற்கு முன்னதாகவே மாந்திரீகன் அத்தேவதைகள் திரும்பி வந்து தன்னைத் தாக்காத படிக்கும், அவைகளினால் தனக்கு எவ்விதமான கெடுதியும் நேரிடாத படிக்கும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வுச்சரிக்கும் மந்திரம், a magical spell or ceremony resorted to, by a magician to safeguard himself from reflex action, before exciting a demon or raising spirits for purposes of injuring others.

உடற் கழிவு, உடம்பி னின்று கழியும் மலமூத்திராதிகள், discharged waste-matter from the body such as, urine, feces etc.— Effete matter.

உடற் கனப்பு, see உடல் கனப்பு.

உடற் காயம், உடம்பி லேற்பட்ட காயம், bodily or physical injury.

உடற் காய்ப்பு, உடற் தடிப்பு, thickness of the body and the limbs; 2. உடற் றழும்பு, scar or scars on the body.

உடற் குறை, தலை யற்ற வுடம்பு, the headless body; the trunk; 2. உடம்பி லுறுப்புக் குறைவு, want of part or parts in the body; 3. உடம்பி லேற்பட்ட எட்டு வித அவயவக் குறைவு, அவையாவன, the eight kinds of bodily defects in the human system viz.—

1. குள்ளம், dwarfishness.
2. செவிடு, deafness.
3. மூகை, dumbness.
4. கூன், crookedness or hunch-back.
5. குருடு, blindness.
6. மருள், insanity.
7. உறுப்பில்லாப் பிண்டம், trunk; destitue of limbs.
8. பேடு, impotency.

உடற் குறைவு, உடம்புக் குண்டான ஐந்து விதக் கேடுகள், அவையாவன:- the five kinds of defects in the body viz—

1. கொட்டாவி, yawn.
2. நெட்டை, stretching of limbs with a crackling noise.
3. குறு குறுப்பு, collection of phlegm in the throat.
4. கூன் கிடை, bending of the body.
5. நட்டு விழல், a turn of the body; turning head over heels.

உடற் குற்றம், மனித வுடம்புக்கு ஏற்பட்ட பதினெண் குற்றங்கள், the eighteen moral and physical imperfections or defects attributed to the human body viz.—

1. பசி, hunger

2. நீர் வேட்டல், தாகம், thirst.
3. பயம், fear.
4. வெஞ்ளி, கோபம், anger.
5. உவகை, சந்தோஷம், delight.
6. வேண்டல், ஆசை, desire.
7. நினைப்பு, thought.
8. உறக்கம், தூக்கம், sleep.
9. நரை, greyness.
10. நோய், disease.
11. மரணம், death.
12. பிறப்பு, birth
13. மதம், self-conceit
14. இன்பம், pleasure.
15. அதிசயம், surprise.
16. வியர்த்தல், perspiration.
17. சேதம், துக்கம், grief.
18. கையறவு, inability.

உடற் கூறு, உடம்பின் கட்டுப் பாடு, (in Anatomy) the structure and constitutin of the human body; 2. இயற்கையாக உடம்பிற்கு ஏற்பட்ட பிரிவுகள், the real nature of the several divisions or parts of the human body, their structure, frame work and quality; 3. உடம்பின் பாடு, a set or series of parts or organs which unite in a common function, as in circulatory system, nervous system, digestive system etc; 4. உடம்பின் சுபாவம், peculiarity of termperament or constitution of a particular individual — Idiosynerasy 5. உடம்பின் தன்மை, the nature of the human body in general.

உடற்கூற் றிலக்கணம், உடம்பி னுறுப்புகளின் தொழில்களையும், அவைகளின் தன்மையையும் பற்றிக் கூறு மோர் நூல், the science which treats of the real nature of the several divisions or parts of the human body, its structure, frame, quality and also the functions of the several organs and their phenomena — Physiology.

உடற் கூற்றுத் தத்துவம், உடம்பி னமைப்பையும் அதற்குரிய விவரங்களையும் கூறும் நூல், the science dealing with the description and the structure of the human body.— Anatomy; 2. உடம்பினுள் ளமைந்த தத்துவங்களைப் பற்றிய உண்மை, the knowledge or study of the philosophic conceptions of the several organs in the human body. See அங்காதி பாதம்.

உடற் கூற்று வண்ணம், பட்டிணத்தடிகள் செய்த வோர் நூல். இது உடம்பின் தத்துவங்களைப் பற்றிக் கூறும், a book on the philosophy of the structure of the human body by Pattinathar, a Saint.

உடற் கொழுப்பு, உடம்பினுள் பல வுறுப்புகளிற் காணும் கொழுப்பு the fat or adipose tissue whitish or of yellow colour found in certain parts of animal bodies — Adipose tissue; 2. உடற் றடிப்பு, corpulency or plumpness due to abundant food — Adiposis; 3. குடற் கொழுப்பு, a fat of the intestines; 4. அரோசிகத்தை யுண்டாக்கு மோர் நோய், a disease characterised by aversion to food.

உடற் கொள்ளுதல், உடம்பிற் றங்குதல் உடம்பிலேற்றுக் கொள்ளுதல், being absorbed in the system, being taken or received agreeably into the constitution.

உடற் சக்கரம், உடம்பினுள் ளமைந்துள்ள ஓர் தத்துவம், the existence of a peculiar faculty in a particular organ of the human body.

"உடற் சக்கரத்தி னுறுப்பையும் காட்டி"
(விநா. அகவல்)

உடற்சி, கோபம், anger.

உடற் பரு, உடலிற் காணும் பரு, a wart on the body — Verruca.

உடற் பொருள், உடலுக்குள் ளுண்டாகும் கஸ்தூரி, கோரோசனை, புனுகு, அம்பர் முதலிய பொருள்கள், scented substances such as musk, bezoar, amber etc. found inside the body of animals; 2. கோரோசனை, a concretion of various character from the stomachs and intestines of animals — Bezoar. It is highly esteemed as a medicine by our Veidyans.

உடற் றத்துவம், உடம்பி னியற்கை, the nature of the human body; 2. உடம்பினி லமைந்துள்ள தொண்ணூற் றாறு தத்துவங்கள், the ninety six bodily and mental organs, faculties, matter etc; 3. உடம்பினுக் குரிய மூவகைத் தத்துவங்கள் — ஆத்தும தத்துவம், சில தத்துவம், புத்தியா தத்துவம், the three classes of faculties or powers in the system.

உடற்றல், உடம்பினுள்ளே பிரயோகித்தல், administering into the body; 2. வருத்துதல், causing affliction to the body; 3. வலி யுண்டாக்கல், causing pain to the body.

உடற் றழும்பு, உடலி லுண்டாகும் மச்சம், பரு, காயம் முதலியவைகளினா லேற்பட்ட அடையாளம், mark in the body such as, a mole, a wart, a scar, discolouration of the skin left by an injury on the human body etc.

உடற் றளிர், see உடல் துளிர்த்தல்.

உடற் றுளிர்ப்பு, நோயால் மெலிந்த வுடல் மறுபடியும் வளருதல், the picking up of flesh after emaciation due to illness.

உடற் றொழில், உடம்பினுள் ளுண்டாகும், இரத் தோட்டம், சீரணம், சுவாசம் முதலிய தொழில்கள் the different physiological functions, such as urination, digestion, respiration etc., in the body of living animals.

உட னிகழ்ச்சி, ஒரே காலத்தில் நிகழ்வது அதாவது சிரவங்கள் இரண்டும் ஒரே காலத்தில் விரியும் போது சடரங்கள் இரண்டும் சுருக்க மடைதல், the occurence at the same time — Synchronism e.g., the dilation of the two auricles synchronous with the contraction of the two ventricles.

உட னிகழ்தல், உடனிகழ்வு, see உட னிகழ்ச்சி.

உடனுறவு, உடனுறைவு, உடல் சம்பந்தம், புணர்ச்சி. sexual combination; the habitual coition or sexual intercourse of man and woman.

உடன் கட்டை யேறினவர், வயித்திய முப்பு, (in Medicine) a universal solvent prepared out of three kinds of salts as contemplated in Siddhar's science.

உடன் கட்டை யேறுதல், இறந்த கணவனுடன் மனைவியு முயிரோடு நெருப்பிற் குதித்தல், woman ascending the funeral pyre of her husband — Sati.

உடன் கூட்டு, ஒன்றாகச் சேர்த்தல், to unite or blend as is done with two or more ingredients in medicine.

உடன் கூட்டு சுண்ணம் அப்போது தாளித்த சுண்ணாம்பு, quick-lime reduced to powder afresh by mixing with water — Fresh slaked lime; 2. காரச் சுண்ணம், unslaked lime.

உடன் மறு, see உடற் றழும்பு.

உடு, ஆடு, sheep; 2. வெள்ளாடு, goat; 3. சீக்கிரி மரம், see உசில்.

உடு காட்டி, பொன்னாங் கன்னி, an edible plant with white or yellow flowers — Illecebrum sessile alias Alternanthera sessilis.

உடுக்கலாந் தண்ணீர், மேனாட்டு வாசனையுள்ள தண்ணீர். இது ஆங்கிலேய வார்த்தையி னின்று மருவி வந்த பெயர், a solution of fragrant oils to which either is also added — Eau de cologne or Cologne water.

உடுக்கலான், see உடுக்கலாந் தண்ணீர்.

உடுக்குச் சுருக்கம், உடம்பின் நடுவி லிருக்கும் உறுப்பினுடைய (அதாவது வயிறு அல்லது கருப்பையின் சுருக்கம், the contraction of an organ (as the stomach or the uterus) at or near the middle of the body — Hour-glass contraction.

உடுக்குதல், சீலை சுற்றல், to bind with a strip of cloth, as in dressing wounds.

உடுக்கைக் கொடி, வள்ளிக் கொடி, the creeper of the sweet potato plant — Dioscorea purpurea.

உடுக்கைச் சுருக்கம் மத்தியிற் சுருங்கல், See உடுக்குச் சுருக்கம்.

உடுக்கை மரம், கருங்காலி மரம், black wood — Acacia catechu (sundra)

உடுசி, see உசிலை மரம்.

உடுண்டகம், வாகை மரம், கருவாசை, fragrant acacia or red tamarind — Acacia marginata alias Mimosa marginata.

உடுண்டுகம், see உடுண்டகம்.

உடுத்திய யங்கை, பேய்ப் புடலை, wild snake gourd — Trichosanthes cucumirina alias T.laciniosa.

உடு நீர், அகழி நீர், ditch water.

உடு பதம், ஆகாயம், வானம், the sky.

உடு பதி, சந்திரன், the moon; 2. மர மஞ்சள், tree-turmeric — Coscinium fenestratum.

உடு பாதகம், பனை, palmyra palm.

உடு புட்பம், செவ்வரத்தை, a red species of galangal. See அரத்தை.

உடு போதகம், see உடு போதகி.

உடு போதகி, பேய்ப் பசளை, a wild and bitter species of Portulaca.

உடு போதகை, உடு போதம், see உடு போதகி.

உடுப்பாத்தி, ஓர் வகைச் சிறிய கடல் மீன், a small light green fresh-water fish — Etroplus suratensis.

உடுப்பை, சீக்கிரி மரம், see உசில்; 2. வைத்திய குரு தங்கி யிருந்ததாகச் சொல்லும் மலையாளத்தில் தலைச் சேரி யருகிலுள்ள ஒரூர், the name of a city on the Malabar coast near Tallichery, where the Guru or the teacher of the physicians originally lived; 3. நெய்ச் சிட்டி, Indian linden — Grewia orbiculata.

உடும்பரம், அத்தி *மரம்*, fig-trees — Ficus glomerata.

உடும்பிலை, நெடு *நாரை*, fragrant cherry nutmeg — Polyalthia fragrans.

உடும்பு, இது பல்லியினத்தைச் சேர்ந்தது. ஆனால் பெரிது, 3 அடி நீளம், இதன் வால் நீளம், வயிறு புடைப்பு, வாலினடிப் பாகம் களனதி, நுனியில் கூர்மை, இரட்டை நாக்கு, உடம்பு முழுமையும் சொர சொரப்பும், பளபளப்புமான செதில்களிருக்கும். இது ஆற்றோரங்களி லகப்படும். நன்றாக நீந்தும், அற்ப செந்துக்களைத் தின்னும். தண்ணீரில் வேகமாய்ப் போவது போல் நிலத்திலும் வேகமாகச் செல்லும். தண்ணீருக் குள்ளே மூச்சடக்கி வெகு நேர மிருக்கும். இது வாலால் அடிக்கும். இதை உப்புக் கண்டமிட்டு நெய்யில் வறுத்தும், இலேகியமாகவும் சய ரோகிக்குக் கொடுக்கலாம். இதன் கறி அதிக வலுவைக் கொடுக்கு மெனக் கருதப்படும். Waterlizard, Guana — Varamus bengalensis alias Sacerta Iquana.

This family belongs to the large species of lizards about 3 ft. in length. Tail long and round, thick at the commencement and tapering towards the end to a sharp point; fork tongued; the whole surface of the body is covered with rough shining scales, reflecting various colours in the sun-shine. They live in the neighbourhood of large rivers; excellent swimmers, feeding on small animals. Movements on land are as rapid as in water.

They are able to remain under water for a long time without the necessity for coming up for breathing. They have a peculiar habit of striking with their tails. Dried guana flesh fried in ghee or made into an electuary with ghee is given to consumptive patients. Flesh is relished, for it is supposed to be strength giving.

NOTE.— The representative species in Southern India is Banded water lizard — Varanus lunatus. The neck, the trunk and the tail of this creature are all marked with crossbands, but the sides and the legs are dotted white.

உடும்புக் கல், உடும்பி னுடம்பி லிருக்குங் கல், இது மருந்திற் குபயோகப்படும், a stone or calculus found inside the body of a guana. This is useful in medicines.

உடும்புக் காலி வரகு, ஓர் வகை *வரகு*, a kind of millet reaped in three months.

உடும்பு நாக்கன், பொய்யன், a liar.

உடும்பு நாக்கு, இரு *பிளப்பா யுள்ள நாக்கு*, the tongue of guana which is cleft into two parts — Bifid tongue.

உடும்புப் பிச்சு, உடும்பின் *பித்துப் பை*, the bile-duct of guana.

உடும்பு முத்து, உடும்பி னிடமாகப் *பிறந்த முத்து*, a pearl-like substance supposed to be derived from guana.

உடும்பு லேகியம், உடும்பி னிறைச்சியைக் கொண்டு தயாரிக்கும் லேகியம். இது உடம்பிற்கு வலிமையையும், தாது புஷ்டியையு முண்டாக்கும், an electuary prepared from the flesh of guana and prescribed by Veidyans for promoting strength and increasing semen.

உடும்பை, see **உசில்**.

உடு வேரகம், *காட்டு சீரகம்*, wild cumin — Vernonia anthelmintica.

உடை, வேல *மரம்*, acacia tree in general; **2.** குடை வேல், umbrella thorn — Acacia tomentosa alias Mimosa ebernea; **3.** *நீருடை மரம்*, silver thorned acacia — Acacia latronum; **4.** உடை வேல், arrow thorn tree — Acacia planifrons; **5.** கல்வேல், a variety of acacia; **6.** *கால்*, leg.

உடை கொல், குடை வேல், see **உடை**.

உடைக் கல், காவிக் கல், red ochre.

உடை சினை, *காம* இச்சையினால் அல்லது ஆசைப் பெருக்கத்தினால் உடையும் பெண்கள் கருப்பையி லிருக்கும் சினைகள், vesicles of De graaf — Vesiculae graafianae.

உடைச் சிட்டை, உடை உசில், silver thorn acacia — Acacia latronum.

உடைதல், தளர்தல், to be reduced in strength; to be debilitated; **2.** *பிளத்தல்*, to crack or split; **3.** கட்டி *யுடைதல்*, to burst open as an abscess or a boil does; **4.** *மலர்தல்*, to blossom as a flower does **5.** *சாதல்*, to die; **6.** *மனம்* சோர்வுறல், relaxed or wearied state of the mind; to be broken hearted; 7. கெடுதல், the state of being broken; **8.** தளர்வு, feebleness or debility of the body; **9.** *அழிதல்* as in இந்திரிய *முடைதல்*, becoming watery or vapid as semen does.

உடைதவப் புல், சோனைப் புல், guinea grass — Panicum maximum.

உடைத்தல், புண் அல்லது கட்டியை வுடைத்தல், to open a boil; **2.** தகர்த்தல், to break into pieces; **3.** பிளத்தல், to cause a fracture as of a skull.

உடைந்த வாய்ச் சிலந்தி, ஆழ்ந்த நீண்ட பிளப்புள்ள சிலந்தி, a deep and more or less linear form of ulcer — Fissured ulcer.

உடைந் தெழு காசம், கண்ணதிகமாய்ச் சிவந்து நீர் வடிந்து பீளை கட்டுவதுடன், கடைக் கண், நெற்றி, காது, உச்சி முதலியவிடங்களிற் குத்தல், வலியையு முண்டாக்கு மோர் வகைக் கண்ணோய், an eye disease characterised by inflammation of the eyes, muco-purulent discharge, shooting pain in the corner of the eye, forehead, ears, crown of the head etc.

உடைப்பு, தளர்வு, see உடைவு.

உடை மேற் புல்லுருவி, உடைவேலின் மேல் வளரும் புல்லுருவி, a parasitic plant found grown on arrow-thorn tree.

உடை மோகப் பச்சை, கதிர்ப் பச்சை, a plant with a fragrant smell.

உடையாக் கட்டி, முகங் காணாமலும், உடையாமலு மிருக்குங் கட்டி, an abscess which remains without pointing or breaking.

உடையாச் சிலந்தி, உடையாப் புண், உடையாத சிலந்தி அல்லது புண், a sore or ulcer not opened — Indolent ulcer.

உடை யுசில், see உடைச் சிட்டை.

உடை வாலக் கீரை, தண்டங் கீரை, garden green — Amaranthus biltum.

உடைவு, தளர்வு, weakness, debility.

உடை வேல், see உடை.

உட் கடுப்பு, உள் வலி, internal irritation. see அகக் கடுப்பு.

உட்கட்டு உடம்பி னுள்ளுறுப்புக்களி னமைப்பு, the structure of the internal organs of the body.

உட் கணு, மரத்தினுள் முளி, (In botany) the knobby or wart like prominences on the inner side of any plant or tree — Internal tuberosity; **2.** எலும்பி னுள்ளே யிருக்கு முளி, (In anatomy) an eminence on the inner side of a bone — Inner tuberosity.

It is opposed to புறக் கணு, external tuberosity. See also அகக் கணு.

உட் கண், ஞானக் கண், the eye of wisdom.

உட் கண்டம், கழுத்தி னுட் பாகம், the inner part of the throat.

உட்கரணம், see அந்தக் கரணம்.

உட்கரு, அந்தக் கரணத்தின் போக்கு. இவ்விரகசியத்தைக் குருவி னிடமாகத் தெரிந்து கொள்ளவும். (In philosophy) the ways of intellectual faculties of the mind. It is a secret which should be enlightened by a Spiritual Guru or teacher.

உட்கரு, பேய்ப் புடல், a wild snake-gourd — Trichosanthes laciniosa; **2.** முட்டையின் மஞ்சட்கரு, the yellow part of an egg — Yolk; **3.** விந்து, semen, as opposed to வெளிக் கரு, menstrual blood; **4.** கருப்பைக் குள்ளிருப்பது, அதாவது பிண்டம், (in Mantric science) that which is contained within the uterus, generally refering to a foetus three moths old.

உட்கருவான, கருக்குள் ளமைந்த, situated within the uterus — Intra uterine.

உட்கருவி, அந்தக் கரணம், which see.

உட்கல், அழுகல், to rot or decay; to putrify.

உட்கவிசு, வயிற்றைப் பற்றும் ஓர் பாண்டு, dropsy of the abdominal cavity — Ascites.

உட்கழுத்து, கழுத்தின் முன் பாகம், the front part of the neck; **2.** கழுத்தி னுட் பாகம், the inside of the throat. See உட் கண்டம்.

உட்கள்ளம், கட்டி அல்லது புண்ணி னுள்ளே யிருக்கும் விஷ வஸ்து, the hidden humour or matter in an abscess or boil.

உட்காங்கை, உட் சூடு, the latent caloric heat; **2.** உட் சுரம், internal fever.

உட்காந்தல், உட் சூடு, internal heat, as in fever of moderate intensity; **2.** உட்சுரம், fever not appreciable on the surface of the body — Calor internus.

உட்காய்ச்சல், உடம்பி னுள்ளே யடிக்குஞ் சுரம், சிலேட்டுமமும் பித்தமும் தொந்தித்து நிற்கையில் வாத மானது வயிற்றிற்குள் ளடங்குவதால் இச்சுரம் பிறக்கும். இதற்கு வடமொழியில் 'சந்த சுரம்'

என்று பெயர். internal fevel. It is due to the concerted action of the phlegm and the bile, while Vatha finds its lodgment in the abdomen. It is called 'Santhajuram' in Sanskrit. See உட்சுரம்; 2. அற்ப சுரம், slight fever.

உட்கிரந்தி, குடல், ஈரல், இருதயம் முதலிய வுள் ளுறுப்புகளி லுண்டாகு மோர்விதச் சீழ்க் கட்டி, a suppurating or festering tumour forming in any of the internal organs, such as intestines, liver, heart etc.

உட்கிராந்தல், அம்மை, சயம் முதலியவைகளினா லுடம்பினி லுண்டாகுங் கொதிப்பின் காரணமாய் நேரிடும் இளைப்பு, emaciation caused by intense heat in the system arising from small pox, tuberculosis, etc; 2. வெளிக்காட்டாமல் உடம்பி னுள்ளே பதுங்கி நிற்கும் சூடு, latent heat; 3. ஓர்வகை உட்சுரம், an internal fever — Febris leipyrias alias F.intestinalis; 4. வேரூன்றல், to become firmly rooted, as does a chronic disease. See உட் காந்தல்.

உட்குடைச்சல், உடம்பினுள் ளுண்டாகும் நரம்பைப் பற்றிய வோர் வலி, a neuralgic pain, affecting the nerves internally.

உட்குத்தல், கட்டி, பிளவை, சிலந்தி முதலியவைகளிற் காணும் ஊசியினால் குத்தினாற் போன்ற குத்தல் நோய், a deep-seated pricking pain in boil, carbuncle, ulcer etc; 2. உடம்பினில் ஊசியால் குத்தல், piercing through a part or organ of the body for purposes of injection.

உட் குத்து, உடம்பு காய்ந்து, வியர்த்து, பல் கிட்டி, நா வறண்டு, வாயு கீழ் நோக்கி, அன்னந் தண்ணீர் செல்லாது வருத்து மோர் குலையைப் பற்றிய நோய், a kind of tetanus from heart disease, marked by perspiration, lock-jaw, dryness of the tongue, passage of wind downwards, aversion to food and drink etc.— A kind of tetanus; 2. உடம்பினில் ஊசியால் குத்தி மருந்தை யுட் புகட்டுதல், the act of passing a liquid medicine into a part of the body — Injection; 3. உள்ளு றுப்புக்களைத் தாக்கும்படிக் கொடுத்த குத்து, a blow dealt so as to affect the internal organs.

உட் குத்துப் புறவீச்சு, அடுத்தடுத்துக் குத்த லுண்டாகி வுடம்பையும், கழுத்தையும் பின்னுக்கு வளைத்துக் குலையையும் பற்றித் துன்புறுத்து மோர் வகைச் சன்னி, a form of tetanus attended with lock-jaw, alternate pricking pain and contraction of the muscle of the back in which the patient is bent back like a bow. This is said to be a complaint originating in a lover. 2. ஈரலுக்குண்டாகும் ஓர் வகை இசிவு நோய், a kind of hepatic complaint attended with convulsions.

உட் குத்து வாதம், see உட் குத்து.

உட் குயிர், உள்ளுயிர், the Deity identified with the life or the soul of each individual; 2. பரமாத்துமா, (உயிரினுட் குயிராகி தாயு) the universal soul supposed to be inside the human soul.

NOTE.— The soul is said to be of two kinds and is differently termed viz.— the one is the life and the other is the soul or rather the outer and the inner souls called respectively ஜீவாத்மா and பரமாத்மா. The one is supposed to be inside the other.

But Pythagoras and Plato both divided the soul into two representative parts, independent of each other — the rational soul or the logan and the irrational soul or the alogan.

உட் குழி, நாவாய்க் குழி அதாவது யோனியின் உட்குழி, the cavity behind the vaginal aperture — Fossa navicularis; 2. இடுப்பெலும்பினுட் புறம், the inner part of the ilium — Venter.

உட் குறி, உள்ளிருந்து காட்டுங் குறி, the internal symptom.

உட் குற்றம், காமம் முதலிய குற்றம், the internal defects such as, the sexual passion etc.

உட் கூதல், வெளிக் காட்டாத குளிர் சுரம், a fever not appreciable on the surface of the body — Calor internes; 2. உடம்பி னுள் ளேற்படும் குளிர், internal cold; 3. அற்ப சுரம், slight fever.

உட்கை, உள்ளங்கை, the palm of the hand; 2. வலது அல்லது இடக்கைச் சுற்று, the inner side in the bending of the left or the right arm; 3. உட் கல், which see; 4. உட் பக்கம், the inner side of a thing; 5. உள்ளுளவு அதாவது உடம்பினுள் இரகசியப் பொருள், (In Philosophy) the unner secret.

உட் கைச் சுற்று, வலது அல்லது இடக்கைச் சுற்று, see உட்கை.

உட் கொண்ட விரணம், உள்ளுக்குள் புடை கொண்ட கட்டி அல்லது இரணம், an abscess with an internal swelling; 2. மேலெழும்பாமல்

உள்ளாகக் கரைந்த கட்டி, an abscess which disappears without pointing or breaking — Dry abscess.

உட் கொதிப்பு, உட் காய்ச்சல், a fever heat of moderate intensity and lower in degree than fervor and ardor — Calor.

See அகக் கொதிப்பு.

உட் கொள்ளல், புசித்தல், to take in, as of food or drink; 2. விழுங்கல், to swallow; 3. உள்ளிழுத்தல், to draw in, as is done with the tongue; 4. உள்ளுக் கிழுத்தல், to absorb; to draw inwards as of the tongue in paralysis.

உட் கொள்ளிக் கிரந்தி, மேகத்தினால் உடம்பினுள் காணும் கிரந்திப் புண், venereal or syphilitic ulcer on the internal organs of the body.

உட் கோடல், see உட் கொள்ளல்.

உட் சங்கம், விரணத்தின் அடி அல்லது ஆழமான பாகம், the bottom or the deep part of an ulcer.

உட்சங்கன், ஆழ்ந்த புண், an ulcer or deep sore; 2. கண் மடலின் உட் பக்கத்தி லிருக்கும் குருக்கள், pimples on the inner edge of the eye-lid — Granulation.

உட்சதை, உடம்பினுள் ளிருக்கும் சதை, the internal muscles of the body; 2. பழம், காய் முதலியவைகளி னுள்ளே யிருக்கும் சதைப் பற்று, the fleshy portion inside fruits etc.

உட்சமயம், சைவ ஆகமத்திற் சொல்லி யுள்ள வாமம் முதலிய ஆறு வகை சமயங்கள், the six systems of religious faiths considered orthodox by the Saivites, such as Vamam etc.

உட் சாடனம், தேய்த்தல், rubbing or anointing; 2. புண் ஆற விடல், causing a sore to fill up by healing it; a means of healing a sore.

உட் சிரிப்பு, வெளிக் காட்டாத சிரிப்பு, restrained laugh — Titter; 2. புன் சிரிப்பு, smile.

உட் சிலை, புண்ணிற்குள்ளேற்படும் புரை, sinus of an ulcer; 2. பவுத்திரம், a deep, narow, sinuous ulcer extending from the surface of the body with an internal cavity — Fistula.

உட்சிறைப் பேசி, தாடை அசைவுற வேண்டி வுட் புறத்திற் சிறகைப்போ லமைக்கப்பட்ட தசை, an internal muscle shaped like a wing intended for causing movements of the jaw — Internal pterygoid.

உட் சீலை, இரத்த ஒழுக்கு, பெரும்பாடு முதலிய நோய்களில் வெளி சீலையிற் படாமலிருக்க உடுத்தும் உள்ளாடை, the under wear or the inner garment worn by females suffering from hemorrhages to prevent soiling the outer garment.

உட் சீலை, புண் புரைகளுக்கு உள்ளே நுழைக்கும் காரச் சீலை, a caustic lint applied internally to sinuses or other internal cavities of wounds, cancer etc; 2. பெண்கள் மாதவிடாய் காலத்தில் வெளிப்படும் இரத்தத்தைச் சிந்தாதபடி ஏற்று கொள்வதற்கு யோனித் துவாரத்திற் புகட்டும் சீலைத் துண்டு. இதற்கு ருது சீலையென்றும் பெயர், a piece of dry cloth inserted into the vagina for receiving the discharge of the menstrual blood. It is also called the Menses cloth.

உட் சுகத்துவம், கிடை கொள்ளாமை, restlessness; uneasiness.

உட் சுரம், உடம்பினுள் சிலேட்டுமம், பித்தம் முதலியவைகள் பேதித்து வாதம் வயிற்றி லடங்குவதால் இராப்பக லிடை விடாமற் சுரங் காய்ந்து வயிறு வலித்து, உடல் வெளுத்து, மலம் வறண்டு, மயக்கம், தாகம் முதலியவைகளை உண்டாக்கு மோர் வகைச் சுரம், an internal fever marked by giddiness and thirst and accompanied by the following symptoms, viz., constant fever, colic pain, bloodlessness, constipation, giddiness, thirst, etc.

It is due to the deranged condition of phlegm and bile in the system and the consequent descent of Vatha into the stomach or the intestines.

See உட் காய்ச்சல்.

உட் சுவாசம், (உள் + சுவாசம்) உள்ளே யிருக்கு மூச்சு, internal breathing or inspiration. See உசு வாசம்.

உட் சூடு, உடம்பி னுள்ளே அடங்கி நிற்கும் சூடு, the heat which remains absorbed in the system without changing its temperature; 2. உடம்பினுள்ளே பரவி நிற்கும் சூடு, the internal heat spread throughout the body — Animal heat.

See அகச் சூடு.

உட் சூத்திரம், உட் குறிப்பு, internal symptom; 2. மூல காரணம், internal cause.

உட் செலுத்தல், உள்ளுக்குப் புகட்டல், to administer as a medicine is done; 2. உள்ளே புகுவித்தல், to thrust inside through

an opening; 3. உள்ளே உணவு கொள்ளும்படிச் செய்தல், to make a child or a patient take in food by force, threat or persuasion; 4. உடம்பினுட் பிரயோகித்தல், to inject.

உட் செல்லல், உட் போதல், to go into the system.

உட் சொக்காய், உட் பக்கத்தின் உறை, the inner coating of any organ — Tunica interna; 2. நரம்புச் சுவரி னுட்பக்கம், the internal coating of a nerve — Tunica intima.

உட்டண கட்டி, வேனிற் காலத்தில் உடம்பி னிற் கொதிப்புக் கண்டு பல விடங்களிலுங் காணு மிரத்தக் கட்டிகள், boils arising in several parts of the body during the summer season. It is said to be due to the warm condition of the blood — Heat boils.

உட்டண கழிச்சல், see உஷ்ண பேதி.

உட்டண காசம், உடம்பிற் கொதிப்புக் கண்டு அதனாற் காணு மோர்வகைக் காச நோய், a kind of asthma said to arise from excessive heat in the body; 2. உடம்பின் சூட்டினால் காணும் ஓர்விதக் கண்ணோய், an affection of the eye or the eyes due to excess of heat in the system.

உட்டண காய்ச்சல், இரத்தக் கொதிப்பினாலேற்படுங் காய்ச்சல், fever arising from the heated condition of the blood or excessive heat in the system — Thermic fever.

உட்டண சஞ்சீவி, உடம்பினிற் தங்கி நிற்கும் வெப்பத்தைக் கழிக்கு மோர் மருந்து, a medicine purging out or otherwise eliminating the excessive heat from the body; 2. தண்ணீர், water as subsiding heat; 3. பிரண்டை, square-stalked vine — Vitis quadrangularis.

உட்டண சயித்தியம், உடம்பி லேற்பட்ட வெப்ப மிகுதியா லுண்டாகும் சீதளம், a symptom of cold as a result of excessive heat in the body; 2. சூடு அல்லது காரமான பண்டங்களைச் சாப்பிடு வதனாலேற்படும் சீதளம், cold due to taking hot or pungent foods.

உட்டண சைத்தியம், see உட்டண சயித்தியம்.

உட்டண நோய், உடம்பின் கொதிப்பினா லேற்படும் நோய்கள், diseases in general, caused by excessive heat in the body; 2. வெயிலின் கொடுமையினா லேற்படும் நோய்கள், diseases arising from excessive heat or heated air during summer.

உட்டணம், சூடு, heat; 2. வெப்பம், warmth; 3. மிளகு, black pepper; 4. தினை, millet; 5. இரத்தத்தின் வெப்பம், the heat of the blood; animal heat; 6. சூரிய வெப்பம், intense heat of the sun.

உட்டண வாதக் கிராணி, உடம்பின் கொதிப்பினால் வாயு பிரகோபமடைந்து அதனாலேற்படும் கழிச்சல், a chronic diarrhoea arising from the aggravated condition of Vayu due to the excessive heat of the body.

உட்டண வாயு, உடம்பிற் சூடதிகரித்துச் செரியாமையினா லேற்படும் வாயு, flatulence arising from indigestion caused by excessive heat in the body; 2. பித்த வாயு, இது ஆமாசயம், அக்கினி யாசயம், பக்குவாசயம், மலாசயம், யகிர்க் கண்டம், பீலிகம், அதாவது வயிறு, சிறிய குடல், அபானம், ஈரல், கல்லீரல், மண்ணீரல் முதலிய சீரண வுறுப்புக்கள் தத்தம் தொழில்களில் மாறுபா டடைவது, முதலியவைகளினாற் பிறக்கும், indigestion arising from the derangement of bile in the system. It is due to the impairment of the power or functions of the various organs such as, the stomach, the small and the large intestines, the rectum, the liver, the spleen, etc.

உட்டண வாயு, பேதி, உஷ்ண வாயுவினா லுண்டாகும் கழிச்சல். இதனாற் சதத்துடன் மலங்கழியும், ஆசனக்கடுப் புண்டாகும், a form of diarrhoea marked by noisy passing of stool, and irritation of the anus. It is said to be due to flatulency from the aggravated condition of Vayu — Flatulent diarrhoea.

C.f. உட்டண வாதக் கிராணி.

உட்டண வியாதி, see உட்டண நோய்; 2. வெள்ளை, gonorrhoea supposed to be caused by venereal heat in the body.

உட்டணாசகம், குளிர் காலம், cold season.

உட்டணித்தல், வெப்பங் கொள்ளல், to be come hot.

உட்டணோதகம், (உட்டண + உதகம்) வெந்நீர், hot or warm water.

உட்டணோபகமம், வேனிற் காலம், summer season.

உட்டாகம், (உள் + தாகம்) உள் வறட்சி, internal thirst as in diabetic patients.

உட்டி மரம், தேள் கொடுக்கி, a plant. See உட்டிரம்.

an opening; 3. உள்ளே உணவு கொள்ளும்படிச் செய்தல், to make a child or a patient take in food by force, threat or persuasion; 4. உடம்பினுட் பிரயோகித்தல், to inject.

உட் செல்லல், உட் போதல், to go into the system.

உட் சொக்காய், உட் பக்கத்தின் உறை, the inner coating of any organ — Tunica interna; 2. நரம்புச் சுவரி னுட்பக்கம், the internal coating of a nerve — Tunica intima.

உட்டண கட்டி, வேனிற் காலத்தில் உடம்பி னிற் கொதிப்புக் கண்டு பல விடங்களிலுங் காணு மிரத்தக் கட்டிகள், boils arising in several parts of the body during the summer season. It is said to be due to the warm condition of the blood — Heat boils.

உட்டண கழிச்சல், see உஷ்ண பேதி.

உட்டண காசம், உடம்பிற் கொதிப்புக் கண்டு அதனாற் காணு மோர்வகைக் காச நோய், a kind of asthma said to arise from excessive heat in the body; 2. உடம்பின் சூட்டினால் காணும் ஓர்விதக் கண்ணோய், an affection of the eye or the eyes due to excess of heat in the system.

உட்டண காய்ச்சல், இரத்தக் கொதிப்பினாலேற்படுங் காய்ச்சல், fever arising from the heated condition of the blood or excessive heat in the system — Thermic fever.

உட்டண சஞ்சீவி, உடம்பினிற் தங்கி நிற்கும் வெப்பத்தைக் கழிக்கு மோர் மருந்து, a medicine purging out or otherwise eliminating the excessive heat from the body; 2. தண்ணீர், water as subsiding heat; 3. பிரண்டை, square-stalked vine — Vitis quadrangularis.

உட்டண சயித்தியம், உடம்பி லேற்பட்ட வெப்ப மிகுதியா லுண்டாகும் சீதளம், a symptom of cold as a result of excessive heat in the body; 2. சூடு அல்லது காரமான பண்டங்களைச் சாப்பிடு வதனாலேற்படும் சீதளம், cold due to taking hot or pungent foods.

உட்டண சைத்தியம், see உட்டண சயித்தியம்.

உட்டண நோய், உடம்பின் கொதிப்பினா லேற்படும் நோய்கள், diseases in general, caused by excessive heat in the body; 2. வெயிலின் கொடுமையினா லேற்படும் நோய்கள், diseases arising from excessive heat or heated air during summer.

உட்டணம், சூடு, heat; 2. வெப்பம், warmth; 3. மிளகு, black pepper; 4. தினை, millet; 5. இரத்தத்தின் வெப்பம், the heat of the blood; animal heat; 6. சூரிய வெப்பம், intense heat of the sun.

உட்டண வாதக் கிராணி, உடம்பின் கொதிப்பினால் வாயு பிரகோபமடைந்து அதனாலேற்படும் கழிச்சல், a chronic diarrhoea arising from the aggravated condition of Vayu due to the excessive heat of the body.

உட்டண வாயு, உடம்பிற் சூடதிகரித்துச் செரியாமையினா லேற்படும் வாயு, flatulence arising from indigestion caused by excessive heat in the body; 2. பித்த வாயு, இது ஆமாசயம், அக்கினி யாசயம், பக்குவாசயம், மலாசயம், யகிர்க் கண்டம், பீலிகம், அதாவது வயிறு, சிறிய குடல், அபானம், ஈரல், கல்லீரல், மண்ணீரல் முதலிய சீரண வுறுப்புக்கள் தத்தம் தொழில்களில் மாறுபாடடைவது, முதலியவைகளினாற் பிறக்கும், indigestion arising from the derangement of bile in the system. It is due to the impairment of the power or functions of the various organs such as, the stomach, the small and the large intestines, the rectum, the liver, the spleen, etc.

உட்டண வாயு, பேதி, உஷ்ண வாயுவினா லுண்டாகும் கழிச்சல். இதனாற் சதத்துடன் மலங்கழியும், ஆசனக்கடுப் புண்டாகும், a form of diarrhoea marked by noisy passing of stool, and irritation of the anus. It is said to be due to flatulency from the aggravated condition of Vayu — Flatulent diarrhoea.

C.f. உட்டண வாதக் கிராணி.

உட்டண வியாதி, see உட்டண நோய்; 2. வெள்ளை, gonorrhoea supposed to be caused by venereal heat in the body.

உட்ட ணாசகம், குளிர் காலம், cold season.

உட்டணித்தல், வெப்பங் கொள்ளல், to be come hot.

உட்ட ணோதகம், (உட்டண + உதகம்) வெந்நீர், hot or warm water.

உட்ட ணோபகமம், வேனிற் காலம், summer season.

உட்டாகம், (உள் + தாகம்) உள் வறட்சி, internal thirst as in diabetic patients.

உட்டி மரம், தேன் கொடுக்கி, a plant. See உட்டிரம்.

உட்டிரம், தேட் கொடுக்கி, Indian turnsole — Helotropium indicum; *2.* **செவந்தி,** Indian chamomile — Chrysanthemum coronarium; *3.* முட் **செவந்தி,** a variety of Indian chamomile rose flower.

உட்டுளை, நாசியின் உள் துவாரம், a hollow space inside communicating with the nose; *2.* புண் புரை, a cavity in an ulcer or a sore containing pus — Sinus.

உட்டுளை பாய்தல், புரை யோடல், formation of a sinus.

உட்டெளிவு, வடித்த நீர், a clear liquid separated from the sediment; *2.* உள் **வயிரம்,** the hard portion in the centre of timber; *3.* வடித்த சாறு, filtered or decanted juice.

உட்டேலனம், நரி மிரட்டி, a shrub — Crotolaria verrukosa.

உட்டோலுக் குரிய, மீததோலுக் கடியிலுள்ள தோல் சம்பந்தமான, sub-cutaneous.

உட்டோல், மீத்தோலுக் கடியிலுள்ள சரியான தோல், the true skin below the epidermis — Corium or dermis; *2.* உட் சவ்வு, the inner membrane.

உட் பகை, காமம், desire, lasciviousness; *2.* மனத் தாறுபகை, the six emotions of the mind which tend to corrupt and taint one's soul, see அகத்தாறு பகை; *3.* மனத்தினுள் ளொருவர் மேற்பகை கொள்ளல், internal grudge.

உட்படுத்தல், உட் செலுத்தல், to thrust in, as is done with a gauze through a wound or injury.

உட் பத்தியம், அகப்பத்தியம் அதாவது மருந்துண்ணுங் கால் பெண்போகம் விலக்கல், abstinence from sexual intercourse while taking medicine; *2.* மருந்து சாதனை பண்ணும் காலத்தில் கொள்ளும் பத்தியம், the diet followed during the period of taking medicine. It is opposed to புறப் பத்தியம், the one observed after finishing the course. See மறு பத்தியம்.

உட் பலம், உடம்பின் பலம், bodily strength; *2.* ஆண்மை, vital strength; *3.* உள் வலிவு, potential energy in the body; *4.* அக வலிமை, reserve strength in the body; potent power.

உட் பற்று, see அகப் பற்று.

உட் பாய்ச்சல், உள்ளே மருந்தைப் புகட்டல், (lit throwing in) the act of passing a liquid or a liquid-medicine into a part, such as the rectum or a blood - vessel — Injection.

உட் பிரசவம், கருவழிதல், abortion.

உட்புகல், உடம்பி னுள்ளே போதல், entering the body.

உட் புண், உள்ளாக விருக்கும் ஆறாப் புண், an internal or deep seated ulcer; *2.* உள்ளவயவத்தி லேற்படும் புண், inflammation of internal organs; *3.* புரைப் புண், a sore with a sinus.

உட் புரை, புண்ணுள்ளே ஓடும் புரை, see உட்டுளை, *2.* உள் மடிப்பு, inner folds as in fruits and flowers; *3.* கண் தோலின் உட்புரை, the inner layer of the membrane covering the eye.

உட் புளகம், மயிர்க் கூச்சிடல், hair of the body on ends through joy or rapture.

உட் புறம், உட் பக்கம், the inner side of a thing.

உட் புறம்பாதல், உட்பக்கம் வெளிப்பக்க மாதல், assuming a reverse position or the turning inside out etc. as in inversion of the womb.

உட்புற வுறுப்புகள், உடம்பி னுள்ளே யிருக்கும் நுரையீரல், தாமரைக் காய், கல்லீரல், இரைப்பை முதலியன, the internal organs of the animals such as, the lungs, the heart, the liver, the stomach and the other viscera.

உஷணம், மிளகு, pepper.

உஷணா, யுனானி முறையி லுபயோகிக்கு மோர் மூலிகை. இது வோர் படர் கொடி. எல்லாச் செடிகளிலும், மரங்களிலும் படர்ந்திருக்கும், கயிரைப்போ லிருக்கும். இலைகள் இராது. நிறம் கருப்பு, சிறிது கசப்பு, வாசனையா யிருக்கும். உலர வைத்துக் கடைச்சரக்காக விற்பார்கள், a drug mostly used by Unani doctors. It is a spreading creeper resembling a rope found commonly on all plants and trees and will be destitute of leaves. It is black in colour and bitter to the taste. It is dried and sold as a bazaar medicine.

உஷபம், ஆமணக்கு, castor plant — Ricinus communis.

உஷம், விடியற் காலம், day - break.

உஷா, விடியற் காலை அதாவது சூரிய உதயத்திற்கு நான்கு கடிகை முற்பட்ட காலம், early morning; i.e., 4 x 24 minutes before sunrise; day-break; *2.* குங்கிலியம், bdellium;

3. உப்பு மண், saline earth; 4. ஓர் தாது உப்பு, fossil.

உஷை, இரவு, night; 2. காலை, morning; 3. மாலை, evening.

உஷ்ண கணம், உடம்பில் சூட்டை யுண்டாக்கு மருந்து, a medicine developing heat in the system; . அதிக வெப்பத்தினால் குழந்தைகளுக் கேற்படு மோர் விதக் கண நோய், a wasting disease in children due to excessive heat in the system.

உஷ்ண கப கரி, கக்கரி, a species of cucumber — Cucumis sativus.

உஷ்ண காசம், உடம்பின் கொதிப்பினா லேற்படும் காச நோய், asthma arising from excessive heat in the system.

உஷ்ண காரி, உடம்பின் சூட்டை அதிகப்படுத்து மருந்து, a drug of heat-making potency — Calorigenic medicine; 2. உத்தீபன மருந்து, an agent or remedy which produces a quickly diffused and transient increase of vital energy in the bodily system — Stimulant. See also உட்டண கணம்.

உதரா சயம், பாசக நீர் பிறக்குமிடம் அதாவது வயிறு, the organ where the gastric juice is secreted i.e., the stomach; 2. இரைப்பை, குடல் முதலிய வுறுப்புக ளமைந்தவிடம், abdominal region containing stomach, intestines, etc.

உதராடம், வயிற்றில் உலாவல், wandering in the bowels; 2. வயிற்றி லுலாவும் ஓர் வகைப் புழு, a species of worm wandering in the bowels.

உத ராத்துமானம், வயிற்றுப் பிசம், puffing up of the belly; flatulence.

உதராந்தர சுழற்சி, குடல்களிலிருந்து மண்ணீரல், கல்லீரல் வழியாய்ச் சுற்றி இருதயத்திற்குள் ளோடும் இரத்த வோட்டம், the circulation or passage of the venous blood from the intestines, the spleen, the liver etc., to the heart.

உதரா மயம், கிராணி, chronic diarrhoea; 2. வயிற்றுளைவு, dysentry; 3. வயிற்றின் வியாதிகள், diseases in general of the abdomen.

உத ராவர்த்தம். (உதரம் + ஆவர்த்தம் = வயிற்று ளுள்ள சுழி. Stomach-coil) கொப்பூழ், the navel; 2. (உதரம் + ஆவர்த்தம்) வயிற்றினில் நீரைப் பொழிவது, அதாவது நீர்க்கவிசை, an accumulation of serous fluid in the abdominal (peritoneal) cavity — Ascites; 3. திட்டுக் கட்டு, suppression of menses.

உதராவி, மர மஞ்சள், tree turmeric - Coscinium fenestratum.

உதரா வேட்டம், வயிற்றிலுள்ள கிரிப் பாம்பு, an intestinal worm or the common round-worm - Ascaris Lumbricoides; 2. நாடாப் பூச்சி, tape - worm.

உதரி, கருங் கடலை, black bengal gram - Cicer Arietinum; 2. கருப்பிணி, a pregnant woman; 3. பெரு வயிறுடைய பெண், a woman with a large belly; 4. பெருந்தீனி தின்னும் பெண், a woman addicted to voracious eating.

உதரிகம், பருத்த வயிறு, a large belly; 2. பருத்த வுடம்பு, corpulency.

உதரியா, குடலுட்பட்ட வயிறு, stomach including bowels.

உதர்ச்சி, நெருப்பு, fire.

உதர்தம், மிக்க அரிப்பும், வீக்கமும், விரணக் குறியு முடைய வோர் விதப் படை நோய் a skin disease marked by itching followed by swelling and ulceration.

உதர்த்தம், அக்கி நோய், herpes, see அக்கி; 2. தொத்து சுரம், an infectious or a contagious fever.

உதவகன், நெருப்பு, fire; 2. கொடி வேலி, ceylon leadwort - Plumbago zeylanica; 3. தீமுறிப் பூண்டு, an unknown plant supposed to neutralise the effect of heat.

உதவாகனம், உதவாசனம், மேகம் (lit) a seat of water i.e., a cloud.

உதவாத் தேன், கள்ளிச் செடியி னருகிற் கட்டிய தேன், இது வைத்தியத்திற்கும் கண்ணோய்க்கு முதவாது, honey from the honey-comb found near Kalli, a plant of the Euphorbia genus. This kind of honey is prohibited in medicine and also as an application in cases of eye - diseases.

உத விந்து. நீர்த்துளி, a drop of water.

உதளிப் பனை, கூந்தற் பனை, bastard sago Caryola urens.

உதளை, காட்டு மா, jungle mango — Cerbera odellum.

உதள், ஆடு, Sheep, 2. வெள்ளாடு, goat; 3. ஓர்வகை மரம், a kind of tree (unidentified); 4. ஆட்டுக் கடா, the male sheep.

உதறல், see உதறுதல்.

உதறி, வெற்றிலை, betel

உதறி முறித்தான், விஷ்ணு கரந்தை, Vishnu basil - Sphoeranthus indicus.

உதறி முறிப்பான், (உதறி + முறிப்பான்) உடம்பிலுண்டாகும் உதறல் அல்லது நடுக்கலை முறிக்குந் தன்மை யுடைய பூண்டு அதாவது விஷ்ணு கரந்தை, a plant, Vishnu sweet basil - Sphoeranthus hirtus. It is capable of curing the shivering of the body through cold and fever. It grows only in dry and hot places.
See உதறி முறித்தான்.

உதறு காலி, காலை உதறி நடப்பவள், a woman who flirts her feet while walking.

உதறு சன்னி, கை கால்களில் நடுக்கங் காணு மோர் வகை சன்னிபாத சுரம், a kind of typhoid fever attended with shaking or trembling of the limbs; 2. உடம்பில் நடுக்க முண்டாகி, வியர்த்துச் சித்தப் பிரமையை யுண்டாக்கு மோர் வகைச் சன்னி, a variety of delirium marked by trembling, excitement, mental distress and sweating.

உதறு சுரம், குளிர் சுரம், an intermittent fever accompanied by cold or chillness and shivering (rigor) — Ague; 2. விஷ சுரம், malarial fever.

உதறுதல், நடுக்கல் trembling; 2. குளிர் பயம், கோபம் முதலியவற்றால் கை கால் உடம்பு நடுங்கல், shivering as of one's hands, feet, or body through fear, anger etc; 3. நோயினாலேற்படும் நடுக்கம், an involuntary trembling through diseases — Tremor.

உதறு வலி, சுவரணை மாறாது, கை கால் அல்லது உடம்பு நடுக்கங் காணும் ஓர் வகை வலிப்பு, convulsion marked by shaking of limbs or of the body as a whole with no loss of consiousness.

உதறு வாதம், நடுக்கு வாதம், இந்நோயானது நாள் தோறும் சீதன பண்டங்களையே புசிப்பதனால் வாயு வானது பாதங்களில் அனுசரித்து அப் பாதங்களை நடக்கும் பொழுது கத்திரி மாறலாக ஒன்றோடொன்று அடித்துக் கொள்ளச் செய்யும். அன்றியும் துடையில் வலியும் மயக்கமும் உண்டாகும். கடைசியாக வுடம்பு முழுவதும் பரவி நடுக்கத்தை யுண்டாக்கும். a nervous disease late in life, marked by a peculiar gait in which one foot is passed in front of the other producing a cross legged progression like the movements of a pair of scissors and a muscular contraction, causing peculiar characteristic positions of the limbs. The disease is attended with extreme pain in the thighs and giddiness. In advanced stages, it affects the whole body, causing tremor. It is due to the deranged condition of Vayu arising from errors in diet and finding its lodgement in the extremities of the body.
See அங்க சலன வாதம்.

உதறு வாயு, உடம்பில் வாயு கோளா றடைந்து நரம்பைத் தாக்கி, அதனா லுண்டாகும் நடுக்கம், இது சிறு வயதில் மிகுதியாக காணும், a convulsive nervous disease with involuntary and irregular jerking movements. It is due to the deranged condition of Vayu and affects more frequently persons in early life - Chorea.

உதன்னியம், நீர்த்தாகம், thirst for water.

உதா, நீக்கல், to expel; 2. துரத்தல், to drive out.

உதா கர்ப்பாசயம், கருப்பச் சிதைவு, abortion.

உதாசம், வெளித்தள்ளல், throwing out or casting out.

உதாசலம், உரல், a vessel in which substances are pounded - Mortar.

உதாசனம், கொடி வேலி, ceylon leadwort-Plumbago zeylanica; 2. நெருப்பு; fire.

உதாசனன், கண் குத்திப் பாம்பு, இது பச்சை நிறமாதலால், இலைகளின் மத்தியிலிருப்பது எளிதில் காணப் படாது, a green whip-like snake found in trees — Whip snake. It is generally not visible among the leaves owing to its green colour; 2. கொடி வேலி, see உதாசனம்; 3. நெருப்பு, fire.

உதாசினன், பற்று அற்றவன், one who has neither desire nor affection for anything; 2. தத்துவ ஞானி, a stoic pholosopher (in popular acceptance); 3. துறவி, a religious mendicant or a medicant of a particular order.

NOTE.— Stoic is one of the sects of Greek Philosophers who followed the teaching that men sould strive to be unmoved by joy or grief, and submit without complaint to fate, regarding virtue alone as the highest good.

உதாம் பரம், செம்பு, copper.

உதா ராக்கசம், நோயை யுண்டாக்கும் ஓர் பேய், a demon that causes diseases.

உதா வணி, சுண்டங்காலி, see உதரவணி.

உதா வர்த்தம், சாதாரணமாகக் கீழ்நோக்கிச் செல்லுந் தன்மை யுள்ள குடலுக் கேற்பட்ட அசைவு மேல் நோக்கிச் செல்லல், a condition in which the worm-like movement of the intestines which naturally extends downwards to propel their contents, becomes altered and takes a reverse course — Anti-peristalsis; 2. குதம், மூத்திர மார்க்கம், முதலியவற்றால் வெளிவர வேண்டிய மல மூத்திராதிகளை அதற்கு விரோதமாக மேல் நோக்கி இழுத்துப் பிடிக்கு மோர் வாயு, suppression of stools, urine etc, from passing through the natural openings due to the reflex inhibition from some diseases of the intestial tract — Iliac passion or Ileus.

உதாவர்த்த யோனி, பெண்களுக்கு அல்குலில் மிகுந்த வலியையும் அம் மார்க்கத்தில் நுரைத்த இரத்த வொழுக்கையு முண்டாக்கு மோர் நோய், a painful mentrual discharge with foamy blood - Vaginismus.

உதா வர்த்த வாதம், மலம், மூத்திரம், முதலியவைகளை அடக்குவதாலும், மந்தத்தையும், மலபந்தத்தையு முண்டாக்கும் பண்டங்களை உண்பதனாலும், வாயு அடி வயிற்றிற் றங்கி, அதனால் குடலுக்குரிய தன்மை யிழந்து, மல மூத்திரங்களை இழுத்துப் பிடிக்கும் வாத நோய். அப்போது அடிவயிறு கனத்து, நோவு, உப்பல், மல சலக் கட்டு முதலிய குணங்கள் உண்டாகும். Obstinate constipation of the bowels arising from reflex inhibition due to suppression of stools, urine etc. It is so called from its origin from the repression of any natural urging, such as hunger, thirst, respiration, sleep etc.

It is chiefly due to the deranged condition of Vayu arising from food and causing dullness of appetite, constipation etc. It is characterised by heaviness of the abdomen, pain, flatulence, swelling etc.

உதா வர்த்தனம், குடல் நோய், suffering from diseases of the bowels.

உதானதம், மேல் மூச்சு விடல், to breathe upwards; to breathe out.

உதான பிராணாவரணவாதம், see உதான பிரா ணாவிருத வாதம்.

உதான பிரா ணா விருத வாதம், உதான வாயு வானது பிராண வாயுவை ஆவரணமாகச் சூழும் போது, தேக நிறம், ஒளி, பலம் முதலியவைகள் குறைந்து காணப்படு மோர் நோய், a nervous disease caused by the vital Udana (controlling the digestive function) encircling the Prana. It is marked by change of complexion, of beauty and of strength.

உதானம், கண் மடல், eyelid; 3. கொப்பூழ், the navel; 3. கண்டத்தில் நிற்கும் தசவாயுவி லொன்று, one of the ten vital airs having origin in the cervical region and controlling the functions of the digestive organs. See உதான வாயு

உதான வாயு, மார்பே யிடமாகக் கொண்டு, நாசி, கண்டம், தொப்புள் ஆகிய விம் மூன்றிடங்களில் உலாவிப் பேச்சுக்கு முதற் காரணமாயும், உடம்பிற்கு நிறம், ஒளி, நினைப்பு ஆகிய விக் குணங்களையு முண்டாக்கும் தசவாயுவி லொன்று. இது ஊர்த்துவ முகமாக ஒலியை யெழுப்புவதாலிப் பெயருண்டாயிற்று. இது, உண்ணும் உணவின் இரசத்தை இரத்தமாக மாற்றி நாடிகளிற் செலுத்தி இன்னும் அவ்விடத்திற்குரிய செயல்களுக் கெல்லாம் காரணகர்த்தாவாக விருந்து கொண்டு உடலை வளர்க்கும்.

(In HIdu Pathology) one of the ten vital airs (nerve-currents) originating in the navel region and having its seat in the thorax and from there extending all over the upper parts of the body, such as the head, the face, the neck etc. It is by this vital air that one can speak or utter sounds. It lends complexion and lustre to the body and also enables one to think. It is the most important of the vital Vayus, and courses or sends its vibrations upwards, It forms the chief agent in promoting digestive functions and converting the chyle into blood, and in controlling the activities of organs and lastly in helping towards the development of the body.

NOTE. — 1. In its deranged state it brings on diseases in the region above the clavicles. It is identical with the energy of the nerve-centre which is situated in the speech - centre and is the same as the energy of the Motor and the Sensory nerves.

NOTE. — 2. Prana pervades the whole body and keeps all the parts alive working. It has different designations in reference to the functions it performs.

ஆயுள் வேதப்படி நெஞ்சிலும் அதற்கு மேலுள்ள கண்டத்திலும் முகத்திலும் அநுசரித்து அவ்வுறுப்புகளின் செயல்களுக்குக் கர்த்தாவாக இருக்கும். இது ஐந்து வித வாயுக்களில் ஒன்றாகக் கருதப்படும். (In Ayurveda) a nerve current controlling the lungs and the upper part of the body. It is one of the five vital airs (that which is in the throat and rises upwards) of the human body.

உதானன், see உதான வாயு; **2.** கண் மயிர் eye-lash; **3.** ஓர் பாம்பு, a kind of snake; தொப்புள், the navel.

உதானன் திசை, வாய் விளங்கம், worm - killer - Embelia ribes (berries of).

உதி, உதித்தல், to be born; to come into existence; **2.** ஒதிய மரம், Indian ash tree — Odina wodier; **3.** கடலாத்தி, falcate trumpet flower — Dolichandrone falcata; **4.** உளுந்து, black gram; **5.** இழைக் கட்டு, any layer of the body with an aggregation of cells - Tissue; **6.** வித்தை, Science; **7.** உலைத் துருத்தி, metal workers' bellows; the bellows of the forge; **8.** வித்தை, science.

உதிக வதம், உடம்பின் நுட்பமான பகுதியிலுள்ள இழைகளின் அமைப்பையும் அதன் பாகு பாட்டைப் பற்றியும் கூறும் நூல், that branch of science or knowledge dealing with the minute structure and composition of the tissues — Histology.

உதிச்சியம், வெட்டிவேர், a fragrant root; Indian spikenard — Andropogen aromaticus.

உதிகன், பிறந்தவன், one who is born.

உதித்தல், பிறத்தல், to be born; **2.** பருத்தல், to swell or increase in size; **3.** ஊதல் to bloat as in dead bodies; **4.** உண்டாதல், to appear as does wisdom; **5.** தோன்றல், coming into existence.

உதிப்பு, பிறப்பு, birth; **2.** வீக்கம், swelling; **3.** ஞானம், wisdom.

உதிய மரம், ஒதி மரம், see ஒதிய மரம்.

உதியம்பால், ஒதிய மரத்தின் பால், the essence of the odina tree — Odina wodier.

உதிர காசம், see இரத்த காசம்.

உதிர கிரி, இரத்த வேங்கை மரம், Indian dragon's blood — Pterocarpus marsupium.

உதிர குன்மம், see இரத்த குன்மம்.

உதிர கோமதம், பாலேடு, the richer part of milk which rises and forms a layer on the surface — Cream.

உதிர கோமாரி, see இரத்த கோமாரி.

உதிரக் கடுப்பு, see இரத்தக் கடுப்பு.

உதிரக்கட்டி, see இரத்தக் கட்டி; இரத்தம் தங்குவதா லேற்பட்ட கட்டி, an abscess of effused blood — Hematoma; **2.** இரத்தங் சொரிவதா லேற்பட்ட கட்டி, an abscess containing extravasated blood — Hematopostema.

NOTE. — It may also mean Aneurysma sac formed by the dilatation of the walls of an artery and filled with blood.

உதிரக் கட்டு, இரத்தம் வெளி வருவதை நிறுத்தல், stoppage of hemorrhage; **2.** சூதகம் வெளிப்படாது தடை படல், suppression of the menstrual discharge; **3.** கருப்பவழுக்கு வெளிப்படாமை, suppression of lochial discharge in cases of women after child-birth; **4.** பூப்படாமை, the state of being without attaining maturity; **5.** இரத்தக் கட்டி, coagulation of blood; clot of blood.

உதிரக் கணம், see இரத்தக் கணம்

உதிரக் கலப்பு, இரத்தக் கலப்பு, relation by blood.

உதிரக் கல், இரத்தக் கல், blood stone or oriental jasper — Heliotrope. See இரத்தக் கல்.

உதிரக் கவிச்சு, see இரத்தக் கவிச்சு.

உதிரக் கழலை, இரத்தம் தங்கிய கழலைக் கட்டி, a tumour containing effused blood — Hematoma; **2.** இரத்தக் கழலை, a sac formed by the dilatation of the walls of an artery and filled with blood — Aneurysm.

உதிரக் கழிச்சல், see இரத்தக் கழிச்சல்.

உதிரக் கழிவு, கருப்பையி னின்று பிரசவித்த பெண்களுக் குண்டாகும் அழுக்குப் போக்கு, the lochial discharge after child birth — Lochia; **2.** மாதாந்த ருதுப்போக்கு, discharge of menstrual blood.

உதிரக் கற்கனன், சிலாமத பாஷாணம், a kind of mineral poison, prepared out of bitumen.

உதிரக் கனல், see இரத்தக் கனப்பு.

உதிரக் கிரகி, இரத்தத்தை உறிஞ்சும் அட்டை, blood - sucker - Leech; 2. கரடி, Bear.

உதிரக் கிரந்தி, see இரத்தக் கிரந்தி.

உதிரக் கிராணி, see இரத்தக் கிருமி.

உதிரக் குடோரி, கருடன் கிழங்கு, Indian birthwort - Aristolochia indica.

See ஆகாச கருடன் கிழங்கு.

உதிரக் குறைவு, உடம்பி லேற்படும் இரத்தக் குறைவு, want of blood in the system, deficiency in the volume of blood — Oligemia.

உதிரக் கொதி, see இரத்தக் கொதிப்பு

உதிரங் களைதல், இரத்தங் குத்தி யெடுத்தல், abstraction of blood from the system by venesection — Blood letting.

NOTE.— It is done by cupping, scarification and leaching.

உதிரங் காணல், இரத்தத் தோற்றம், appearance of blood as a symption of any disease; 2. பூப்படைதலினாற் காணும் இரத்தக் குறி, appearance of blood as a symptom of puberty or menstruation; 3. இரத்தக் கழிவு, oozing of blood as from a boil or a wound.

உதிர சலை, இரத்தப் பெருக்கு, copious . discharge of blood — Hemorrhea; 2. இரத்தங் கக்குதல், the spitting of blood — Hemoptysis.

உதிர சன்னி, உடம்பி னின்று எக்காரணத்தினாலாவது இரத்தம் மிகுதியாக வழிதலினாலுண்டாகு மோர் வகை சன்னி, collapse arising from excessive bleeding through any cause.

உதிர சீடம், தலை மண்டையி னுட் பக்கத்திலுள்ள சவ்விற் காணு மோர் இரத்தக் கழலை, a tumour or swelling filled with blood beneath the pericranium — Cephalematoma; 2. உச்சந்தலைத் தோலிற் காணு மோர் இரத்த நீர்ப்பை, a blood cyst on the scalp.

உதிர சூலை, இரத்த சூலை, அதவாது பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் கருக் குழியில் நோயினால் குத்தல் கண்டு, இரத்தம் கட்டி கட்டியாக வெளிப்படும் நோய், a menstrual disorder accompanied by pain of a very acute and darting character and a discharge with the passage of clots of blood (or membranous shreds) until the discharge ceases; Painful menstruation — Dysmenorrhea.

உதிரச் சிக்கல், கருக் குழி நோயினால் மகளிர் சூதகம் தடைபட்டு யோனியிலும் கருப்பையிலும் நிற்றல், accumulation of menstrual blood in the vagina and the uterus — Hematocolpometra; 2. பிரசவித்த பெண்களுக்குக் கருக் குழியி னின்று அழுக்கு வாராது தடைபடல், suppression of the lochial discharge after child birth; 3. மாதாந்த ருது முழுவதும் வெளிப்படாமலும் அல்லது சிறிது வெளிப்பட்டும் காலப்படி வாராமலும் தடைபடல், a condition in which the mestrual discharge is interrupted or delayed either through diseases of the womb or by mechanical obstruction and does not occur at the proper time — Amenorrhoea.

உதிரச் சிலந்தி, see இரத்தச் சிலந்தி.

உதிரச் சுருக்கி, (உதிரச்சி + உருக்கி) இரத்த மண்டலிப் பூடு, see இரத்த மண்டலி.

உதிரச் சேலை, பெண்கள் மாதவிடாய் காலத்தில் இரத்த வொழுக்கை யேற்றுக் கொள்வதற்காக வுபயோகப் படுத்தும் சீலைத் துண்டு, இதை மாந்திரீகத்தில் உபயோகப்படுத்துவதுண்டு a piece of cloth used by women during their menstrual period as absorbent of the discharge of menses. It is said to be very useful in the art of magic.

உதிரஞ் சாய்தல், இரத்தப் பெருக் குண்டாதல், copious discharge of blood — Hemorrhage.

உதிரஞ் சுண்டல், இரத்தம் வற்றல், diminishing of blood in the system through disease or old age.

உதிர தோஷம் இரத்தம் நஞ்சுத் தன்மையடையவதனா லேற்படும் நோய்கள் அல்லது கெட்ட குணங்கள், evil symptoms arising from blood - poisoning — Septicemia.

உதிரத் தலைவலி, இரத்தப் பெருக்கினால் கண்ணெரிச்சல், மூர்ச்சை முதலியவைகளோடு கூடிய வோர் வகைத் தலைவலி, headache marked by burning sensation of the eyes and swooning, due to excess of blood in the head — Heperemic headache.

NOTE.— A feeling of tension in the head similar to this, is also felt in plethora.

உதிரத் தாக்கு, இரத் தாசயத்தின் தொழிலை அனுசரித்து நாடிகளி லிருக்கும் இரத்தத்திற்கு ஏற்படும் நெருக்கம், the pressure of blood on the walls of the arteries' dependant on the energy of the heart's action — Blood - pressure.

உதிரத் தானம், இரத்தம் தங்குமிடம் அதாவது இரத்தக் குழல்கள், blood - vessels.

உதிரத் திரட்சி, see இரத்தத் திரட்சி.

உதிரத் துடிப்பு, இரத்தக் கலப்பைச் சேர்ந்த வுறவினர்களுக்காகப் படுந் துயரம், a painful feeling experienced on behalf of blood relations. See also இரத்தத் துடிப்பு.

உதிரத் தெறிப்பு, இரத்த சம்பந்தமான வுறவு, blood relationship.

உதிரத் தோய்வு, இரத்தம் உறைதல், coagulation of blood.

உதிர நரம்பு, இரத்த நரம்பு, blood - vessel

உதிர நாடி, இரத்த நாடி, artery.

உதிர நாட்டம், இரத்தப் பாய்ச்சல், rush of blood to a part - Afflux.

உதிர நாளம், see இரத்த நாளம்

உதிர நிறத்தி, கட்டுக் கொடி, a creeper — Smilax pseudo-china; 2. இரத்தம் போற் சிவப்பான வஸ்து, anything as red as blood; blood - red.

உதிர நிறம், மாங்கிஷச் சிலை, see ஈரற் கல்.

உதிர நீர், see இரத்த நீர்.

உதிர நோய், see இரத்த நோய்.

உதிர பந்தம், மாதுளை, pomegranate — Punica granatum; 2. இரத்தம் வராது நிற்றல், arrest of bleeding — Hematischesis.

உதிர பந்தனம், see இரத்த பந்தனம், and உதிரக் கட்டு.

உதிர பயம், இரத்தத்தைக் கண்டு பயப்படுமோர் நோய், morbid dread of the sight of blood — Hematophobia.

உதிர பாசம், இரத்த பாசம், the tie of blood; attachment between relations.

உதிர பானம், நோய் குணப்படுவதற்காக இரத்தம் குடித்தல், the drinking of blood as a therapeutic measure — Hemotoposia.

உதிர பித்தம், see இரத்த பித்தம்.

உதிரப் படலம், see இரத்த படலம்.

உதிரப் பரவல், see இரத்தச் சுழற்சி.

உதிரப் பாடு, இரத்தப் பாடு, bleeding — Hemorrhage.

உதிரப் பிரிவு, see உதிரத் தெறிப்பு; 2. இரத்தத்தின் கூறுபாடு; analysis of blood — Hemaanalysis.

உதிரப்பூச்சி, see இரத்தக் குருகடம்; 2. ஓர் நோய், a kind of disease; 3. இரத்தத்தில் காணப்படும் பூச்சி, bacillus found in blood.

உதிரப் போக்கு, see இரத்தப் போக்கு; 2. நாளா வட்டத்தி லிரத்த மிழத்தல், gradual loss of blood from the system — Hematozemia.

உதிர மண்டலம், see இரத்த மண்டலம்; 2. இரண்டு பக்கத்திலும் இரத்தம் வளையமிட்டு நிற்கும் நிலை, a condition in which the blood circulation is complete.

உதிர மண்டலி, see இரத்த மண்டலி

உதிர மல நாசனி, மலத்தில் இரத்தம் விழுவதை நிறுத்தும் பிரமிப் பூடு, a plant capable of curing blood streaked stools — Gratiola monieri; 2. இரத்தத்தி லிரா நின்ற அழுக்குகளைப் போக்கு மருந்து, drug capable of removing the impurities in blood - Blood purifier.

உதிர மலம், மலத்தோடு விழும் இரத்தம், blood in the feces — Hemafecia.

உதிர மாகாளி, ஓர்வகை வௌவால், காக்காய் விரிச்சி. இது சுண்டெலி நிறத்தைப் போல் நீலமும் வெண்மையும் கலந்திருக்கும். உடம்பின் கீழ் மஞ்சள் கலந்த சாம்பல் நிறமாயிருக்கும். மூக்கு நீளம், காதுவரை பரவி நிற்கும். சாதாரணமாய்ப் பாழடைந்த மண்டபங்களிலும், கோயில், குகை, வீட்டின் பரணை, முதலிய விருள் சூழ்ந்த விடங்களிலும் இதைக் காணலாம்.

இது மற்ற வௌவா லினங்களைப் பின் தொடர்ந்து அவைகளின் காதின் பக்கம் தன் மூக்காற் குத்தி இரத்தத்தை யுறிஞ்சி இரையாகக் கொள்ளும். அன்றியும், தவளை, மீன் முதலியவைகளையும் தின்னும். காக்கை இதைக் கண்டாற் பயப்படு மாதலால் இதற்குக் 'காக்காய் விரிச்சி' யென்றும் பெயர். a kind of bat with a nose either simple or complicated. It is called the Vampire bat of the Vampyridae family — Megaderma lyra. It is of slaty blue or of white mouse colour and yellowish ashy

beneath. Nasal appendage is large, reaching to the base of the ears with a fold down the centre.

It frequents old dilapitated buildings, temples, caves, roofs of houses and other dark places.

It sucks the blood of other bats. fixing on them behind the ears, sucking the blood and then devouring the body. It also eats frogs and fish. The crow is afraid of it and hence it is also called the 'crow's terror'

NOTE.— The other Indian species of this family are:- (1) Allied leaf bat — Shinolophus afiinis most abundant on the West Coast. (2) Rhinolophus leaf bat — Rhinolophus (found near Tellicherry) (3) Indian horse shoe bat — Hipposideras apiculatus (4) Little horse shoe bat — Hipposideras murimis alias H. fulvus. (5) Long tailed leap bat — Rhinopoma hardwieki found in clefts of rocks.

உதிர மாடன், இரவில் தம்முடன் கலந்து புணர்ச்சி செய்யும் பாவனையாய்க் காண்பித்து விந்துவை வெளிப்படுத்தி உடம்பை இளைக்கச் செய்யும் ஓர் பைசாச நோய், a disease brought about by the influence of a devil. It is characterised by nocturnal emissions and consequent emaciation and weakness. It is due to an imaginary feeling of having sexual intercourse with a woman during sleep. (In Occult science) a dead person believed in some countries to have a kind of unnatural life, so as to be able to leave the grave during nights and suck the blood of living persons while they were asleep — Vampire.

உதிர மாற்றம், உடம்பினி லிருக்கும் சுத்த இரத்தம், காரி ரத்தமாக மாறுதல், change of arterial into venous blood; 2. ஒரு உடம்பினின்று மற்றொரு உடம்பிற்குச் சுத்த இரத்தத்தை மாற்றல், the transfer of blood (arterial) from one person to another — Arterial Transfusion; 3. மருந்திட்டு இரத்தத்தின் தன்மையை மாற்றுதல், a change brought about by the introduction into blood - vessels of any medicine or other substance such as, a saline solution injected to a cholera patient.

உதிர முமிழ்தல், புப்புச உதிரசலை அதாவது புப்புசத்தினின்று உதிரம் கக்குதல், the spitting of blood from the lungs — Hemoptysis.

உதிர முறிப்பான், see உதறி முறிப்பான்.

உதிர மூலம், see இரத்த மூலம்; 2. ஓர் செடி, an unknown plant.

உதிர மூறல், இரத்தமுண்டாதல், formation of blood — Hemapoiesis.

உதிரமேகம், see இரத்த மேகம்.

உதிர மோடிய, இரத்தம் செல்லத்தக்க அல்லது இரத்தமுடைய Conveying or Containing blood - Sanguiferous.

உதிரம், இரத்தம், blood

உதிரம் சாய்தல், see, இரத்தப் பெருக்கு.

உதிரம் சுண்டல், see இரத்தஞ் சுண்டல்

உதிரம் சுண்டிடல், see உதிரம் சுண்டல்

உதிரம் பரவல், இரத்தச் சுழற்சி, circulation of blood

உதிரம் பொசிதல், இரத்தம் வடிதல், flowing of blood; 2. இரத்தம் கசிதல், oozing of blood; 3. இரத்தம் வெளிப்படல், discharge of blood - Bleeding.

உதிரம் போக்கி, உடம்பினின்று இரத்தத்தை, நோய், சூதகம் முதலிய காரணங்களினால் வெளிப்படுத்தும் மருந்து, any medicine or agent that promotes the discharge of blood from the system either from diseases or from menstruation or other causes — Hemagogue.

உதிர ராகதம், இரத்தச் சிவப்பு, a brown substance in the blood forming hemoglobin — Hematin.

உதிர ரோகம், இரத்தக் கேட்டினா லுண்டாகும் நோய், any disease due to the deranged condition of blood; 2. இரத்த மிகுதியாலும் அல்லது இரத்தக் குறைவாலும் ஏற்படும் நோய், a disease due to either want or excess of blood in the system; 3. பெண்கள் சூதகக் கேட்டினா லேற்படும் நோய்கள், diseases arising from menstrual disorders.

உதிர ரோம வேங்கை, பட்டையை வெட்டினால் இரத்தத்தைப் போல் தாரை தாரையாய் வழியும் ஓர் வகை வேங்கை மரம், a tree which exudes resin resembling blood in colour from its bark, See உதிர வேங்கை.

உதிரல், உதிர்ந்த பூ, fallen flower.

உதிர வண்ட வாதம், பீசத்தில் இரத்த மிறங்கி வீங்கிப் பருத்துக் காணு மோர்வித அண்டவாதம், effusion of blood into the tissues of the scrotum — Hematocele.

உதிர வமனம், இரத்த வாந்தி, vomiting of blood — Hematamesis.

உதிர வர்ண, இரத்த நிறமான, of a bloody tinge — Sanguinolent.

உதிர வர்ணம், இரத்த நிறம், blood (red) colour.

உதிர வர்ணி, இரத்தத்திற்குச் சிகப்பு நிறத்தைக் கொடுக்கு மோர் வஸ்து, the colouring matter of the red blood - corpuscles. It is a reddish crystalline compound of complex composition — Hemoglobin.

உதிர வன்னி, செங்கோடிவேலி, rosy flowered leadwort of fire plant — Plumbago rosea.

உதிர வாதம், see இரத்த வாதம்; 2. நரம்பின் அதாவது நாளத்தின் துவாரங்களி லோடப் பெற்ற இரத்தம் தடை படுவதனால் இந்நோய் பிறந்து, கை கால் கில்கள், அல்லது மற்றக் கில்களில் வாதம் தங்கி, கண்டு கண்டாகக் கட்டிக் கொண்டு, வீக்கம், வலி, தலைவலி முதலிய துன்பங்களை யுண்டாக்குமோர் வித வாத நோய். இது சாதாரணமாய் ஆண் பிள்ளைகளுக் குண்டாகும். இதற்குச் சோணித வாதம் அல்லது சூலைக்கட்டு என்றும் பெயர். a form of arthritis of rheumatic origin marked by severe pain and the formation of inflammatory nodules in the region of the joints and especially in the limbs of the body.

It is said to arise from the deranged and aggravated condition of Vayu which finds lodgment in the joints, due to the obstruction caused to the venous blood — Nodose rheumatism. This generally attacks men and is due to serveral causes such as, gonorrhoea, syphilis, etc.

உதிர வாயு, சூதக வாயு, கருக் குழியில் வாயுவும் சூடும் சேருவதால் மாதவிடாய் தடைப்பட்டுத் திரண்டு கருக்குழி தூர்ந்து, அடிவயிற்றில் வலி கண்டு உடம்பும் வயிறும் பருந்துக் காணு மோர்வகைச் சூதக நோய். defective menses arising from flatulency. It is a disease of the womb due to the accumulation of deranged Vayu and heat in it. It is marked by suppression of menses, diminution of the uterus, pain and swelling of the abdomen, and corpulency.

See also இரத்த குன்மம்.

உதிர வாழை, ஓர்வகை சிவப்பு வாழை; செவ்வாழை, red banana — Musa sapientum rubra.

உதிர விஷ முறிப்பு, இரத்தத்திற் தங்கி நின்ற விஷச் சத்துக்களை முறித்தல், the ridding of toxic substances from the blood. This is now done by injection — Blood - lavage.

உதிர விந்து, இரத்தங் கலந்த விந்து, bloody semen.

உதிர விரியன், இரத்த விரியன் பாம்பு, blood viper, see இரத்த விரியன்.

உதிர வெட்டை, see இரத்த வெட்டை.

உதிர வேங்கை, ஓர்வகை வேங்கை மரம், இது சுமார் 40 முதல் 80 அடி வரையில் உயரும். பூக்கள் வெளிரிய மஞ்சள் நிறம், மழைக்காலத்தில் பூர்க்கும். காடுகளில் மிகுதியாய் வளரும், இம்மரம் மிக்க வுபயோகமானது. பட்டையை வெட்டினால் தாரை தாரையாக இரத்தம் போன்ற பால் வடியும்.

இது காசுக் கட்டியைப் போலவே மருந்திற் குபயோகப்படும். ஆனால் குணத்தில் சிறிது சாந்த முள்ளதால் குழந்தைகளுக்கும் மெலிவுற்ற பெண்களுக்கும் பிரயோகிக்கலாம். East Indian Kino alias Indian dragon's blood — Pterocarpus marsupium. The tree grows from 40 to 80 ft; flowers pale yellow; flowering in the rainy season. It is found in forests and sometimes cultivated in gardens, being one of the most valuable of timber trees. Reddish gum - resin *(குக்குல்)* exudes from the bark and it is known as Malabar Kino, and it consists of dark, blackish-red, angular fragments.

NOTE.— The Malabar Kino is an article of export from the time of East India Co. It is prepared here for the European Market. It is a substitute for British dragon's blood and botany-bay kino. It is known in the South Indian markets as காண்டா மிருக ரத்தம் (Rhinoceros blood)

உதிர வேங்கைப் பால், உதிர வேங்கைப் பிசின், மரத்தின் பட்டையை வெட்டி அதனின்று வரும் பாலைப் பாத்திரத்தில் பிடித்து வெயிலிற் காயவைத் தெடுப்பார்கள். இதைத்தான் 'குக்குலு' என்பார்கள். இது பெட்டியி லடைத்துச் சீமைக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

A reddish gum-resin exuding from the bark of kino-tree. It is extracted

by making incisions in the trunk at the foot of which is placed a vessel to receive the out-flowing juice; this juice thickens and when it is sufficiently dried by exposure to the sun and the air, it is packed in wooden boxes for exportation from Indian markets as Guggulu *(குக்குலு)*

உதிர வொழுக்கு, see இரத்த வொழுக்கு.

உதிரன் வாழை, ஓர் வாழை, white-streaked leaved banana — Musa sapientum vittata.

உதிராதி கரணம், திரட்சி, congestion.

உதிரா முரி, (உதி + அமுரி), இரத்தங் கலந்த மூத்திரம், discharge of bloody urine — Hematuria.

உதிரா வர்த்தம், தீட்டுக் கட்டு, suppression of menses; 2. இரத்தம் பொழிவது, extravasation of blood.

உதிரி, ஓர்வித வாழை, see உதிர வாழை; 2. பெரிய அம்மை, a kind of small pox in which the scabs fall off; 3. குரு, a pustular eruption; 4. செவ் வாழை, red banana — Musa sapientum (rubra); 5. துளசி, holy basil — Ocimum sanctum; 6. சிறு கீரை, pig's green or field spinach — Amaranthus campestris; 6. பிட்டு, a connection made of rice flour mixed with sugar and cocoanut.

உதிரிக் குத்து, பெரியம்மை கண்ட பின் பால் சுரந்து கொண்டு, குத்தலை புண்டாக்கும் நோய், a pin prick pain of the pustules in small pox; 2. பெரியம்மை காணுமுன் ஏற்படும் உடம்புக் குத்தல், aching pain incident to small pox.

உதிரிதம், see உதிர நிறத்தி.

உதிரித் தழும்பு, பெரியம்மை வார்த்து உதிர்ந்த தழும்பு, pits or marks left after the fall of scabs in small pox.

உதிரி நோய், காப்பான், infantile eczema characterised by scales of shed epithelium — Eczema squamosum.

உதிரிபுறப்படல், உடம்பில் குரு எழும்பல், to have eruptions on the body.

உதிரி மாரி, ஓர் வித அம்மை, see உதிரி; 2. ஓர் மரம், a tree?

உதிரி மிண்டி, சுரைக்காய், bottle gourd — Curcurbita lagenaria.

உதிரீ, see உதிரி

உதிரும் பழம், இலந்தை, Indian apple — Zizyphus jujuba.

உதிர், முத்தக் காசு, the fragrant root of a plant; straight sedge tuber — Cyperus juncifolius.

உதிர் காய், சொரி காய், காற்றடித்து உதிர்ந்த காய், blasted fruit; 2. குலையி னின்று பிரிந்த காய், fruit shaken off from a bunch.

உதிர் காலம், இலையுதிர் காலம், a season of the year during which leaves fall off from trees — Autumn.

உதிர் கோலகம், கம்மாறு வெற்றிலை, a dark and thick species of betel — Piper betel.

உதிர்க் கிடாரி, கருடன் கிழங்கு, see உதிரக் குடோரி.

உதிர் சம்பம், பழுத்து உதிர்ந்த எலுமிச்சை, a ripe lime fallen or dropped off the tree.

உதிர் சருகு, மரத்தினின்று காய்ந்து விழுந்த இலை, the dried leaves dropped off the tree.

உதிர்தல், காற்றினால் மரத்தி னின்று பிரிந்து விழுதல், to be blasted or shaken off by the wind and dropped off the trees, as is the case with those of leaves, fruits etc., 2. அம்மைப் பக்குக் காய்ந்து விழல், a falling off as do scabs from pustules in small pox; 3. சொட்டுச் சொட்டாய் விழல் *(கண்ணீர்)* to drop down as do tears; 4. பிரிந்து விழல், to fall in small pieces; crumbling; 5. சாதல், to die.

உதிர்த்தல், கண்ணீர் உகுத்தல் to shed tears; 2. பொடி செய்தல் அல்லது தூளாக்கல், to pulverise; 3. வீழ்த்தல், to knock out, as teeth.

உதிர்ந்த சருகு, காய்ந்த இலை, withered leaves which have fallen.

உதிர்ந்து விழல், பிரிவடைந்து விழுதல், to fall off as hairs do from the head, scales from an itch, and so on.

உதிர் பன்னீர், பன்னீர் மரம், dew - flower — Guettarda speciosa.

உதிர்ப் பகம், சவுக்கு மரம், Casuarina tree — Casuarina equisetifolia.

உதிர் மணல், புதை மணல் quick sand; 2. சிற்றிர முள்ள மணல், loose and moist sand.

உதிர் வேங்கை, see உதிர வேங்க ..

உதீசம், குறுவேர், வெட்டி வேர், a fragrant root — Andropogon aromatica.

உது, மேல், upward as in **உதானன்,** that which is proceeding upwards.

உது கதி, வாந்தி செய்தல், vomiting.

உதம் பரகம், see, **உதும் பரம்.**

உதும்பரக் குட்டம், உடம்பு முழுவதிலும் செம்புள்ளிகளை யுடைய ஓர் வகைக் குட்டம். இது இரத்தத்தில் உதிக்கும் பூச்சிகளால் ஏற்படுவதாகச் சொல்லப்படும், a species of leprosy with copper spots all over the body. It is said to be caused by a kind of germ supposed to be generated in the blood — Membrum virile.

உதுரம்பர சிதம், கொட்டிக் கிழங்கு, an eatable root of an aquatic plant of the Nymphae family — Aponogeton monastachyon.

உதும்பர பரணி, காட்டாமணக்கு, wild croton — Croton Polyandrum; **2.** சிவப்புக் காட்டாமணக்கு, red physic nut — Baliospermum Axillave.

உதும்பரம், அத்தி மரம், fig tree — Ficus glomerata; **2.** எருக்கு, Madar — Calotropis gigantea; **3.** செம்பு, copper — Cupram; **4.** செவ்வகத்தி red - flowered West Indian pea-tree; — Coronilla coccinea; **5.** உதும்பரக் குட்டம், which see; **6.** பேயத்தி, wild fig — Ficus oppositifolia; **7.** அத்திப்பழம், the fruit of Ficus glomerata; **8.** சீமையத்தி அல்லது தேனத்தி, Hebrew teenah or European fig tree — Ficus carica.

உதும்பர், அத்தி மரம், see **உதும் பரம்.**

உதும்பை, see **உதும்பர்.**

உதூகலம், உமி முதலியவற்றைப் போக்கும் படியான ஒரு பாத்திரம் அதாவது உரல், a vessel for pulverising or pounding to remove the husk from grain etc.— Mortar.

உதே பலம், பலசாலி, பலவீனன் ஆக இருவரும், both the strong and the weak.

உதை, see **உதைத்தல்**

உதை கால் பசு, பால் கறக்கும் போது உதைக்கும் பசு, a cow that kicks when milked.

உதைத்தல், நடுங்குதல், to shiver with cold; **2.** அடித்தல், to beat or strike; **3.** காலால் உதைத்தல், to srike with or kick with the foot or the feet; kicking.

உதைத்துக் கொள்ளல், குளிரால் நடுக்கங் கொள்ளல் to shiver with cold; **2.** பயத்தினாற் நடுக்கங் கொள்ளல், to tremble with fear; **3.** வலிப்பு அல்லது இழுப்பினால் கை கால் உதைத்துக் கொள்ளல், violent and irregular motion of the limbs through fits.

உதைப் பளவு, நொடிப்பொழுது, a moment.

உதைப்பு, நடுக்கம் shaking, tremor, concusion; **2.** உதைக்கை, the act of kicking; **3.** பயம், fear.

உதைய மலை, சிலா நாகக்கல், Zinc ore; a mineral. It is classified in Tamil medical science as one of the 120 kinds of minerals and natural substances.

உதையம், செருப்படை, a low spreading plant grown in the fields — Coldenia procumbens.

உதை யரவிக் கஞ்சி, பச்சைக் கருப்பூரம், crude camphor.

உதையவன் பால், எருக்கன் பால், the milky juice of Madar or Sun plant — Calotropis gigantea.

உதைய வாளிதம், கொத்தான், green thread creeper — Cassytha filiformis.

உதை யுண்ணல், காலால் உதை படல், to be kicked.

உதை யுண்ணி, காலால் உதைபடுபவர், one who is repeatedly kicked.

உதோதரம், (உது + உதரம் = மேல் வயிறு) பெரு வயிறு, big stomach; **2.** மகோதரம் swollen abdomen.

உதோன் முகம், மேன் முகம், the upper part of anything.

உத், மேல், up; **2.** மேலே, upwards; **3.** இனின்று, away from; it may also imply publicity, pride, weakness, existence, etc.

உத் கடம், இலவங்கம், clove; **2.** மிகுதி, much; **3.** பேய்க்கரும்பு, நாணற் தட்டை முதலியன, wild sugar cane — Saccharum sara, or reeds of similar kinds such as, Nanal, Buffalo reed etc.

உத்கடிகை, யோகாப்பியாசத்தில் ஓர் வகை ஆசனம், a way or manner of sitting or a kind of posture in yoga practice (the legs outstretched and forming a right angle.)

உத் கண்டகம், ஓர் நோய், a kind of disease; 2. ஆசை யுண்டாக்கல், exciting desire.

உத் கண்டகிதம், மயிர்க் கூச்செரிதல், the short hair on the body standing erect on end through joy or emotion.

உத் கந்தம், ஓர்வித சுரத லீலை, a kind of sexual union; 2. காம விகாரம், longing for the beloved person; lasciviousness; 3. கழுத்து நிமிரல், having the neck uplifted; 4. மோகங் கொள்ளல், to be inspired with tender emotion.

உத் கம்பம், உதரல், trembling; 2. திடுக்கிடல், shuddering.

உத்கரிகம், ஓர் வகை மிட்டாய், a kind of sweet meat.

உத் கரிஷம், கடினமான வஸ்துவால் உடம்பைத் தேய்த்தல், rubbing the skin with a hard substance.

உத் கருஷி, பிரசவ காலத்தில் குழந்தையைக் கருப்பை யினின்று கிளப்பி வெளிப் படுத்துவதற்காக வுபயோகப்படுத்து மோர் கருவி, a curved instrument used in midwifery for bringing out the child from the womb — Forceps.

உத்கலிகம், மொக்கு, a bud; 2. பூவா மலர், an unblown flower.

உத் காசம், பிரதி வருஷமும் கன்று போடும் பசு, a cow calving every year.

உத் காசனம், இருமி விடல், coughing up; 2. காரல், clearing the throat of mucous; 3. சளி கக்கல், expectorating.

உத் காதம், காய முண்டாக்கல், inflicting a hurt; 2. சுவாசித்தல், breathing through the nostrils.

உத்கார சிலேட்டுமம், மலம் கட்டுப்பட்டு வயிறு கல் போலாகி, மாறாத ஏப்பம், வாந்தி, தலைவலி, உடம்பு வலி, முதலிய கெட்ட குணங்களை யுண்டாக்கு மோர் சிலேட்டும நோய், a phlegmatic disease marked by rigid abdomen through constipation, constant bleching, vomiting, head ache, bodily pain and other symptoms.

உத் கார குடகம், ஓர் பறவை, a species of bird.

உத்காரம், ஏப்பம், belch; 2. வாயினாற் கக்கல், ejecting through the mouth; 3. வாந்தியெடுத்தல், vomiting; 4. எதிர்க் களிதல், eructation.

உத்காரிகம், மாக்கட்டு, poultice.

உத்காரிகை, சிறு கொழுக்கட்டை முதலிய வெந்த பண்டங்கள், confections made out of rice flour and sugar; Porridge - like preparations used as food; 2. களி, a pulpy and massive poultice-like food./

உத்காரினம், வாந்தி யெடுத்தல், vomiting; 2. கக்கல், ejecting; forcibly coughing out.

உத் கிரணம், see உத் காரினம்.

உத்கிரம், இறத்தல், to pass away; to die.

உத் கிராந்தி, see உத்கிரம்.

உத் கிலேசகம், ஓர் விஷப்பூச்சி, a kind of venomous insect.

உத் குடம், மல்லாந்து படுத்தல், lying stretched out on the back; lying with the face upwards; sleeping with the head turned up skywards.

உத் குரோசம், அழும் அன்றில் பட்சி, a nightingale which weeps for its mate.

உத்கோட ரோகம், எச்சிற் தழும்பு, a kind of ring-worm; 2. தேமல், yellow spots on the skin — Macula.

உத் கோதம், உடம்பின் மேற்றோலின் நிறம் மாறிப் புள்ளி புள்ளியாகத் தழும்புகள் ஏற்படும் ஓர் வகைக் குட்டம், a kind of leprosy characterised by spots of skin -pigmentation — Hepra maculosa.

உத் சர்ச்சனம், மலந் தள்ளல், expelling the feces.

உத் சற்பனம், வீக்கம், swelling.

உத் சிரீடம், பெறல், to bring forth; 2. உண்டாக்கல், to produce.

உத் சுரோதசம், மேனோக்கிய சீவ வோட்டம், having the flow of life or current of prana upwards.

உத் சேதம், உடம்பு, body; 2. உயரம், height.

உத் சொற்பனம், தூக்கத்தில் பிதற்றல், to talk in one's sleep.

உத் சேபம், வாந்தியெடுத்தல், vomiting; 2. கன்னப் பொறி, the region above the temples.

உத் தங்க முடி, ஆமை, tortoise.

உத்தனாதிப் பூண்டு, விஷத்தாரி, விடதாரி, smooth volkameria — Cleodendron inerme. See சங்கங் குப்பி.

உத்தண்ட சிகா, குருஞ் சூலி, toon tree — Cedrela Toona. See அகச் சூலி.

உத் தண்டம், வலிமை, strength; robustness.

உத்தண்ட வாசி மூலி, ஆதொண்டை, which see

உத் தந்தம், மாட்டுப்பல், large tooth; 2. எடுப்பான பல், projected tooth.

உத்தபா ரோகம், ஆண் குறியில் இரத்த பித்தத்தினால் சிறியதும் பெரியதுமான விரணங்கள் உண்டாகி எரிச்சலும் காணும் ஓர் நோய், a disease of the penis marked by small and big ulcers attended with burning sensation due to the aggravated bile invading the blood in the system — A form of condyloma.

உத்தப்தம், காய்ந்த தோல், a dry skin; 2. உலர்ந்த மாமிசம் அல்லது உப்புக் கண்டம், dried meat or seasoned meat.

உத்தம, மிக உயர்ந்த, Highest; 2. உயர்தரமான, uppermost; 3. மிகச் சிறந்த, best or excellent.

உத்தம கங்கை, நவச்சாரம், sal ammoniac — Ammonia hydrochlorate.

உத்தமக் கிரியை, வெற்றிலை மிகவும் அருந்தித் தானாகவே சிரித்துக் கொண்டு நினை வில்லாமற் பேசி, மனிதரை விட்டுப் பிரிந்திருக்கும் ஓர் மனோ வியாதி, a mental affection characterised by excessive chewing of betels, self-smiling, talking without consciousness and seclusion of desire for solitude.

உத்தம சத்து, அவுபல பாஷாணம், a kind of native arsenic; one of the thirty - two kinds of mineral poisons contemplated in Tamil medicine.

உத்தம சத்துகம், see உத்தம சத்து.

உத்தம சன்மம், உயர் பிறப்பு, exalted or elevated birth, said of Saints and Sages.

உத்தம சேவகன், வீரம், corrosive sublimate — Mercuric chloride. It is so called from its serving a useful purpose in Alchemy and Medicine.

உத்தம தாளி, வேலிப் பருத்தி, Hedge-cotton; stinking swallow wort — Daemia extensa, See உத்தா மணி.

உத்தம தேசி, பெண்களின் நான்கு வகை சாதியி லொன்றாகிய அத்தினி சாதி, the lowest of the four classes of women characterised according to their lust.

உத்தம பரி, கொத்து மல்லி யிலை, the leaves of coriander plant — Coriandum sativum.

உத்தம பலம், முந்திரிகை பழம், the fruit of the cashew-nut tree — Anacardium occidentalis; 2. மேம்பட்ட வல்லமை, remarkable strength.

உத்தம பலா, வெள்ளை நாகணம், true croton oil plant — Croton tiglium.

உத்தம பலினி, ஊசிப் பாலை, needle-leaved swallow wort — Oxystelma esculentum.

உத்தம பாலன், உத்தம பாலா, கொட்டை முந்திரிகை, see உத்தம பலம்.

உத்தம புருடன், நற்குண நற்செய்கை யுடை யோன். a man of sterling qualities and good deeds; 2. சாமுத்திரிகா லட்சணம் வாய்ந்தவன், a person possessing beauty, and well-proportional and symmetrical body with handsome features; 3. மகிமை வாய்ந்த புருடன், a man of great virtue such as, a Siddhar, or a Gnani etc.

உத்தம மணி, வைரம், diamond of superior quality.

உத்தம மாத்திரை, ஒரே இராப் பகலில் குணத்தைக் காட்டும் மாத்திரை, a pill capable of showing effect in twenty-four hours; 2. மெய்மை யுள்ள மாத்திரை; a pill with superior virtues.

உத்தம முந்திரி, கொட்டை முந்திரி, see உத்தம பலம்.

உத்தம மேகம், மூத்திரத்தைக் காய்ச்ச கசடற்றுச் சுத்த சலத்தைப்போ லிருப்பதுந் தவிர மிகுந்த தாகமும், ஒவ்வொரு வேளையும் அளவுக் கதிகமாய் மூத்திரமு மிறங்கு மோர் வகை நீரிழிவு, a urinary disease marked by intense thirst and the passing of abnormal quantities of pale urine, without sugar — Diabetes insipidus. Literally, the term means a mild form of urinary disease.

உத்தமம், அரத்தை, which see; 2. அவுபல பாஷாணம், see உத்தம சத்து; 3. மேன்மை, superiority.

உத்தமன், சிலேட்டுமத்தால் வந்த பத்து வகை நீரிழிவில் ஒன்று. இதன் குணம் ஆட்டின் நிணம் போல் வாசனை வீசும். according to Tamil Medical science, one of the ten kinds of urinary diseases (polyuria) characterised by excessive secretion and discharge of urine containing increased amounts of solid

constituents smelling like a sheep's fat. It is said to arise from the phlegmatic condition of the body. See உத்தம ரோகம்.

உத்தமா காணி, வேலிப் பருத்தி, see உத்தம தாளி.

உத்த மாங்கம், உடம்பின் பிரதான வுறுப்பு, அதாவது தலை, the chief organ in man, as applied to head; 2. ஆண் குறி அல்லது பெண் குறி, the generative organ or the genitals (male or female) of the human body.

உத்த மாதி, முந்திரிப் பழம், see உத்தம பலம்.

உத்தமித் தாய், பரா சக்தி, the universal energy personified as Goddess Sakti. It is very essential for the existence of the world.

உத்தம், see உத்தம பலம்; 2. தண்ணீர், water.

உத்தம்பரம், கண்டில் வெண்ணெய், a tree — Fennel dill.

உத்தம்பரி, see உத்தம பரி.

உத்தம்பலம், see உத்தம பலம்.

உத்தர, மேலான, upper; 2. உயர்ந்த, higher or superior.

உத்தரகாரிகை, விழுதி, chilli fruit caper — Cadaba indica.

உத்தரசமூலம், வயது காலத்தில் பெண்களோடு அதிகமாகப் புணருவதினாலும், மிகச் சூடான அல்லது உப்பும் காரமுமான பண்டங்களை அதிகமாகப் புசிப்பதனாலும், அல்லது கர்ப்பச் சூட்டினாலும், மூளைக் கொதிப்பினாலும் உண்டாகு மோர்வகை மூல நோய், piles arising from excess of sexual intercourse with women during adult life or from taking too much quantity of hot or pungent and saltish substances, or from congential causes or from the heated condition of the brain, due to mental strain.

உத்தரணம், வாந்தி செய்த வுணவு, vomited food; 2. ஆன்மா கடைத்தேறல், final emancipation of the soul; 3. முற்றத் துறத்தல், renouncing the world completely.

உத்தரணி, சிறு கரண்டி, a small spoon of the size of a tea - spoon.

உத்தர தந்திரம், ஓர் ஆயுள் வேத நூல், the name of a supplementary section in the Medical manual of Susruta.

உத்தர ஸ்தானம், ஓர் ஆயுள் வேத கிரந்தம், an Aryan science on Ayur Veda.

உத்தர லாயம், நடுங்கல், to shudder, to tremble.

உத்தரலிதம், நடுங்கச் செய்தல், go cause to tremble.

உத்தர வஸ்தி, பெண்களின் கருப்பையைக் கழுவுவதற்கும், மூத்திரக் கிரிச்சனம் முதலிய மூத்திர நோய்களைக் குணப்படுத்து வதற்கும் உபயோகிக்கும் ஓர் கருவி, an appliance for douching the womb or for syringing the vaginal orifice or the urethra (male or female) or for drawing the urine out in cases or stricture.

உத்தர வாருணி, நீர் கொடி, a creeping plant; 2. வடக்கே வேரோடிய ஆட்டாங் கொடி, a creeping plant which extended its root towards the north.

See ஆட்டாங் கொடி.

உத்தர வேர், வடக்கே யோடிய வேர், இது மாந்திரீகத்திற்கு மிக்க வுபயோகமானது, the root of a particular plant which extended or directed its root towards the north. This root is considered to be very useful in magic, on account of its magnetic virtues.

உத்தரா பதி, கொடி முந்திரி, common grape vine — Vitis vinefera.

உத்தரா போசனம், இரண்டா முறை சாப்பிடுமுணவு, a lunch or slight repast between dinner and supper.

உத்தரி, குதிரை, horse; 2. பருத்திச் செடி cotton plant — Gossypium herbaceum; 3. ஊசிக்காந்தம், magnet; 4. பலப்படுத்தல், to strengthen; 5. அதிகப் படுத்தல், to increase.

உத் தரிஷணம், புளகப் பொடிப்பு, ecstasy in which the hairs stand on ends.

உத்தரித்தல், சகித்தல், to tolerate; to endure; 2. வருந்தல், suffering; to suffer from a disease; 3. எதிர்த்து நிற்றல்,

"நாடி வுத்தரிக்க மாட்டார் நராதிபர்" (உ.ம்)

to resist; to counteract as in the above quotation which means "it is not in the power of mortals to resist or even counteract the action of the seven constituent parts in their systems.

உத்தரிப்பு, வருத்தம், suffering; **2.** சகித்துக் கொள்ளல், the act of bearing, as in pains; **3.** எழும்புகை, erection.

உத் தரு, சுண்ணாம்பு, line; slaked lime.

உத்த ரேணி, நாயுருவி, Indian burr — Achyranthes aspera.

உத்த வாணி, சுண்டங் கத்தரி, a thorny or prickly plant with yellow berries — Solanum jacquini.

உத்த வாலிகம், see **உத்த வாணி.**

உத்தா, ரிபாதி, half or one of two equal parts.

உத் தாசிகம், கண் பீளை, muco-purulent discharge from the eye.

உத்தாந்தம், வாந்தி, vomit, ejection.

உத் தாபம், மிகு வெப்பம், intense heat; **2.** அழற்சி, inflammation.

உத்தா பலம், சங்கஞ் செடி, mistle toe berry thorn — Azima tetracantha alias Monetia tetracantha; **2.** முந்திரிகை, see **உத்தம பலம்.**

உத் தாபனி, விசி நரம்பு, a nerve which contracts the muscle; **2.** தசை நரம்பு, muscle creator; **3.** அழற்றி, irritant.

உத்தா பீலிகம், கஸ்தூரி, musk.

உத்தா மணி, இது வோர் படர்கொடி, சாதாரணமாய்க் கொல்லை, புறக்கடை, புதரு முதலிய இடங்களில் வேலி அல்லது மரக்கிளைகளைப் பற்றிக் கொண்டிருக்கும். ஆகவே எங்கும் பார்க்கலாம். இதன் இலை வட்டமாயும், காம்புகளிற் பாலுடையதாயு மிருக்கும். இதன் காய்ப் பிஞ்சு பச்சையா யிருப்பதுடன் மேலே ஊமத்தங் காய்க் கிருப்பது போல் மயிர்கள டர்த்தி யுள்ளதாயு மிருக்கும், காய் முத்தின பிறகு கபில நிறமாயும் பின்னர் உள்ளே பஞ்சு போன்ற வெண்ணிறமான வஸ்து காய்கள் வெடிக்க. வெளிகளிற் பறக்கும். பூ நாற்ற முடையது.

இதற்குக் கபத்தை யறுக்குங் குண முண்டாதலால் குழந்தை நோய்களுக்கு மிகுதியா யுபயோகிப்ப துண்டு. கொப்புளங்களுக்கு இதை யரைத்து மேலே பூசலாம். இதை வாயு, வாதக் குடைச்சல், குன்மம், விஷக்கடி, மேல் மூச்சு முதலிய நோய்களுக்குக் கொடுக்கக் குணமாகும். இதை மிளகுடன் சேர்த்துச் சுரத்திற்குக் கொடுப்பதுண்டு, இதன் இலையின் சாற்றைக் காசத்திற்கும் கொடுக்கலாம். இவ்விலையின் சாற்றுடன் சுண்ணாம்பு கலந்து குழைத்து வாதத்தால் நேரும் கை கால் வீக்கத்திற்குப் பூசலாம், a twining shurb generally found twining to the branches of trees and to the hedges in our back yards, gardens and bushes and so it is common everywhere. Leaves roundish; flowers, pale-green and purplish inside; pedicles elongated with milky juice; young fruits green with bristly pods like those of datura. Matured fruits bear cottony fibres inside and when they burst, the fibres issue out flying all over the place. The smell of the flowers is very offensive.

It is an expectorant and so Veidyans prescribe it in children's diseases especially in pulmonary affections. A paste made from this is applied to boils and abscesses externally. Decoction of the leaves is given for flatulence, rheumatism, dyspepsia, poisonous bites, hard breathing etc. The whole plant mixed with pepper is given as a deccetion in fevers; juice of fresh leaves in asthma and the juice of the leaves mixed with chunam is applied externally in rheumatic swellings of the limbs.

உத்தாமதி, பெருங்காரை, grey emetic nut — Randia uliginosa.

உத்தாரம், வாந்தி செய்தல், vomiting; ejecting; **2.** விழியெடுத்த கண், full or prominent eye; an eye from which the pupil is taken out.

உத் தாரியம், வாந்தியால் வெளி தள்ளல், to be thrown out by vomiting, to be ejected.

உத் தாலகம், ஓர்விதச் சோளம், a kind of milet — Soryghum vulgaria.

உத்தாலம், நறுவிலி, narrow-leaved sebesten — Cordia rothii alias C. obliqua.

உத்தால வாதம், வாயுவைப் பிறப்பிக்கு மோர் வகை வாத நோய், rheumatism attended with or developing flatulency.

உத்தான அஸ்தம், கை கூப்பி வணங்கல், having the hands extended in prayer; the two hands with the fingers stretched out.

உத்தான கூர்மகம், ஓர்வித உட்காரு முறை, a particular posture in sitting.

உத்தான சம்புடம், அறுபத்து நான்கு நிலைகளில் ஒன்று, one of the 64 postures described in the erotic science.

உத்தான சயை, பால் குடிக்கு குழந்தை, baby or child at bre...

உத்தானம், அடுப்பு, oven; 2. மலங் கழித்தல், to answer the calls of nature; 3. உயிர்ப்பித் தெழுப்பல், to restore to life; 4. மனிதத் தத்துவம், manly power; masculine vigour or strength — Virility; 5. புடைப்பு, (in Anatomy) eminence; 6. வாயும், முகமும் மேல் நோக்கும்படி மல்லாந்து கிடத்தல், lying on the back; sleeping supinely or with the face upwards; 7. மல்லாத்தல், turning so that the mouth or opening is uppermost (as a vessel); 8. திராவல், spreading out on the surface; 9. மலத்தினால் வெளிப்படுத்தல், evacuating by stool etc; 10. வாந்தித்தல், vomiting; ejecting; 11. உள்வளைவு, inner curvature; concavity.

உத்தான வாத சோணிதம், வாத சோணித ரோகத்தாற் பிறக்கு மோர் நோய். இதனால் உடம்பின் ஓர் பாகத்தில் முதல் முதல் மாமிச தாதுவில் குத்தலும், நமைச்சலு முண்டாகிப் பிறகு அதைக் கடந்து வெளி முகமாய்ச் சரும முற்றிலும் வியாபிக்கும். அதனால் அச்சருமம் கறுத்தும், சிவந்தும், தாம்பிர நிறத்தைப் பெற்றும், அதிக வெப்பத்தைத் தரும், a disease generally propagated by direct veneral contact. Its primary local seat is attended with piercing pain and itching, hence it extends to the skin and then to nearly all the tissues of the body, thereby giving rise to dark, red or copper hued and multiform skin eruptions and excessive heat in the body.

உத்தான வாதம், ஓர் வகை வாத நோய், இது வாயுவைப் பிறப்பிக்கும் பண்டங்களினாற் பிறந்து, உடம்பில் ஓரிடத்தி லிருக்கின்ற தோலைப் பற்றித் துன்பத்தை விளைவிக்கும்; அப்போது சர்வாங்கத்திலும் திமிர், கை கால் முடக்கம், வாந்தி, மூர்ச்சை யென்னு மிக் குணங்களுண்டாகும். a kind of rheumatism. It is a constitutional disease brought about through dietetic errors i.e., by taking food or other substances likely to increase flatulency. It is marked by inflammation of the skin in a particular part of the body and attended with numbness, rigidity in the joints, vomiting, fatigue etc.

உத்தானி, see உத்தாபனி; 2. தசை நரம்பு, muscular tissue; muscle supinator.

உத்தி, அபின் opium; 2. தேமல், a discoloured yellow spot on the skin not elevated above the surface — Macula; yellow or tawny spots on the face, breast and other parts of the skin chiefly of women, in whom they are considered marks of beauty; 3. அறிவு, knowledge; 4. சேர்க்கை, mixture, combination.

உத்திங்கம், ஓர் பூச்சி, a species of insect.

உத்தித் தேங்குலி, விரல் நீட்டிய உள்ளங்கை, the palm of the hand with fingers extended.

உத்தியக்தம், பந்தத்தி னின்று விலகல், to be free from worldly bondage.

உத்தியாவன வாசினி, சங்கங் குப்பி, smooth volkameria — Clerodendron inerme alias Valkameria inermis.

உத்திரட்டாதி சுரம், உத்திரட்டாதி நட்சத்திற் துடங்கி ஏழு நாள் வரை அடிக்கு மோர் வகைக் காய்ச்சல், a fever commencing on the twenty-sixth lunar asterism (star) and extending over a period of seven days.

உத்திர நங்கசம், துரிஞ்சில், a kind of bat.

உத்திரப் பூண்டு, சிவனார் வேம்பு, Shiva's neem — Indigofera aspalathoides.

உத்திரம், மஞ்சள் turmeric; 2. மர மஞ்சள், tree - turmeric — Coscinum fenestratum; 3. தேட் கொடுக்கி, Indian heliotrope — Heliotropium indicum.

உத்திரம் நமனார், தம்பலப் பூச்சி வேர், the source from which Lady's fly is derived.

உத்திராங்கம், ஓர் நோய், a disease?

உத்திராட்சம், உருத்திராட்ச மணி, downy nerved olive linden — Eleocarpus tuberculatus.

உத்திர பன்னி, சணல், Indian hemp — Crotalaria juncea.

உத்திரி, பருத்தி, Indian cotton — Gossypium herbaceum; 2. (in Sans) வாந்தித்தல், to vomit up.

உத்திரிக நாரி, கஸ்தூரி நாறி, that which smells like musk.

உத்திரி பிடுக்கன் காய், see அத்திரி பிடுக்கன்.

உத்தி ரோடம், புளி முந்திரி, a species of cashew-nut tree with sour fruits — Anacardium occidentalis.

உத்தி வங்கம், காரியம், black lead or graphite.

உத்தினம், மத்தியானம், noon.

உத் தீபகம், see உத்தீபனம்; 2. மலையெறும்பு, a big ant; mountain ant.

உத் தீபம், சூடுண்டாக்கல், the act of inflaming; 2. உயிர்ப் பித்தல், animating; 3. ஓர் சாம்பிராணி, a gummy and resinous substance — Bdellium.

உத் தீபனம், பசியை யுண்டாக்கு மருந்து, a medicine promoting hunger — Stomachic; 2. பலத்தை யுண்டாக்கு மருந்து, a substance which produces a quickly diffused and transient increase of vital energy in the bodily system — Tonic; 3. விகாரத்தை யுண்டு பண்ணு மருந்து, that which excites the nervous system — Stimulant; 4. உணர்ச்சியைக் கிளப்பல், giving poignancy to feeling or passion; 5. காம மூட்டல், inflaming a passion; 6. எழுப்பல், aggravating anything; 7. எழுச்சி யுண்டாக்குவது, anything stimulant.

உத்து குதூஸ், உஸ்து குதூஸ், இது அரேபியா தேசத்தில் விளையு மோர் பூடு. இந்தியாவிற்குக் கொண்டு வந்து சில விடங்களிற் பயிராக்கப்படுகிறது. இது வேனிற் காலத்தில் சதுப்பு நிலங்களி லுற்பத்தி யாகும். அரேபியாவிலிருந்து உலர்த்தி ஏற்றுமதி செய்யப் படுவதுதான் மிகவும் சிறந்தது, இது கறுப்பும் பசுமையும் கலந்த நிறமுடையது. சிறு கசப்பும், காரமும், வாசனையும் பொருந்தியது.

இது மார்பு நோய், இருமல், பீனிசம், நரம்பு நோய், கபநீர் முதலியவைகளுக்கு யுனானி வைத்தியர்களாற் சூரணமாகவும் கஷாயமாகவும் கொடுக்கப்படும்.

இது தலை, மூளை, குடல், ஈரல், மண்ணீரல், நீருறுப்பு, முதலியவைகளுக்குப் பலத்தை யுண்டாக்கும். புத்தியையும் தீட்சணப்படுத்தும். ஆகவே இதற்கு ஆத்தும ரட்சணி, என்றும் பெயர்.

a plant commonly grown in Arabia, but naturalised in certain parts of India. It is found in moist places in summer. The dried plant exported from Arabia is considered superior. It is greenish dark in colour and rather bitter and pungent to the taste.

It is prescribed by Unani doctors in cases of chest pain, cough, catarrh, nervous affections, phlegmatic disorders, etc., in the form of powders and decoctions.

It is said to invigorate the cerebral system, the intestines, the liver, the spleen, and the urinary organs and also to sharpen the intellect. It is also known as the 'life-protector'.

உத்தும்பரம், செம்பு, see உதும்பரம்.

உத்து வருத்தனம், அரைத்தல், grinding; 2. தேய்த்தல், rubbing; 3. வாசனை யூட்டல், to give fragrance. 4. முளைத்தல், germinating.

உத்துவாகித முகம், அண்ணாந்த முகம், upward look with the head thrown back; face looking upwards — one of the fourteen aspects of the countenance; 2. நிமிர்ந்து பார்த்தல், to look erect.

உத்துவேகன், காட்டுத் துளசி, wild basil — Ocimum adscendens.

உத்தை, எழும்பல், erection.

உத் பலம், நெய்தல், white water-lily — Nymphae alba; 2. கீழா நெல்லி, Indian featherfoil — Phyllanthus niruri.

உத் பவம், உற்பத்தி, formation; production.

உத் பிதம், ஒருப்பு, a kind of salt; 2. மூளை, the shoot or sprout of a plant.

உத்பித வித்தை, தாவர நூல், the science of plants - Botany.

உத் பிராந்தை, மனவெழுச்சி, excitement or agitation.

உத் பீஜம், செடியின் முளை the sprout of a plant; 2. கட்டியின் முளை, the root of an abscess.

உத் புருவம், மேல் நோக்கிய புருவம், drawn-up eyebrows.

உத் மானம், அடுப்பு, oven.

உத் வர்த்தனம், தைலம் தேய்த்தல், rubbing or kneading the body with medicated oils; rubbing and cleansing the body with fragrant unguents; 2. பூசு மருந்து, the unguents used externally to relieve pains in the limbs etc.

உத் வாகம், ஓர் வாயு, the vital air that conveys nourishment upwards.

உத் வாமின், வாந்தித்தல், vomiting out.

உத் வேகம், கொட்டைப் பாக்கு, areca-nut — Areca catechu; 2. நடுக்கம், trembling.

உந்தரம், எலி, rat; 2. சுண்டெலி, mouse.

உந்தல், மிகு நீர்க் கோர்வையினால் கரு விழியில் பூவிழும் ஒரு கண்ணோய், a cataract in which

the aqueous humor gains access to the lens.

உந்தி, ஆறு, river; 2. கடல், sea; 3. கொப்பூழ், navel; 4. வயிறு, belly; 5. தண்ணீர், water; 6. நடு, middle.

உந்திக் கமலம், கொப்பூழ் வளைவு, the curve of the navel.

உந்திக் கழலை, see உந்திக் கொழுப்பு.

உந்திக் கொடி, கொப்பூழ்க் கொடி, navel cord.

உந்திக் கொழுப்பு, உந்தியில் எழும்பு மோர் கொழுப்புக் கழலை, a fatty tumour of the navel -- Liparomphalus.

உந்திச் சுழி, கொப்பூழ் சுழி, involution or curve of the navel, see உந்திக் கமலம்.

உந்தி நாளம், see உந்திக் கொடி.

உந்திப் புண், கொப்பூழிற் காணு மோர் விரண நோய், an inflammation or sore in the navel.

உந்திர தாரு, தேவதாரு, Bastard sandal — Erythroxylon monogynum.

உந்தி வேர், கொப்பூழ்க் கொடி, umbilical cord.

உந்தி வேர்க் குளிசம், விந்து கழலா திருக்க வேண்டித் தலைச்சன் பிள்ளைக் கொப்பூழ்க் கொடியை மந்திரம் செபித்து உள்ளடைத்துச் செய்யு மோர் குளிசம், a silver or copper talisman in which a bit of the navel-cord of the first-born child is enclosed after chanting the appropriate mantrams. It is intended to be worn by males round their waist by a string with a view to prevent the early discharge of semen during coition.

உந்து, கச்சோலம் அதாவது ஏலக்காய்த் தோல், the husk of cardamom.

உந்துகம், பெருங்குடல், the large intestines — Colon.

உந்துதல், நகர்தல், to crawl; 2. பொருத்தல், causing to unite.

உந்து நெரிசல், வெள் விழியில் துன் மாமிசத்தை வளரச் செய்யுமோர் கண்ணோய், an eye disease developing a malignant growth of flesh in the sclerotic coat (white portion) of the eye.

உந்துரம், உந்துரு, பெருச்சாளி, bandicoot.

உந்தூழ், பெருமூங்கிற் பூ, the flower of the common prickly bamboo — Bambusa arundinacea.

உந் தெமுச்சி, வெள் விழியில் பருத்திக் காயைப் போல் துன்மாமிசத்தை வளரச் செய்யு மோர் வகைக் கண்ணோய், a malignant growth of flesh on the white coat (sclerotic portion) of the eye resembling the cotton seed.

உப, துணை, auxillary or secondary; 2. ஓர் உபசருக்கம், a sanskrit, prefix denoting subsidiariness or sub-head as in உபசரக்கு, உப கந்தகம் or proximity as in உபக்கிரகம்; 3. ஒடு, உடன், கீழ், முதலியவைகளையும் குறிக்கும், it also expresses with or together or under or down; 4. அன்றியும், அதன் கூட என்பவைகளையும் காட்டும், it denotes also thereto or moreover; 5. குறைந்த, a prefix denoting a lack or deficiency — Hypo, as in உப கந்தகம், which see.

உப கச்சம், வெள்ளையாமணக்கு, Moghul castor-oil plant — Jatropha curens.

உப கஞ்சிகம், கருஞ்சீரகம், black cumin seed — Nigella sativa.

உப கண்டம், கழுத்தடி, that portion of the trachea between the neck and the thorax — Cervico-thorax.

உப கந்தகம், கந்தகம் குறைவா வுள்ள ஓர் உப்பு, any salt containin less of sulphite — Hyposulphite.

உப கந்தம், குறைந்த வாசனை யுள்ளது; perfumes with less odour.

உபகம், பெண்ணிடம் சேர்தல், to approach a woman sexually.

உப கரணம், அளியம், set of instruments or utensils for preparing any medicine or for making any experiment — Apparatus; 2. உயிருக்கு தவியானது, means of subsistence; anything supporting life; 3. துணைச் செய்கை, action or operation done with an instrument; 4. குறைவான தொழில், see உப கருமம்.

உப கரண வைத்தியம், ஆயுதத்தினாற் செய்யும் வைத்திய சிகிச்சை, the operative branch of medical practice — Surgery.

உப கருமம், குறைவான தொழில் (in Medicine) diminished function — Hypo function.

உப கற்பம், காய கற்ப மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்குங் காலத்து அவைகளுக்குதவியாகச் சேரும் சரக்குகள், auxillary or minor drugs which are added as ingredients to

the life-promoting drugs used in the preparation of a cordial or an elixir; 2. தேற்று மருந்து, a preparation consisting of drugs promoting vigour by relieving pain — Paregoric elixir; 3. காட்டுத்தீ அல்லது காளவாய்த் தீயால் இயற்கையாகவே வெந்து நீறிய சாம்பலைக் கொண்டு, ஆகம முறைப்படி அமைந்த விபூதி, sacred ashes derived from the great conflagration in the forest or from the kilns and cleaned by a ceremonial process as laid down in Agama Philosophy.

உப காதம், நோய், disease.

உப காரகன், வைத்தியனுக்குத் துணையாளி, a male medical assistant.

உப காரம் (உப + காரம்) குறைந்த காரம், less alkaline than normal — Hypo-alkaline.

உப காரி, நோயாளியைக் கவனிப்பதற்கு வைத்தியனுக்குத் துணையானவள், a female attendant in a hospital for rendering help to the doctor in treating patients and also for taking care of the sick, the wounded or the enfeebled — Nurse.

உப காரிப்பு, உபகாரம் மலர்ந்த பூ, a blossom; a full blown flower.

உபகாரி விரணம், மெழுகு, wax.

உப காலிகம், see உப குஞ்சம்.

உப கிரகம், நோய்களை யுண்டாக்கும் கிரகம், a kind of demon (supposed to preside over the planets) causing diseases.

உப கிரமம், நோயாளியைக் கவனித்தல், attendance on a patient; 2. சிகிச்சை, treatment, practice or application of medicine.

உப கிருசம், பல்லிளிறு சுரந்து வேரினின்று இரத்தம் சீழ் வடிந்து, பல்லாட்டங் கண்டு, வாயில் கெட்ட நாற்றம் வீசும் ஓர்வகைப் பல்நோய், discharge of pus from the teeth, due to inflammation of the tough fibrous membrane surrounding the teeth. It is marked by looseness of the teeth, fetid smell etc. — Pyorrhoea.

உப கில்லியம், திப்பிலி, long-pepper — Piper longum.

உபகுசம், பல்லீறில் வரும் கொப்புளம், gum - boil.

உபகுஞ்சம், கருஞ்சீரகம், black cumin — Nigella sativa; 2. ஏலம் cardamom.

உபகுஞ்சிகம், சிற்றேலம், small cardamom.

உப குஞ்சிகை, see உப குஞ்சம்.

உபகுஞ்சிதம், கஸ்தூரியரளி, musk-oleander.

உப கும்பம், சீரகம், cumin seed — Cuminum cyminum; 2. காட்டா மணக்கு, wild croton — Croton polyandrum.

உப குலியம்,

உப குலியை, திப்பிலி, see உப கில்லியம்.

உப குலோசிகம், கத்தைக் காம்பு, black catechu or Pegu catechu — Catechu nigrum.

NOTE.— Formerly it was called Terra Japonioa or Terra Catechu, as believed to be a mineral. There are four different kinds in the Madras market. For details see under its proper head கத்தைக் காம்பு.

உப குல்லம், சுக்கு dried ginger — Zingiber officinalis.

உப குல்லாவிசம், கம்பளி மரம், cater-pillar tree — Morus Indica.

உப குல்லிகம்,

உப குல்லியை, see உப குலியை.

உபக்கிர மணம், வைத்தியஞ் செய்தல், applying medicine to or operating upon, patients to cure diseases.

உபக் கிரமம், வைத்தியம், medicine in theory; 2. வைத்தி யாப்பியாசம், medicine in practice; 3. தொடக்கம், commencement.

உபக் கிரம், முகரல், to smell.

உபக் கிரயம், முகர்தல், smelling.

உப சங்காரம், கூட்டுறவை யழித்தல், reducing a compound to its original elements — Decomposition; 2. அழிவு, destruction.

உப சந்தி, அந்தி சந்தி, a period just before the sunset or the sunrise.

உப சமயம், முட் கத்திரி, prickly brinjal — Solanum melongena.

உப சமனம், அமைதி, tranquility; cessation of external actions for the purpose of silent contemplation; 2. சாந்தப்படுத்தல், mitigating; 3. தணித்தல், appeasing; 4. வலி ஆற்றும் மருந்து, a medicine that relieves pain; an allaying medicine — Anodyne.

உப சயம், நோய் குணப்படல், disease being cured; 2. மிகுதி, excess; 3. வளர்ச்சி, growth; 4. அரு கிருத்தல், lying near, at hand or close by; 5. நோயை சாந்தப்படுத்தல், the allaying of diseases by suitable remedies; 6. ஆற்று மருந்து, an allaying medicine; a healing drug; 7. சீதளங் கொள்ள வசதி, the likelihood or predeliction of a sick person as for cold etc; 8. உணவு அல்லது மருந்துகளின் குணத்தைக் கொண்டு நோயை நிர்ணயித்தல், diagonosis from the effect of certain articles of food or medicine.

உப சரணம், இரத்தத் திரட்சி, accumulation of blood; congestion.

உபசரம், பசுக்கள் கருக் கொள்ளுங் காலம், the period of gestation in cows.

உபசரியம், கருக் கொள்ளல், impregnation as in females.

உப சருக்கம், சிவப்பு, redness; 2. மாரி முதலிய கொள்ளை நோய்கள், epidemic diseases such as small-pox etc., 3. நோயின் கடுமை அல்லது மரணத்தைக் காட்டுங் குறிகள், supervening symptoms of a disease or symptoms of death.

உப சருச்சி, see உபகாரம்.

உப சர்க்க தாகம், மேன் மேலும் உண்டாகும் தாகம். இது தித்திப்பு உப்பு முதலியவைகளை அளவு கடந்து புசித்தலாலும், களைப்பு அல்லது சோர்வடைந்த பொழுதும், தாபச்சுர காலத்தும், உடம்பில் நெடு நாளாகப் பற்றிய விஷம காலத்தும் உண்டாகித் துன்புறுத்தும், a morbid or excessive thirst — Polydypsis. It is due to the consumption of excessive salt or sugar in food, or through fatigue or weariness, or in cases of fever accompanied by thirst or of poisoning from chronic diseases.

உப சர்க்கம், நோய் மேல் நோய், a disease super-induced on another; 2. நோயின் வேறுபாடு, change occasioned by any disease; 3. மரணக்குறி, indication or symptom of death; 4. அவ்வியயம், a prefix

உபசர்ம, தோலின் கீழ், beneath the skin — Hypodermic.

உப சனனம், பிறப்பு, generation; procreation.

உப சாடம், மூன்றெழுத்தில் ஒன்றாகிய 'சவ்வும்', one of the three mystic letters "Savum".

NOTE.— The three letters are:- "ஐயும், (I-um) கிலியும், (Kili-um) சவ்வும், (Sow-um) which play an important part in the Mantric Science.

உப சாந்த சாதி, அஸ்த சுக சாதியாகிய ஆண் சாதி நான்கு வகையி லொன்று, one of the four classes of men derived according to lust.

உப சாந்த மருந்து, அமரிக்கையை யுண்டாக்கு மருந்து அதாவது நோயைத் தணிக்குமருந்து, any medicine affording relief but not cure; an alleviating medicine — Palliative; 2. வலியைக் குறைக்கு மருந்து, medicine that relieves pain — Anodyne.

உபசாந்தம், தணிகை, mitigation, alleviation.

உபசாந்தி, வலி அல்லது துன்பத்தைக் குறைக்கு மருந்து. any medicine that relieves pain as opium morphia etc. — Anodyne; 2. மருந்தின் வேகத்தைத் தணிக்கு மருந்து, paregoric; 3. நோயாளிகளுக்குப் பாதை நீங்கி அமரிக்கையை யுண்டாக்கல், palliative treatment; 4. முறைப்படி சிகிச்சை செய்வதற்கு முன்னதாகக் கை முறையாகத் தற்சமய வைத்தியம் செய்தல் a temporary treatment given to a wounded or a sick person before the doctor's arrival — First-aid.

NOTE.— Palliative measures are generally adopted, in cases beyond all treatment and in which palliation is the only remedy.

உப சாயகம், அடுத்துத் தூங்கல், sleeping alternately.

உபசாயி. தத்துவம், பத்திய முதலியவைகளால் நோயைத் தணிக்கும் வழி, means of allaying a disease with diet etc — Dietetic treatment.

உபசாரப் பூனீர், உவர்மண்ணி னின்று தயாரிக்கும் பூநீர், Fuller's earth (an ore impregnated with soda) used in the preparation of Pooneer.

உபசாரம், நோயாளிக்குச் செய்யும் உதவி, nursing rendered to a patient; 2. நோயாளிக்குச் செய்யும் வைத்தியம், treatment accorded to a patient, see உப கிரமம்; 3. குறைந்த அன்ன சாரம், deficiency of chyle — Hypochylia.

உபசாரி, நோயாளிக்கு உபசாரம் செய்பவள், a trained nurse who takes care of the sick. See also உபகாரி.

உபசாரிகை, துணையாளி, a person who attends on a sick patient. See also உபசாரி.

உபசி, கலவிக்காகப் பெண்ணிடம் சேருபவன், he who lies by the side of or approaches a woman for the purpose of sexual intercourse.

உபசிகுவை, உண்ணாக்கு நீண்டு வீக்கத்தை யுண்டாக்கி உண்ண முடியாது, இருமல், அருவுதல் முதலிய குணங்களைக் காட்டுமோர் நோய், elongation of the uvula accompanied by swelling, in which the patient could not eat or drink without pain. It is marked by cough, and irritation of the throat — Staphyloptosis.

See also உண்ணாக் குத்தல்.

உப சிக்வா, see உப சிகுவை.

உப சிங்கி, நாவில் வரும் ஓர் விரண நோய், an ulcer on the tongue see also சிங்கி.

உபசித ரோகம், உஷ்ண சன்னி, an apoplectic stroke caused by exposure to excessive heat, natural or artificial — Heat stroke or Heat apoplexy; 2. வெயிலில் திரிவதா லுண்டாகும் சன்னி, a sudden attack of paralysis from injury to the brain — Sunstroke.

உப சித்தி, வெள்ளை நாகணம், white croton oil plant — Croton tigilium.

உப சித்திரை, ஆல், Banyan tree — Ficus bengalenses; 2. எலி, rat.

உப சிரிட்டம், புணர்ச்சி, coition; sexual intercourse.

உப சிருட்டம், புணர்ச்சி, copulation.

உப சீரிடம், கபால வாயுவினால் கருப்பிணிகளின் தலையில் வீக்கத்தை யுண்டாக்கி அவ்வாறே வயிற்றி லிருக்கும் குழந்தைக்கும் உண்டாக்கு மோர் நோய், a disease characterised by swelling of the heads of both the child in the womb and the pregnant woman. It is said to arise from the deranged condition of Vayu in the region of the head.

உப சேவை, புணர்தல், having intercourse with.

உபஸ்கரம், கறி மசாலை, condiment; 2. வாசனை சாமான், spices; 3. சேரும் வஸ்து, an ingredient.

உபஞ்ச ரோகம், மேக நோயினா லேற்படும் விரணம், a venereal or syphilitic sore.

See — உபதசம்ச ரோகம்.

உப தஞ்சக் கறை, மேக வொழுக்கினால் ஏற்படும் மாசு, a venereal or syphilitic taint.

உப தஞ்சம், மேகக் கிரந்தி, chancre or syphilis — Lues venerea, see உபதஞ்ச ரோகம்; 2. சோ றுண்ணும் போது கடித்துக் கொள்ளும் ஊறுகாய் முதலியன. pickle etc., used as auxilliaries in eating food.

உப தம்சம், see உப தஞ்சம்.

உப தம்ச ரோகம், உப தஞ்ச ரோகம், சாதாரணமாய் மேக சம்பந்தத்தினா லேற்படும் ஓர் தொத்து நோய். இது கர்ப்பத்திலேயே பிறந்தும் ஏற்படலாம். பெண்களுக்கும் அல்லது ஆண் பிள்ளைகளுக்கும் மர்ம ஸ்தானத்தில் புண்ணோடு அல்லது புண்ணில்லாமலே கண்டு, பிறகு திரி தோஷங்களின் குற்றத்தினால் உடம்பு முழுவதும் பரவி, குருக்கள் அல்லது கிரந்திப் புண்களை எழுப்புவதுடன் மிக்க வலியையுமுண்டாக்கும். தமிழ் வைத்திய நூலின்படி இது ஆண் பிள்ளைகளுக்கு அதிகப் புணர்ச்சி அல்லது புணர்ச்சி யின்மையினாற் காணும், அன்றியும், இது மாதவிடாய்ப் பெண்ணோடு சம்போகித்த லாலும், அல்லது நோய் கொண்ட பெண்களைப் புணருவதாலும் அல்லது ஒடுக்கமானதும், முரட்டு மயிருள்ளதுமான யோனியை யுடைய பெண்களைப் புணருவதாலும், கை முஷ்டி, ஆசனப் புணர்ச்சி முதலிய காரணங்களினாலும் உண்டாகும். இது அடியிற் கண்டபடி நான்கு வகைப்படும். a contagious venereal disease generally propogated by direct veneral contact or by inheritence. It equally affects both males and females, and its primary local seats are the genitals, whence it extends all over the body developing peculiar skin affections (eruptions or ulcerations as the case may be) and severe pain, owing to the concerted action of the three humours in the system — Syphilis.

According to Indian Medical Science, it is due to promiscuous or excessive sexual intercourse or by entire abstinence from sexual congress. In males it is due to various other causes such as, visiting a woman who has not had sexual intercourse for a long time, or one in her menses, or one with an extremely narrow vulva or with rough or large public hairs or one suffering from any vaginal disease or one whose vagina is naturally foul.

It may also be due to malpractices such as, masturbation, sodomy and several unnatural offences.

It consists of four kinds as enumerated below —

1. **கடினம்,** a constitutional veneral sore followed by primary syphilis — Hard or indurated chancre.

2. **மிருது,** A soft or non-syphilitic veneral sore — Soft chancre or chancroid.

3. வியாபகம், an extending venereal sore or chancre — True or secondary syphilis.

4. பரியுசிதம், another variety, perhaps tertiary syphilis.

உப தஞ்ச வீறு, மேக நோயின் வேகம், venereal or syphilitic virus.

உப தாகம், பனை மரம், palmyra tree; palm tree.

உப தாது, கலப்பான உலோகம், இதனின்று உலோகம் எடுக்கப்படும். impure metal or a mineral substance consisting of a metal and other matter in combination. It forms the chief source from which metals are usually obtained — Metallic ore.

2. ஆயுள் வேதப்படி, எழுவகை இழிந்த உலோகங்கள் அவையாவன (In Ayurveda) the seven secondary minerals or semi metals and they are —

1. சுவர்ண மாட்சிகம், gold-pyrites.
2. தார மாட்சிகம், a white mineral radiated with silver colour known as siver-pyrites.
3. துத்தம், zinc or copper sulphate.
4. கஞ்சம், brass.
5. இரீதி, calx of brass.
6. சிந்தூரம், red lead.
7. சிலாசத்து, gypsum;

3. அடியிற் கண்டபடி ஏழு தாதுக்களைப் போல் நிறமும் தோற்றமு முடைய இழிந்த ஏழு உலோகக் கலப்புகள் அவையாவன:- the seven inferior minerals resembling the seven metals in appearance and colour and they are: -

தாது, Metals	உபதாது, inferior minerals.
1. பொன், Gold —	சுவர்ணமாட்சிகம் gold pyrites.
2. வெள்ளி, Silver —	தார மாட்சிகம் Silver pyrites.
3. செம்பு, copper —	துத்தம், copper sulphate or blue vitriol.
4. வங்கம், Lead ore — tin	கங்கோட்டம், Litharge — Plumbi oxidum.
5. சாசதம், Bronze —	காகபரி, Bismuth or antimony.
6. நாகம், zinc —	சிந்தூரம், red lead.
7. உலோகம், Iron — (இரும்பு) Iron stone.	இட்டக் கல்,

4. தமிழ் வைத்தியப்படி ஏழுவகை உபதாதுக்கள் — நிமிளை, மயில் துத்தம், அப்பிரகம், நீலாஞ்சனம், மனேசிலை, தாளகம், ரசம் (In Tamil Medical Science) the seven sub-divisions of minerals are — pyrites, copper sulphate, mica or talc, antimony, red sulphide, orpiment and mercury.

5. தமிழில் சில நூற்களில், அடியிற் கண்டபடி வேறு விதமாகவும் காணலாம், (In Tamil Medicine) it is also differently classified according to some authors viz.—

1. பொன்னிமிளை — gold-pyrites.
2. மயில் துத்தம் — copper sulphate.
3. வெள்ளி நிமிளை — silver - pyrites.
4. வெண்கலம் — bronze.
5. பித்தளை — brass
6. சிலாசத்து — gypsum
7. காவிக்கல் — hard red ochre
8. தாளகம் — orpiment.
9. காரீயம் — graphite.

6. உடம்பினி லுள்ள ஏழுவகை உப தாதுக்கள் (In physiology) the nine secondary secretions and constituents of the body viz —

1. பால் - milk
2. மாத விடாய் - menstrual blood.
3. கொழுப்பு - adipose; fat
4. வியர்வை - perspiration; sweat.
5. பற்கள் - teeth.
6. மயிர் - hair.
7. நிண நீர் - lymph.

உப தாது; அலோகம், non - metal.

உப தாபம், நோய், disease; 2. வெப்பம், heat.

உப தாபன நாடி, சுவாசக் குழலின் நாடி (தமரக சாகை நாடி), (In anatomy) the bronchial artery.

உப தாபனம், see உபதாபம்.

உப தானம், நஞ்சு, poison.

உபதி, உபயோக முள்ளது அதாவது கை, that which is useful i.e., the hand; 2. புல்லூரி, a parasitical plant.

உப தூசிதன், மரண திசையிலிருப்போன், one who is on the point of death; a dying man.

உப தேசம், ஒரு காரியத்தை இன்னவிதமாகச் செய்யென்று போதித்தல், (literally) a specific instruction given for the doing of a thing in a particular way; 2. ஞான போதனை, (In Philosophy) spiritual instruction or teaching; communication of the initiatory through Mantram or formula; original enumeration; 3. தீட்சை, (In Yoga Philosophy) the spritual inspiration; divine influence or initiation by a guru to his disciple.

NOTE.— This is generally done i any of the four prescribed ways.

உப தேசிகை, பெரு முன்னை large-leaved fire brand teak — Premi corymbosa.

உப தேசித்தல், ஞானோபதேசங் கூறல், to teach the philosophical truths; **2. மந்திர வுபதேசம் செய்தல்;** a secret instruction in chanting Mantrams, whispered into the ear of the disciple; **3. தீட்சை செய்தல்,** to purify a disciple by removing his ignorance through the magnetic influence of a Guru.

உப தேந்திரியம், ஆண் குறி அல்லது பெண் குறி, the genitals whether of a male or a female.

உபத்த நிக்கிரகம், காம விச்சையை விலக்கல், restraint of sexual passion or desire.

உபத்த பத்திரம், அத்தி மரம், Indian fig-tree.

உபத்த பாதம், ஆண் குறிக்குப் போகும் இரத்தக் குழாய், a particular blood - vessel leading to the generative organ of a male.

உபத்தம், பெண்குறி, the genital of a female — Pudendum mulibre; **2. ஆண், பெண் குறி** the genitals (male and female); **3. இடுப்பு,** the haunch or the hip.

உபத்திரவ சுரம், விரணம், காயம், வலி, முதலியவைகளினா லுண்டாகு மோர் வகைக் காய்ச்சல், a kind of fever arising from wounds, injury and pain — Traumatic fever.

உபத்திரவம், நோயின் மூலமாய் ஏற்படும் துன்பங்கள், the side issues of a disease; **2. ஓர் நோய் மூலியமாய் மற்றும் சில நோய்க ளுண்டாதல்,** a disease or diseases concurring with another disease; the concurrence of two or more diseases in the same patient — Complications; **3. விரணம், புண் முதலியவைகளாற் படும் கொடுந் துன்பங்கள்,** the supervening and distressing symptoms found in cases of wound, ulcer etc., any grievous accident, misfortune, calamity, mischief, national distress (such as famine, plague, oppression) etc.; **4. திடீரென உண்டாகும் சம்பவம்** that which attacks or occurs suddenly.

உபத்தை, see **உலுப்பை.**

உபஸ்தம், see **உபத்தம்.**

உபஸ்த ரோகம், யோனி வாயிலிருந்து வரும் விஷ நீரால் ஏற்படும் நோய்கள். diseases arising from the infection due to the discharge of morbid fluid from the vagina — Venereal disease; **2. பெண்களுக்கு யோனியி லுண்டாகும் பலவித நோய்கள்,** a general term for various diseases of the genital of a female.

உபஸ்தா சயம், பெண்களுக்கு அடிவயிற்றைச் சுற்றிலு மிருக்கு மெலும்பு, public bone — Pubes.

உபநக ரோமம், நகச் சந்தில் கட்டி யுண்டாகிக் குத்தல், வீக்கம், முதலிய குணங்களைக் காட்டு மோர் விரண நோய், a malignant disease of the nail bed characterised by swelling, shooting pain, etc. — Whitlow.

உப நயனம், மூக்குக் கண்ணாடி, spectacles; **2. கண்ணில் மருந்திட்டுக் கட்டுகை,** bandage to the eyes after applying medicine.

உப நளகம், முன் காற் சிற்றெலும்பு. (In Anatomy) the outer and smaller of the two bones of the leg — Fibula.

உபநாகக் கட்டு, இரணத்திற்கு மருந்து வைத்துக் கட்டல், application of poultice to a wound.

உப நாகம், தாமரை அடித் தண்டு, the stalk of a lotus; **2. கபத்தினால் வெள் விழிச் சந்தில் தாமரைக் கொடியின் அடித் தண்டைப் போல் கட்டியை யெழுப்பி, வீக்கத்தையும், தினவையும், வலியையுமுண்டாக்கு மோர் விதக் கண்ணோய்,** a painful cyst of considerable size (that of a bit of lotus stalk) occuring at the junction of the pupil with the iris attended with swelling, itching sensation, pain etc; inflammation of the ciliary gland — Stye.

உப நாகனம், இரணத்திற்குக் கட்டு மருந்து, poultice or external application to a wound, swelling etc. **2. மருந் திலைகளை வதக்கி வைத்துக் கட்டுதல்,** application of medicinal leaves coated with oil and exposed to fire — A kind of fomentation; **3. களி இண்டிக் கட்டுதல்,** the act of putting a plaster or poultice upon; **4. தைலம் பூசுதல்,** anointing medicated oil; **5. இடித்துக் கட்டு மருந்து,** a bandage of pounded leaves or other medicine applied to a wound.

உப நாயம், see **உப நாகம்.**

உப நிகழ்தம், ஓங்காரம், the mystic name of the deity prefacing and concluding all the prayers of the daily worshipper.

உப நிடதம், ஒருவர் இரகசியமாய்ச் சொல்வதை அவர் பாதத் தண்டை உட்கார்ந்து கவனமாய்க் கேட்டல், (literally) the act of sitting down at the feet of another (a guru) to listen to his teachings (a secret knowledge given or imparted in this manner); **2. இரகசிய விஷயங்கள்,** that which

is taught to a select few and not intended for people in general. They are designed for, and understood only by, the initiated — Esoteric doctrines; 3. வேத ரகசியங்கள், a class of pholosophical writings about 100 or so, attached to the Brahmanas aiming at the exposition of the secret meanings of the Veda. They are regarded as sources of the Vedanta and Sankya philosophies.

NOTE.— These are the mystical doctrines or writings supposed to be a portion of the old Vedas, They are said to be the translation of the writings in the Dravidian languages stolen by the Aryans.

உபநிஷ கிரமணம், வெளிக் கிளம்பல், வெளியே அடி எடுத்து வைத்தல், the act of going or stepping out, 2. பிறந்த குழந்தையை நான்கா மாதம் முதலாக வெளியே கொண்டு வரல், the taking out of a child in the fourth month of its age for the first time to the open air.

See also நிஷ் கிரமணம்.

உபதி பாதம், திடீரென ஏற்படும் நோய், a sudden and unexpected attack of a disease.

உப நேத்திரம், see உப நயனம்.

உப பட்சம், அக்குள், arm-pit; 2. அக்குள் மயிர், hair in the arm-pit.

உப பத்திரம், இலைக் காம்பி னருகுள்ள சிறிய இலை, a small leaf-like appendage at the base of the pedicle — Stipule.

உப பரிசனை, புணர்ச்சி, coition; 2. உண்டாயிருத்தல், impregnation.

உப பேறு, உப பலன், something obtained in addition to the principal material, as in a process of manufacturing; a secondary product obtained during the manufacture of a primary product — By product.

உப மருந்து, துணையாகக் கொள்ளு மருந்து, an ingredient in a prescription to help the main ingredient — Adjuvant.

See அனுபானம்.

உப மலம் உள்ளிருக்கும் மாசு, internal impurities or filth such as ... phlegm, sweat etc; 2. மன mental impurities; corruption mind.

உபய கோமுகி, இரு பக்கம் பார்வையுள்ள, two faced or looking both ways, as do worms.

உபய நாகமலர், இருவகை நாகப்பூ — சிறு நாகப்பூ, பெரு நாகப்பூ, the two kinds cassiabuds — Mesua ferrea.

உபய நொச்சி, இரு வகை நொச்சி — வெண்ணொச்சி, கரு நொச்சி, the two kinds of Vitex — Vitex negundo and Vitex trifolia.

உப யந்திரம், சத்திர மிடுவதற்கான சிறிய அல்லது துணைக் கருவிகள், minor surgical accessories.

உபய பாகம், வாந்தியையும் பேதியையும் உண்டாக்கு மருந்து, a medicine that acts in two ways as an emetic and as a purgative.

உபய முகம், மேல் முகம், கீழ் முகம் முதலிய இருபுறம், the two directions, namely upward and downward; 2. இரு புறத்து முகம். இது கருப்பிணியைக் குறிக்கும், the two-faced, said of a pregnant woman because of the embryo which has its face turned in the opposite direction to that of the mother; 3. இருபக்கமும் திரும்பக்கூடிய முகம், having a face that can be turned either way.

உபய முக ரத்த பித்தம், ஒரே காலத்தில் உடம்பின் ஏழு துவாரங்களின் வழியாகவும், மேலுங் கீழுமாக இரத்தத்தை வெளிப்படுத்து மோர் வகை நோய், hemorrhage or escape of blood through all the seven openings of the body viz. — the eyes, the nose, the ears, the mouth, the anus, and the genitals, in directions both upwards and downwards.

உபயம், இரண்டு, two or double.

உபய வசை, சீரகம், cumin seed; 2. கருஞ்சீரகம், black cumin — Nigella sativa.

உபய விட்டகம், பெண்களுக்குக் கருப்ப காலத்தில் மாதவிடாய் தவறுத லில்லாமல் சாதாரணமாக மாதா மாதம் வெளிப் படுவதனால் இளைத்து வயிற்றிற்குள் உலாவிக் கொண்டிருக்கும் பிண்டம், இதுவே சுப்தி பிண்டம், the emaciated foetus found moving in the womb; and this emaciation is due to the continance of the menstrual discharge inspite of pregnancy.

உபய வியஞ்சனன், இரண்டு குறிகளையும் உடைய அலி, one with the marks of both the sexes — Hermaphrodite.

உபய வேர், இருவகை வேர் — வெட்டி வேர், விலாமிச்சை வேர், the two kinds of aromatic roots — Khus Khus.

உப யுத்தா, முதியார் கூந்தல், which see.

உப யோகம், மருந்து கூட்டல், to compound medicines.

உபரச குணம், தமிழ் வைத்தியத்திற் சொல்லியுள்ள உபரசச் சரக்குகளின் குணம், qualities of the natural bodies or products enumerated in Tamil Medical Science.

உபரசங் கற் சத்து மாகி, இடு கொள், which see.

உபரசச் சத்து, தமிழ் வைத்திய நூலிற் கண்ட 120 உபரசங்களினின்றும் வாதநூலின் மார்க்கத்தின்படி எடுக்கும் சத்து, (literally) it implies the highest essence of a natural body according to the alchemists; hence and extract from anything, containing its virtues or the most essential parts in small quantities — Quintessence. (In Tamil Medicine) it is the quintessence extracted from any of the one hundred and twenty kinds of natural substances by an alchemical process.

உபரசச் சத்து குணபாடம், தமிழ் வைத்திய நூலிற் கண்ட நூற்றிருபது உபரசச் சரக்கினின்றும், வாத முறைப்படி எடுக்கும் சத்துக்களின் குணங்களையும், வகுப்புக்களையும் கூறும் நூல், the science which treats both of the chemical and the alchemical properties of the quintessences obtained from the mineral substances and other natural substances of the animal kingdom, and teaches us to characterise, distinguish and class them according to their properties. The following is a list of the natural bodies from which the supposed quintessences can be prepared:—

1. துரிசு — இரசத்தைக் கொல்லும், blue vitriol — counteracts the effects of mercury.

2. பொன்னிமிளை — தங்கத்தைச் சுண்ணமாக்கும், gold - pyrists — turns gold into a compound of carbonate.

3. கஞ்சநிமிளை — வெங்கலத்தைச் சுண்ணமாக்கும், bismuth — turns bell metal into a compound of carbonate.

4. இரசித நிமிளை — வெள்ளியைக் குருவாக்கும், silver - pyrites — converts silver into an alchemical compound.

5. உலோக நிமிளை — இரும்பு குருவாகும், iron-pyrites — converts iron into an alchemical compound.

6. காக நிமிளை — திராவைச் சுண்ணமாக்கும், black bismuth — changes Tira (an alloy of copper and black lead) into a compound of carbonate.

7. முத்துச் சிப்பி — நவாச்சாரம் கட்டும், pearl-oyster — consolidates sal ammoniac.

8. அப்பிரகம்,
9. கிருஷ்ண அப்பிரகம்,
10. வெள்ளி அப்பிரகம்
11. பொன் னப்பிரகம்,
} இரசத்தைக் கட்டும், the four different coloured mica — consolidate mercury.

12. ஊசிக் காந்தம்
13. அரக் காந்தம்
14. உருளைக் காந்தம்,
15. காந்தம்,
16. கற் காந்தம்
} காயசித்தி யாகும், the different kinds of magnet — invogorates the system.

17. கல் நார் — குளிகையிற் கொடுக்கத் தூரம் பார்க்கலாம், asbestos, when given to animated mercurial pill, enables one to see distant objects.

18. சகஸ்திர பேதி — சோரத்தைக் கட்டும், a mineral (unknown) capable of consolidating a kind of arsenic known as சோர பாஷாணம்.

19. கற்பூர சிலாசத்து — உபரசச் சத்துக்கு வாதியாகும், crystallised foliated gypsum — forms a primary ingredient in Alchemical preparations.

20. கல் மதம் — உபரசங்களைக் கட்டும், bitumen — consolidates almost all minerals.

21. அஞ்சனக் கல் — சரக்கெல்லாம் ஈயமாக்கும், antimony — converts all Uparasams into lead.

22. கருங்கல் — சகல சித்தி யுண்டாம், granite — gives all kinds of success.

23. படிகம் — காயசித்திக் குதவும், crystal — used for rejuvenation.

24. சுக்கான் கல் — காய சித்தி யுண்டாம், limestone — invigorates the system.

25. ஈரற் கல் — உஷ்ணத்தைப் போக்கும், corundum — eliminates the excess of heat from the body.

26. இராச வர்த்தக் கல் — நவலோகம் வேதை யாம், lapis lazuli — transmutes nine metals into gold.

27. கருடப் பட்சிக் கல் — பாம்பு விஷம் நீங்கும், eagle - stone — eliminates the snake-poison

28. ஓடு — குளிகை தோஷம் போம், red tile — removes the defects of animated mercurial pill.

29. செங்கல் — குளிகைக்கு ஒளி யுண்டாம், red - brick — imparts brightness to animated mercury pills.

30. எலும்பு — தேகம் வலுக்கும், bone — hardens the body.

31. மயிர் — குளிகைக்கு வேக முண்டாம், lends speed to animated mercury pills.

32. நண்டு — சூதம் கட்டும், crab — consolidates mercury.

33. நாகர வண்டு — ஓடும் போது களைப்பிராது a kind of beetle — prevents exhaustion while running.

34. நத்தை — நாக்கு மெதுவாகும் நற்கீதம் உண்டாகும், small-softens the tongue and improves the voice of singers.

35. கிளிஞ்சில் — வங்கம், பாஷாணம் இவைகளின் தோஷம் போம், bi-valve shell — counteracts the lead and poisoning.

36. ஆமை யோடு — பூமியில் கால்பாவாது, tortoise - shell — enables one to walk in the air without touching the ground.

37. யானைக் கொம்பு — வெடியுப்புக் கம்பியைக் கட்டும், ivory — consolidates the fibrous - like nitre.

38. பன்றிக் கொம்பு — வீரம் குருவாகும், wild boar's horn — turns corrosive sublimate into an alchemical compound.

39. மாட்டுக் கொம்பு — பாஷாணம் செந்தூர மாகும், buffaloe's horn — imparts red colour to arsenical poisons.

40. கலைக் கொம்பு — பைசாசம் போம், stag's horn — removes the devilish influence.

41. பூ நாகம் — குளிகைக்கு குருவாகும், red earth worm — forms a primary ingredient in the animated mercury pill.

42. இந்திர கோபம் — ஓடையில் தரிக்கலாம், lady's fly — used while running.

43. பல் — தூரம் காணலாம், tooth — lends eye a distant vision.

44. செவ்வட்டை — கவுனம் நடக்கலாம், red myriapod — enable one to walk in the aerial regions.

45. சங்கு — conch or chunk - ன் தனைமறைக்கலாம் render oneself invisible.

46. பச்சைத் தவளை — கவுனத்தில் வார்த்தை யாடலாம், frog (green) — enables one to talk in the etheric region.

47. கரடி — அயத் தம்ப மாகும், bear — consolidates iron.

48. கோழி — இரு துடைக்கு வலி வுண்டாம், fowl — gives strength to the thighs.

49. முத்து — இரசத்தை மணியாக்கும், pearl — converts mercury into a bead.

50. பவளம் — இரசத்தை ஏம மாக்கும், coral — transmutes mercury into gold.

51. கோமேதகம் — இந்திரசால வித்தை அறியலாம், sardonyx — imparts knowledge of magic.

52. புட்பராகம் — பூமிக்குள் புதையல் காணலாம், topaz lends a clear vision to buried treasures.

53. வயிரம் — சுண்ணம் முடிக்கலாம், diamond — gives a finishing touch or perfection in the preparation of compounds of carbonates.

54. பச்சை — பரிதி கிரணம் பனி போலாகும், emerald — renders the sun's ray's into icy cold ones.

55. சிவப்பு — உப ரசங்கள் செம்பு மாகும், ruby — converts minerals into copper.

56. வயிடூரியம் — நாகத்திற்கு குருவாகும், cat's eye — forms a chemical agent for zinc preparations.

57. நீலம் — துருசு குருவாகும், sapphire — renders blue vitriol into an alchemical compound.

58. கெண்டகச் சிலை — நாகம் செம்பாகும், a kind of stone (unknown) — converts zinc into copper.

59. சூடாலைக் கல் — நவலோகங்கள் செந்தூர மாகும், a magnetic stone probably magnesium — converts nine metals into red oxides.

60. மஞ்சட் கல் — கந்தகம் செம் பாகும், (lit) yellow stone (ochre) — converts sulphur into copper.

61. மாக்கல் — தாளகம் ஈயமாகும், pot stone — converts orpiment into lead.

62. தேக்கல் — மனோசிலை செம்பாகும், gravel-stone — turns red sulphur into copper.

63. தவளைக் கல் — குளிகை தவளையைப் போல் பாயும், laterite — makes animated mercurial pill leap like a frog.

64. சிலா வங்கம் — பாஷாணம் பற்ப மாகும், galena — turns arsenic into an oxide.

65. சிலா நாகம் — வெடி யுப்புச் சிந்தூர மாகும், zinc - blende — turns nitre into a red oxide.

66. அன்னபேதி — இலிங்கம் மெழுகாகும், green vitriol — converts vermilion into wax.

67. அஸ்திபேதி — நவமணி தண்ணீராகும், bone dissolvent (a menstruum) — converts nine gems into liquids.

68. சொர்ணபேதி — நவலோகம் தண்ணீராகும், gold-dissolvent — converts nine metals into liquids.

69. உவர் மண் — தாது பற்ப மாகும். fuller's earth converts minerals into oxides.

70. மாங்கிஷ பேதி — உபரசத்தை தண்ணீராக்கும், flesh-dissolvent — converts minerals into fluids.

71. கற்கிட்டம் — காயத்தை நிறுத்தும், over - burnt rock — rejuvenates the system.

72. கரு மணல் — தங்கம் குருவாகும், black sand — turns gold into an alchemical compound.

73. செம்மண் — காரீயம் செம்பாகும், red earth — turns black lead into copper.

74. சுத்த மண் — அயம் செம்பாகும், white - clay probably meersachaum — converts iron into copper.

75. முட்டை வாட்டுக் கல் — வெள்ளி செம்பாகும், an unknown stone — converts silver into copper.

76. குரு வண்டு — வாதத்திற்கு உதவும், black beetle having six legs — used in alchemy.

77. பன்றி முள் — இரசம் வெண்ணெயாகும், pig's spine — converts mercury into a colloid.

78. எலி முள் — வீரம் செம்பாகும், rat's spine — turns corrosive sublimate into copper.

79. கடலுரை, கல்லுப்புக் கட்டும், see froth — consolidates the sea-salt.

80. மீன் எலும்பு — கௌரி பாஷாணம் ஈயமாகும், fish-bone (cuttle) — converts arsenic into lead.

81. முள் சங்கு — வெள்ளை ஈயமாகும், thorn chunk — turns white arsenic into lead.

82. பேரோசனை — கெவுனத்தில் ஓடலாம், a kind of calculus — enables one to run in the aerial regions.

83. நாகப் பச்சை — உருக்கு உயர்வான செம்பாகும், a green-stone (probably serpentine — changes steel into superior copper.

84. மரகதப் பச்சை — அயம் செம்பாகும். green stone (beryl) — turns iron into copper.

85. புத்துதான் பழம் — வெங்காரம் சிந்தூரமாகும், a white substance in an ant-hill — turns borax into a red oxide.

86. வெள்ளைச் சக்கான் கல் — வெள்ளீயம் வெள்ளியாகும், White lime stone probably marble — converts tin into silver.

87. கதண்டுக் கல் — பாதாள நிதியம் தோன்றும், black-beetle stone — enables one to see the hidden treasures.

88. காகச் சிலை — காந்தம் செம்பாகும்; black load stone — turns magnet into copper.

89. காண்டா மிருகக் கொம்பு — பாம்பு விஷம் அகலும், Indian rhinoceros horn — cures snake - bite.

90. கஸ்தூரி — தேக மாசுபோம், musk — removes impurities from the system.

91. கடற் பாசி — மயிர் கருப்பாகும், sea moss — gives a black dye to the hair.

92. மந்தாரச் சிலை — சூடன் செம்பாகும் (lit) cloud - coloured stone - sun stone -converts camphor into copper.

93. மாங்கிஷச் சிலை — கவுன குளிகைக்கு வேகம் குறை வாகும். blooded red stone — retards the progress of animated mercurial pills useful for travelling in the aerial regions.

94. சாலக் கிராமம் — தங்கம் செம்பாகும், a fossil with impressions of ammonite — converts pure gold into pure copper.

95. மாந்துளிர்க் கல் — கந்தகம் செம்பாகும், a red stone — turns sulphur into pure copper.

96. காஸ்மீரக் கல் — சிவன் நிருத்தம் செய்வார், Cashmere crystal — makes Siva appear in vision.

97. முட்டை — வெள்ளீயத்தில் நீரை வாங்கும், egg (fowl) — takes away the fluid supposed to exist in tin.

98. கற் காவி — வெள்ளீயம் செம்பாகும், hard red ochre — turns tin into pure copper.

99. செம்பு மணல் — சவ்வீரம் செம்பாகும், copper sand — converts corossive sublimate into pure copper.

100. நாக மணல் — இரசம் செம்பாகும், zinc sand — turns mercury into pure copper.

101. வங்கம் அல்லது காரியமணல் — இலிங்கம் செம்பாகும், lead sand — turns vermilon into copper.

102. வெள்ளீய மணல் — வெங்காரம் செம்பாகும், tin sand — turns borax into pure copper.

103. வெள்ளி மணல் — கௌரி செம்பாகும், silver sand — converts Gowri (a kind of arsenic) into pure copper.

104. ஏம மணல் — தாளகம் செம்பாகும், gold sand — changes orpiment into pure copper.

105. உலோக மணல் — மனோசிலை செம்பாகும், iron sand — converts realgar into pure copper.

106. மயிலிறகு — கவுனம் பாயும்போது சந்திர மண்டலத்தில் காணும் நடுக்கம் போம், pea-cock feather — cures the shivering caused while travelling in the moon with the aid of animated mercurial pill.

107. கருஞ் சுக்கான் — குதிரைப் பல் பாஷாணம் செம்பாகும், black lime-stone — converts horse tooth (a kind of aresenic) into copper.

108. கானகக் கல் — வேகமாய் ஓடையில் நிறுத்தலாம், black-spotted stone — stops one while running fast.

109. குருவிந்தக் கல் — ஆயுதம் கைத்திடாது, grey-flint — Keeps weapons untarnished.

110. இரசித சிலை — துரிசு செந்தூர மாகும், silver ore — calcines copper sulphate into a red oxide.

111. ஏம சிலை — பாஷாணங்கள் செந்தூரமாகும், gold ore — converts all poisonous compounds into red oxides.

112. நாகச் சிலை — நவலோகம் சிந்தூரமாகும், zinc blende — turns the nine metals into red - oxides.

113. காரீயச்சிலை — பச்சைக் கற்பூரம் செம்பாகும், graphite — converts crude camphor into copper.

114. வெள்ளீயச் சிலை — உடம்பில் வெட்டு பாயாது. tin - ore — a sharp instrument cannot penetrate the body.

115. அயச் சிலை — தேகம் இரும்பு போலாகும். iron ore — invigorates the system.

116. திராச் சிலை — சீனம் செம்பாகும், a kind of ore (unknown) — turns alum into copper.

117. வெண்கல மலை — வெடியுப்பு செம்பாகும், bronze ore — converts nitre into copper.

118. பித்தளைச் சிலை — வெடியுப்பு செம்பாகும், brass ore — converts nitre into copper.

119. செம்புச் சிலை — கல்லுப்புச் செம்பாகும், copper ore — turns sea-salt into copper.

120. ஆட்டுக் கொம்பு — உப்பெல்லாம் சுண்ணமாகும், sheep's horn — turns all salts into compounds of carbonate.

NOTE.— The above list from Tamil Bogar Nigandu (vocabulary) is subject to corrections or other alterations for the reason that correct English equivalents for some of the names are not definitely known and also the properties of some substances could not be ascertained or traced to satisfaction.

As I could not get any useful book of reference on the subject from any other source. I had to give out for the present particulars, only gathered as much as possible or otherwise known.

NOTE 2.— The ideas expressed and the phraseology employed by the ancient Siddhars might appear ridiculous to the modern readers who ae accustomed to lucidity and precision of modern science; but it must be remembered that, as these writings on Alchemy were based on Spiritual knowledge which could not be broadcast to the public indiscriminately, they found it necessary to veil their instructions in figurative language *(பரிபாஷை)* which requires a great extent of concentration and patient study to unravel the hidden or the secret meaning, as for instance, the copper mentioned above in No.94 does not mean copper in its literal sense, but really gold highly concentrated which may assume the appearance of copper, as every one ought to know that yellow colour, when highly concentrated becomes red.

உபரசச் சத்து நூல், சாதாரணமாக உலோகங்களைப் போல் இயற்கையாகவே கிடைக்கப் பெற்ற பொருள்களைப் பற்றி இரசாயன வழியாகக் கூறு மோர் நூல், a kind of chemistry treating of the secondary minerals described in the Tamil Medicine as 'Uparasas' — Iatrochemistry.

NOTE.— According to Western scinece, there was a School of Medicines in Europe of the 7th Century which thought that all the phenomena of life and diseases were based on chemical action. This old medical and chemical theory entered Europe through the works of Paracelsus, a famous Swiss physician and alchemist (1493-1441) and his followers, of whom Libarius (died in 1616) a German scientist was one who discovered tin-chloride and described a method for preparing sulphuric acid.

உபரசச் சத்துரு, சிங்கி பாஷாணம், a kind of poison consisting chiefly of lead and nitre.

உபரசச் சத்து வாதி, கற்பூர சிலா சத்து, a beautiful crystallised foliated gypsum.

உப ரசச் சரக்கு, தமிழ் வைத்திய நூலின்படித் தாது வர்க்கம், சீவ வர்க்கம், முதலியவைகளில் இயற்கை யாகவே கிடைக்கக் கூடிய வஸ்துக்களாயும், வாதம், வைத்தியம், யோகம், ஞானம், மாந்திரீகம் முதலியவைகளுக்கு உபயோகப் படுவனவாயும், ஏற்பட்ட வஸ்துக்கள், according to the Tamil Medical Science, the natural substances found in the Mineral and the Animal Kingdoms and used in Alchemy, Medicine, Magic, Pracitce of Yoga etc. They are classified into 120 kinds and they are.—

1. துரிசு, copper sulphate or blue vitriol, but more properly copper acetate.

2. பொன்னிமிளை, gold-pyrites (with a golden lustre)

3. கஞ்ச நிமிளை, bismuth.

4. இரசித நிமிளை, silver-pyrites with silvery radiated crystals.

5. உலோக நிமிளை, iron-pyrites.

6. காக நிமிளை, black bismuth.

7. முத்துச் சிப்பி, pearl-oyster.

8. அப்பிரகம், Indian mica or talc (grey-coloured)

9. கிருஷ்ண அப்பிரகம், mica or talc (black-coloured)

10. சுவேத அல்லது வெள்ளி அப்பிரகம், mica (white coloured)

11. பொன் அப்பிரகம், mica (gold coloured)

12. ஊசிக் காந்தம், magnet attracting needle.

13. அரக்குக் காந்தம், a kind of red magnet.

14. உருளைக் காந்தம், round magnet.

15. காந்தம், magnet (ordinary); load stone.

16. கற்காந்தம், magnetic iron stone.

17. கல்நார், asbestos.

18. சகத்திர பேதி, magnetic iron stone.

19. சிலா சத்து, crystallised foliated gypsum.

20. கல் மதம், bitumen.

21. அஞ்சனக்கல், antimony.

22. கருங் கல் granite.

23. படிகம் crystal.

24. சுக்கான் கல், limestone.

25. ஈரற் கல், corundum or adamantine spar.

26. இராச வர்த்தக் கல், lapis lazuli.

27. கருடப் பட்சிக் கல், a yellowish stone — Eagle-stone.

28. ஓடு, red tile.

29. செங்கல், red brick.

30. எலும்பு, bone

31. மயிர், hair

32. நண்டு, crab

33. நாகர வண்டு, a kind of beetle.

34. நத்தை, snail

35. கிளிஞ்சில், அல்லது சிப்பி, bi-valve shell or oyster shell.

36. ஆமை யோடு, tortoise shell.

37. யானைக் கொம்பு, elephant's tusk — Ivory.

38. பன்றிக் கொம்பு, wild boar's horn.

39. மாட்டுக் கொம்பு, buffaloe's horn.

40. கலைக் கொம்பு, stag's horn.

41. பூ நாகம், red earth - worm.

42. இந்திர கோபம், lady's fly.

43. பல், tooth.

44. செவ்வட்டை, red myriopod.

45. சங்கு, conch or chunk.

46. பச்சைத் தவளை, green frog.

47. கரடி, bear.

48. கோழி, fowl

49. முத்து, pearl

50. பவளம், coral

51. கோமேதகம், sardonyx.

52. புட்ப ராகம், topaz.

53. வயிரம், diamond.

54. பச்சை, emerald.

55. சிவப்பு, ruby

56. வயிடூரியம், cat's eye.

57. நீலம், sapphire

58. கெண்டகச் சிலை, an unknown black stone like Lingam probably a pebble.

59. சூடாலைக் கல், a kind of magnetic stone

60. மஞ்சட் கல், (lit) yellow stone (ochre)

61. மாக் கல் pot-stone (spanish chalk)

62. தேக்கல் அல்லது செம்பாரை, gravel - stone or gravel rock.

63. தவளைக் கல், (சொறிக் கல்), laterite

64. சிலாவங்கம், galena

65. சிலாநாகம், zinc sulphide or zinc - blende.

66. அன்ன பேதி, green vitriol

67. அஸ்தி பேதி, bone dissolvent (a stone)

68. சொர்ண பேதி, gold-dissolvent (a mineral)

69. உவர் மண், fuller's earth.

70. மாங்கிஷ பேதி, flesh dissolvent (mineral)

71. கற் சிட்டம், over-burnt rock.

72. கருமணல், black sand.

73. செம்மண், red - earth

74. சுத்த மண், clean or white clay probably meersachaum.

75. முட வாட்டுக் கல், a stone (un-identified)

76. குரு வண்டு, a kind of blistering fly with six-spots and used in Medicine and Alchemy.

77. பன்றி முள்ளு, hog's spine.

78. எலி முள்ளு, rat's spine.

79. கடல் நுரை, sea-forth.

80. மீன் எலும்பு, cuttle-fish bone

81. முள் சங்கு, thorn-chunk

82. பேரோசனை, a kind of calculus.

83. நாகப் பச்சை, a green stone probably serpentine.

84. மரகதப் பச்சை, green - stone; (beryl)

85. புத்துப் பவளம், a white substance found in ant-hill

86. வெள்ளைச் சுக்கான் கல் white limestone probably marble.

87. கதண்டுக் கல், black-beetle stone.

88. காகச் சிலை, black loadstone.

89. கஸ்தூரி, musk.

90. காண்டாமிருகக் கொம்பு, Indian rhinoceros horn.

91. கடற் பாசி, sea - weed or sea - moss.

92. மந்தாரச் சிலை, cloud - coloured stone — Sun-stone.

93. மாங்கிஷச் சிலை, a blood - coloured red stone.

94. சாலக கிராமம் a fossil of ammonite skin to eagle-stone.

95. மாந்துளிர்க் கல், a red-stone.

96. காஸ்மீரக் கல், Cashmere red-crystal.

97. முட்டை, fowl's egg.

98. கற் காவி, hard red-ochre.

99. செம்பு மணல், copper - sand.

100. நாக மணல், zinc-sand.

101. காரீய மணல், lead-sand.

102. வெள்ளீய மணல், tin-sand.

103. வெள்ளி மணல், siver sand

104. ஏம மணல், gold - sand

105. உலோக மணல், iron - sand.

106. மயி லிறகு, pea-cock feather.

107. கருஞ் சுக்கான் black limestone.

108. கானகக் கல், stone with black spots.

109. குருவிந்தக் கல், grey-flint.

110. இரசத சிலை, silver-stone.

111. ஏம சிலை, gold ore.

112. நாகச் சிலை, zinc stone.

113. வங்கச் சிலை lead-stone or graphite.

114. வெள்ளியச் சிலை, tin - stone

115. அயச் சிலை, iron - stone

116. திராச் சிலை, an alloy of copper and spelter.

117. வெண் கல மலை, bell - metal ore.

118. பித்தளை மலை, brass ore.

119. செம்பு மலை copper ore

120. ஆட்டுக் கொம்பு, sheep's horns.

(போகர் நிகண்டு 1200)

NOTE— 1. The term உபரசச் சரக்கு literally meands the natural products, secondary in nature of both the mineral and the animal kingdoms. In Tamil Medical Science it is used to imply and include—

1. all the natural productions secondary from mine or ore formed by the action of chemical affinities and organised when becoming solid by the power of crystallisation.

2. Some of the mineral products from the earth itself which are brought into use either in the state in which they are found, as coloured earth, mica etc., or are rendered useful after peculiar treatment as in the case of lime, fuller's earth etc.

449-17-sig88a

3. another class of substances distinguished as chemical substances for the reason that they could be subjected to chemical processes by special methods contemplated in respect of them or by a secret process known only to Siddhars who were at one time the greatest alchemists of the day.

NOTE.—2 See my remarks in Note.—1 under **உபரசச் சத்து**.

உபரசத்தைத் தயிலமாக்கி, சின்னாருகை, a plant (not known) capable of reducing or converting Uparasas into oils.

உபரசத் தோஷம் போக்கி, நறுந் தக்காளி, an unknown drug capable of removing the defects in the several natural bodies or substances called 'Uparasams'

உபரச நிகண்டு, போகரால் செய்யப்பட்ட ஓர் வைத்திய நூல், a poetic vocabulary of Tamil Chemistry complied by 'Bogar' a great Siddha.

உபரஞ்சப் பஞ்ச பூதம், போகர் நகண்டிற் கூறியுள்ள உபரசச் சரக்குகளின் ஐந்து வகைப் பேதங்கள், the five classes into which the secondary or auxillary minerals called 'Uparasas' are divided according to the five elements. It is opposed to **பிராஷாணப் பஞ்ச பூதம்,** which refers to the five classes of poisons bearing reference to the five elements.

உபரசம், சேர்க்கை ரசம், mercury in a combined state as opposed to nascent or natural state; **2. கல்லுப்பு,** rock-salt found underneath the sea; **3. களிம்பு கலந்த வுலோகம்,** metallic ores, such as, iron rust, iron sulphate, copper sulphate etc; **4. கடல் நுரை,** sea-froth; **5. இயற்கைச் சரக்கு,** natural substance; **6. இழிந்த சுவையுள்ளது,** that which is inferior in taste; **7. உப தாதுக்கள்,** secondary feeling or passion; **9. அடுத்த வாசனை,** a secondary flavour; **10.** பெரும்பாலும் இயற்கையாகவே மலைகளினின்றும் மற்ற சீவ வர்க்க வழியாகவும் கிடைக்கப் பெற்ற உலோகங்கள் அல்லாத மற்ற வஸ்துக்கள். இவைகள் வாத வைத்திய முறைகளில் எளிதில் சேரக் கூடியவை. தமிழ் வைத்தியத்தில் 120 சரக்குகள் சொல்லப்பட்டுள்ளன.

இவைகளின் விவரங்களைப் பற்றி போகர், சட்டமுனி, முதலிய சித்தர் நூற்களைப் பார்க்கவும், மற்றும், வேடர், கோபாலர், சித்தர், யோகிகள் ஆகிய இவர்களின் மூலமாயும் தெரிந்து கொள்ளலாம்.

The secondary minerals other than metallic ores found mostly in the natural state and some found in combination as also those derived from the anmial kingdom such as horn etc. They are mostly found useful in medical and alchemical preparations. According to Tamil Medical Science, they are classified into 120 kinds, the details of which will be found given in Tamil Medical works of Siddhars. such as Bogar, Sattamuni and others. They can be easily recognised with the aid of hill-tribes like hunters and shepherds, and of Siddhars, Yogis and others who frequent forests and hilly tracks to study the forest produce.

For details see **உபரசச் சரக்கு**

உபரச வாதி, உபரசத்தின் உதவியைக் கொண்டு வாத, வைத்திய முறைகளிற் தேர்ச்சி யடைந்த ரசாயன சாஸ்திரி, he who practises medicine and alchemy according to the old chemical theory with the aid of the secondary minerals and other substances from the animal kingdom — Iatrochemist.

NOTE.— It is through them that chemistry has become a professional science, and as a result of which, many new chemical compounds are discovered. All Siddhares are invariably Iatrochemists.

உபரசிதம் see **உப ராசிதம்.**

உப ரதம், வெடியுப்பு, nitre — Potassium nitrate.

உபர தாமிரத் தட்டை, see **உபர தாமிரம்.**

உபர தாமிரம், நாரை மரம், a kind of tree (un-identified)

உப ரதி, பற்றொழிகை, renunciation of the worldly pleasures; **2. பேரின்ப வனுபவம்,** the spiritual enjoyment rejecting sensual pleasures.

உப ரமணம், உலகப் பற்றை விடல், abstaining from worldly actions or desires.

உப ராசிதம், சிற்றகத்தி, common sesban — Sesbania aegyptiaca.

உப ராமயம், வெண்டை, rose-mallow — Hibiscus esculents alias Abelmoschus esculents.

உபரி, ஓர் மீன், a kind of fish; **2. அதிகம்,** excess, as in **பித்த உபரி,** biliousness.

உப ரிசம், மேலாக முளைத்தல், growing upwards or out; protruberant.

உபரி சரம், ஆகாயத்தில் உலாவல், moving or walking in the air.

உபரி சுரதம், கொக்கோக நூலின்படி அறுபத்து நான்கு லீலைகளி லொன்று அதாவது நாயகன் செய்த கலவித் தொழில் யாவையும் நாயகியும் செய்து புணர்தல், one of the 64 kinds of postures adopted in sexual intercourses as described in the erotic science 'Kokkogam'. It is the repetition of the methods of sexual embraces and coition by the wife as first followed by the husband during sexual intercourse — Coitus muliebre super virum decumbonte.

உபரிதகம், சிரிங்கார் பந்தம், இது கொக்கோக நூலில் சொல்லியுள்ள அறுபத்து நான்கு லீலைகளில் ஒன்று, a kind of coitus described in the erotic science 'Kokkogam'

உபரிதம் see உபரி சுரதம்.

உபரி யாவி, கோஷ்டம், Arabian costum Costus speciosus.

உபல நாடிக்கல், காதிற் குள்ளாக நரம்புகள் படருமிடத்து இருக்கு மோர் கல், a kind of calculus found near the auditory nerves inside the ear — Aural calculus.

NOTE.— It is a lump of hardened cerumen found in the external meatus of the ear.

உபலம், கல், rock; 2. சிறு கற் பாறை, a small rock — Hillock; 3. சிறு கல், a small stone; pebble; 4. உடம்பினி லுண்டாகுங் கல், (In Medicine) a calculus or concretion formed in any part of the body such as the gall stone, stone in the bladder, lung stone etc; 5. எரு முட்டை, cow - dung cake; 6. பளிங்குக் கல், crystal.

உப லிபம், சாணி யிட்டு மெழுகல், to besmear with cow dung.

உப லேபம், see உபலேபனம்; கபங் கட்டல், formation of ph[illegible]

3. மந்தம், dullness.

உப லேபனம், கோ[illegible] மெழுகல், the smearing with cow's urine; 2. கோமயத்தால் சுத்தி செய்தல்; a ceremony of cleansing with cow's urine; 3. தைலம், oil.

உப லோகத் திறம், வெள்ளி, silver.

உப லோகம், உலோகத்தை அடுத்த வஸ்து, secondary mineral.

உப லோத்திரம், விளாம் பிசின் gum of wood-apple tree — Feronia elephantum.

See வெள்ளி லோத்திரம்.

உபவம், சிந்தில், moon creeper — Menispermum cordifolium.

உப வராகப் பிரண்டை, கரணைப் பிரண்டை, coarse-toothed heart-vine — Vitis pallida.

உபவரி, see உபவம்.

உப வல்லிகம், ஓர் பூடு, a plant (unidentified)

உப வனம், நந்த வனம், flower garden, 2. காஞ்சொறி, climbing nettle — Tragia involucrata; 3. கடுக்காய், myrobalan.

உபவாசகம், பேய்த் தும்மட்டி, bitter apple — Cucumis colocynthis.

உபவாசம், உண்ணா திருக்கை, abstinence from food, 2. உண வொழிதல், to abide in a state of abstinence for a certain time; 3. விரதங் கொள்ளல், அதாவது சிற்றின்ப சம்பந்தமானவைகளையும், ஐம்புலனுக் கடுத்த விஷயங்களாகிய வாசனை அலங்காரம், ஆடல், பாடல், சங்கீதம், தாம்பூலம் முதலியவைகளையும் தவிர்த்தல், fasting as a religious act including a complete abstinence from indulgence in all sensual gratifications such as, perfumes, flowers, unguents, ornaments, betel, music, dancing etc; a religious mortification by abstinence.

உப வாசித்தல், பட்டினியா யிருத்தல், to fast especially from religious motives.

உப வாயுக்கள், விக்கல், ஏப்பம், இமை கொட்டல், இருமல், தும்மல், வீங்கல் முதலிய காரியங்களுக்கு ஏதுவா யிருக்கும் தசவாயுக்களுக்குத் துணையான வாயுக்கள், auxillary vital airs in the system, responsible for hiccough, belch, wink, cough, sneezing, swelling etc.

உப வாளிதம், கொடி வேலி, Indian lead wort — Plumbago rosea.

உப விடம், அதி விடயம், which see; 2. ஒன்பது வகைத் தாவர விஷம், அவையாவன — எருக்கம்பால், கள்ளிப் பால், சிவனார் கிழங்கு, அலரி, குன்றி, அபினி, ஊமத்தை, எட்டி, நாபி, the nine kinds of vegetable poisons viz — milk of Swallow-wort, milk of Euphorbia, root

of November plant. Oleander, Liquorice, Opium, Dhatura, Strychnine and Aconite.

உப விடை, see **உப விடம்.**

உப விட்டக் கருப்பம், கருப்பையில் தோஷம் தாங்கி, இரத்தம் கசிந்து அதனால் கர்ப்பம் மெலிந்து துடித்துக் கொண்டிருக்கு மோர் நிலைமை. இது மூவகைக் கருப்பத்தி லொன்று, one of the three conditions of pregnancy marked by the oozing of blood or slight hemorrhage, and emaciated and quivering condition of the womb.

உப வுப்பு, பிண்ட வுப்பு செயநீர், a peculiar liquid extracted from the salt derived from the foctus.

உப வேசனம், மலங் கழித்தல், the passing of stools; evacuation of the bowels.

உபறி யாவி, see **உபரி யாவி.**

உபற் பவம், பாம்பு கொல்லி, the herb of repentance — Ruta graveolens.

உபனோ ரஞ்சகன், எலுமிச்சை, lime - Citrus medica-lima.

உபா, உகா, which see.

உபாகிதை, ஆகாயத்தில் விழும் கொள்ளி, a transient luminous body seen in the atmosphere shooting through space — Meteor.

உபாங்கம், துணையுறுப்புகள், auxiliary organs of the body — Appendages; **2.** முகத்தின் சார்புறுப்புகள், the component organs such as, eyes, mouth etc, of the face; **3.** புற வுறுப்புகள், external organs.

உபாசயம், நித்திரை, sleep.

உபாஞ்சு, ஏகாந்தம், loneliness; solitude.

உபாதான பூதம், கலப்பான பூதம், that which is composed of two or more elements or ingredients — Compound.

உபாதி, வேதனை, pain, agony; **2.** நோய், disease; **3.** ஆன்மாவுக் கேற்படும் வேதனை (In Vedanta philosophy) a condition of the body, which is specially applied to certain forms, considered disguises of the spirit.

உபாதை, see **உபாதி.**

உபாந்தியம், கடைக்கண், the corner of the eye.

உபாய நிசம், பூரகம், inhalation of vital air.

உபாய நிட்டை, எளிதில் செய்து முடிக்கும் நிட்டை, an easy method of attaining success in spiritual contemplation.

உபேட்சை, அசௌக்கியம், indisposition.

உபோதகம், உபோதகி, see **உபோதம்.**

உபோதம், பேய்ப்பானை, wild spinach — Portulaca meridiana.

உப் பக்கம், முதுகு, the back.

உப்பங் கழி, கழியல், back - water; **2.** உப்பளம் salt-pan.

உப்பங் காற்று, கடற் காற்று, sea - breeze.

உப்பங் கோரை, உவர்ப் பூமிகளில் முளைக்கு மோர் வகைக் கைப்புக் கோரை, a bitter sedge that grows on the brackish soil

உப்பசமா யிருக்கை, காச நோயால் பீடிக்கப்படல், to be asthmatic; to be short breathed; **2.** உப்பசமா இருத்தல், the state of being distended as in stomach etc.

உப்பசம், சுவாச காசம், disorder of respiration — Asthma; **2.** மூச்சுக் கஷ்டம், difficulty in breathing; **3.** வயிற்றுப்பிசம், distension of the abdomen through flatulence — Tympanites; **4.** வாயு கொள்ளுவதனாற் பருத்தல், distension with gas; flatulence; **5.** வீக்கம், swelling.

உப் பட்டம், உப்புக் குட்டி மரம், white man grove — Mangium album.

உப்பட்டு, துவரம் பருப்பும் வெல்லமும் கோதுமை மாவுக்குள் பொதிந்து பாகம் செய்யும் அடையைப் போன்ற பணிகாரம், இதுவே 'போளி' எனப்படும். a cake made of wheat flour enclosing in it boiled dholl and sugar or jaggery.

உப்பந் தரவை, உவர் நிலம், saline soil

உப்பந் திராய், கச்சந் திராய், a species of Molugu plant.

உப்பம் பருத்தி, பருத்திச் செடி, herbaceous cotton — Gossypium herbaceum.

உப்பரம், வயிற்றுப் பொருமல், distension of the stomach or the intestines with air or gas — Flatus; **2.** வயிற் றுப்பிசம், tympanites.

உப்பரிகை, பூநீறு, an efflorescent, salt obtained from the soil of fullers earth.

உப்பல், ஊதிப் பெருத்தல், inflation, distension.

உப்பல் மாந்தம், குழந்தைகளுக்குச் செரியாமையினால் வயிறு வீங்கி துன்புறுத்துமோர் வகை மாந்த நோய்; a disease in children arising from indigestion. It is marked by tympanitic distension of the abdomen throught flatulency — Gastro tympanites.

உப்பள நீலம், ஓர் வகை நீலக்கல், a variety of sapphire.

உப் பளம், கழி நிலம், saline soil

உப் பளறு, களி மண்ணும் உப்பு மணலுங் கலந்த களர் நிலம், a soil containing clay and sand impregnated with alkaline matter.

உப்பறிதல், உப்பின் தன்மையை அறிதல், to study the nature of salt; 2. **உப்பைக் கட்டுவதற்குத் தெரிந்து கொள்ளல்,** to know the method of consolidating salt.

உப் பறுகு, உவர் மண் ணிலத்தி லுள்ள அறுகன் புல், a species of Bermuda grass found grown on saline soils.

உப்பாக்கக் கூடிய, உப்பாக மாறக் கூடிய, that which can be converted into a salt by a chemical action — Salifiable.

உப்பால், முதுகு, the back; 2. **மேலிடம்,** the upper region.

உப்பான, உவர்ப்பான, saline.

உப்பி, செவ்வகத்தி, scarlet - flowered sesban — Sesbania punica alias S. grandiflora (coccinea)

உப்பிசக் குன்மம், வயிற்றில் வாயு சேர்ந்து, அதனால் உண்ட வுணவு செரியாமல் வயிறுப்பிக் கொண்டு துன்புறுத்து மோர்வகைக் குன்ம நோய், a form of dyspepsia associated with the formation of gas in the stomach — Flatulent dyspepsia.

உப்பிசம், see *உப்பசம்*

உப் பிடல், உப்பிட்டு ஊற வைத்தல், seasoning with salt, as is done with meat or fish.

உப் பிடுதல், உணவளித்தல், to give food, as in *உப்பிட்டவரை உள்ள வரை நினை,* be grateful to those who gave you food.

உப்பிட்டது, உப்பிட்டுப் பாதுகாத்த பண்டம், that which is salted and preserved; 3. **ஊறுகாய்** pickles.

உப்பிதாங்கு, கருங்கொள், black horsegram.

உப்பிப் போதல், பருத்தல், becoming stout or inflated; 2. **வீக்க மடைதல்,** swelling from sickness; 3. **ஊதிப் போதல்,** becoming bloated.

உப் பிரண்டு, இரு வகை யுப்பு அதாவது தாது, தாவரம், the two kinds of salts namely, the mineral and the vegetable ones; 2. **இயற்கை யுப்பு, செயற்கை யுப்பு,** the natural and the artificial or prepared salt.

உப்பிலாங் கொடி, இண்டங் கொடி, which see.

உப்பிலாங் கொழுந்து, இண்டங் கொழுந்து, the tender leaves of the creeper-plant Indu — Mimosa rubicaulis.

உப்பிலாப் பத்தியம், உப்பை நீக்கிக் கொள்ளும் உணவு, food devoid of salt as a regimen in diet — Salt free diet.

உப்பிலா விலை, இண்டங் கொழுந்து அல்லது இலை, see *உப்பிலாங் கொழுந்து.*

உப்பிலி, உப்பில்லாதது, that which is without salt or deprived of salt; 2. **இண்டங் கொடி,** which see;

3. **ஈர்க்கொல்லி,** a species of stinking swallow wort — Pentatropis microphylla; 4. **இலவண பாஷாணம்,** poisonous compounds of salts, chiefly referring to those obtained from potassium and sodium.

உப் பிலிகம், கருப்புச் சோளம், black millet.

உப் பிலிதம், மூக்கத்தாரி, a plant (unidentified)

உப்பிற் குறுதி, கட்டுக் கொடி, a creeper — Smilax psudo-china

உப்பின, பருத்த, bloated or swollen.

உப் பினம், உப்பைச் சார்ந்த மருந்து வகை, compound of salts; 2. **உப்புச் சரக்கு,** saline substances; alkalies.

உப்பின வயிறு, ஊதிப் பருத்த வயிறு, distended abdomen; 2. **வீங்கிய வயிறு,** swollen belly; 3. **புடைத்த வயிறு,** big or protruded belly; 4. **சரிந்த வயிறு,** relaxed abdomen; 5. **சூணம் வயிறு,** wallet stomach — Pendulous abdomen.

NOTE.— The abdomen sags downward from certain diseased conditions, such as excessive fat, hernia, or tumour.

உப்பினிக் கரி, உப்பின அழுக்கு, bodily filth or dirt.

உப்பீண்டு வாரி, உப்பு நிறைந்த கடல், sea impregnated with salt.

உப்பு, சோற்றுப்பு, common salt — Sodium chloride; **2. உப்பின் பொது,** any kind of salt, such as an alkali etc; **3. ஐந்துப்பில் ஒன்று,** one of the five kinds of salts; **4. உவர்ப்பு,** saltness; **5. உவர்க் கடல்,** sea of salt water; **6. இனிமை,** sweetness; **7. உப்புதல்,** which see; **8. உருசி,** taste.

உப்பு, இது மனித வாழ்க்கைக்கு ஓர் முக்கியமான வஸ்து. இதை இவ் வுலகத்தில் அறியாதா ரில்லை, இதைப் பூமியினின்றும், கடல் நீரி னின்றும், மற்றத் தாவர வஸ்த்துக்களினின்றும் எடுக்கப்படும். ஆயினும் உப்பு என்பது பொதுப்பட நாம் சாப்பிடு முணவுக்கிடு முப்பையே குறிக்கும். இதற்குக் கல்லுப்பு, கடலுப்பு, கறி யுப்பு, எனப் பல பெயர்களுண்டு. இதில் இயற்கை யுப்பு, செயற்கை யுப்பு என இரண்டு வகை யுண்டு. இயற்கை யுப்பைச் சுத்தி செய்து, செயற்கை யுப்பைப்போ லுணவுக் குதவும்படிச் செய்து கொள்ளலாம். ஆனால், சமுத்திர நீரி னின்று மெடுக்கு முப்புத்தான் சுத்தமானதும், நாம் உண்ணும் உணவுக் குரியது மானது. இதைச் சிறிதளவில் பன்முறை யுட் கொள்ளுவதனால் பசியும், சீரண சக்தியு முண்டாகும். அதிக வளவில் வாந்தியும், பேதியுமுண்டாகும், வயிற்றுக் கிருமிகளையுங் கொல்லும்.

இதை அசீரணம், முறைக் காய்ச்சல், சயம், நீரடைப்பு, குன்மம் முதலிய நோய்களுக்குக் கொடுப்பதுண்டு. இதை வறுத்து ஒத்தடம் கொடுக்க வீக்கமும், சந்து வாதமுங் குணமாகும். வாந்தி பேதிக்கு இதைத் தண்ணீரிற் கரைத்து உள்ளுக்கும், ஊசிப் பிரயோகத்தினால் இரத்தக் குழாய்களுக்கும் கொடுக்க, வயிற்றுக் கிருமிகள் சாவதனாலொருவாறு குணத்தை யுண்டாக்கும். சமுத்திர ஸ்நானம் அசீரணத்தைப் போக்கும். ஆகவே உப்பைத் தண்ணீரில் போதுமான வளவு கரைத்தும் குளிக்கலாம்.

எல்லா சீவராசிகளுக்கு மிது மெத்த அவசியமானது. மற்றப் பிராணிகளுக்கும் உப்பைத் தீனியிற் கலந்து போட்டால் வயிற்றிலுள்ள விஷப் பூச்சிக ளெல்லாஞ் சாகும்.

யோகீசுவரர்களுக்கோ இது உதவாது, ஆனா லவர்கள் உப்பைக் கட்டி உபயோகிப்பார்கள். இதைக் கட்டுவது மிகவும் அசாத்தியமான

காரியம். உப்பைக் கட்டினால் இரசவாதத்தில் உலோகங்களை மாற்றப் பிரயோசனப்படும். இது காரணம் பற்றியே ''உப்பைக் கட்டினால் உலோகம் கட்டும்'' ''உப்பைக் கட்டினால் உலகத்தை ஆளலாம்'' என்ற தமிழில் பழமொழிகளு முண்டு, கட்டின வுப்பு கரிக்காது, நெருப்பி லுருகுந் தன்மையுள்ளது. சித்தர்கள் நோயணுகா வண்ணம் இதை மணிகளாகச் செய்து தாழ்வடமாக அணிந்து கொள்வார்க ளென்று சொல்லப்படும். இதுதான் உப்பு மணி. இது வுடம்பிலுள்ள அனேகம் நோய்களைப் போக்குமெனச் சிலர் அபிப்பிராயம். இது விஷயம் தமிழ் சித்தர் நூல்களில் அனேகமாய்ப் பாடியுள்ளார். இரசாயன நூலின் முறைப்படி இவ்வுப்பி னின்று அனேக வித மருந்துகள் மேனாட்டார் தயாரித்துள்ளார். ஆனால் அவை, வைத்திய முறைப்படியும், வாதநூலின் படியும், சில வாண்டுகளுக்கு முன்னரே நமது பெரியோர்களான சித்தர்கள் தமிழில் கூறியுள்ள அனேக மருந்துகளுக் கிணையாகா வென்று ஒருவாறு கொள்ளினும் பொருந்தும்.

Salt is one of the most essential things in man's life and there is none who is not aware of this. This is generally obtained from the earth or extracted from the sea water or plants. Although salt means any kind of salt, usually it stands for common salt — Sodi chloridum alias sodac murias of the chemists. It is called by different names in Tamil viz. rock-salt, sea salt, curry salt etc. and is classified into two kinds — Natural and artificial, Natural salt can be purified by filtration and evaporation or boiling of the liquid. Salt obtained by evaporation of sea water with more or less artificial process for its purification, is the common salt or sea salt that we use in our food.

In small and repeated doses, common salt promotes appetite and assists digestion and assimilation; in large doses, it acts as an emetic, purgative and anthelmintic. Veidyans of our country prescribe it for indigestion, intermittent fever, phtisis, stranguary, dyspepsia etc. Heated salt in the form of an epthem, has been found useful in scrofulous glandular enlargements or swellings, and diseases of the joints. Dissolving it in tepid water, it forms an important ingredient in the so-called saline treatment for cholera, in which the patient is given it in injection. Sea-bath tends to remove indigestion and so baths of the strength of sea-water

may be prepared by dissolving salt in water in proper proportion (i.e., one pound of salt to every 3 gallons of water) So, salt is essential to all lives and it is mixed in the food of other animals for killing the intestinal worms.

Yogis refrain from using this kind of salt ordinarily in their diet, but they consolidate it for use by a special process known to themselves for, it is impossible for any one else to do it. It is by consolidating this common salt by alchemical processes that tranmutation of metals is rendered possible. So, there are the Tamil proverbs. "By consolidating salt, metals can be transmitted" "By consolidating salt the world can be controlled" and so on. This kind of salt is devoid of pungency and has the peculiar characteristic of melting in fire. Siddhars make strings of beads made out of consolidated salt and wear them in order to be free from diseases. These beads are called 'salt beads', and they are said to cure many ailments in the system. This has been fully dealt with in the Tamil medical works of Siddhars. Many compounds of salt are prepared by modern chemists, but they cannot excel those described in the Tamil works on medicine and Alchemy compiled by Siddhars hundreds of years ago.

NOTE.— It is one of the most difficult of arts to consolidate salt and it is unknown to other sciences. By such an art, any base metal can easily be transmuted into gold.

When dealing with its importance, Tamil Medical Science goes to the extent of saying " உப்பைக் கட்டினவன் உலகத்தைக் கட்டுவான்" which means that he who controls the action of salt will control the world, உப்பை விட்டால் வாத மில்லை, there is no alchemy without salt.

Siddhars have dealt with this subject elaborately in their works on Alchemy and also on the method of consolidating mercury, sulphur, arsenic and other products which could not otherwise stand the action of fire.

"பேசாத வுப்பினது பெருமைகேளு
பெருங் குருவாஞ் கன்னமுமாம் பெருந்த நீராங்
காசாத செந்தூரங் களங்கு மாகுங்
கைவிட்ட மெழுகாகுங் கட்டு மெல்லாம்
வாசாம கேசரமா மிதிலே வித்தை
வாதி யென்ற பேரழிவார் மற்றோர் காணார்
கூசாம லொன்றிற்குத் தொட்டுக் காட்டக்
கோடான கோடி தொழி லுப்பி லாச்சே"

ஆச் சென்ற வுப்பை விட்டால் வாதம் போச்சு
ஆகாகா வாச்சரிய மம்மான் நாதம்
போச் சென்றே யண்ட மெல்லாம் துடைத்தான்
சொன்னார்
பொய் மெய்யோ வென்றவன் வாய் போடு
மன்னை
நீச் சன்றோ வுன்னை விட்டால் வாத வேலை
நிலைப்ப தன்றோ வுப்பறிந்தால்
நிமிஷத்துள்ளே
மூச் சன்றோ சிவனுக்கு முயிரு மாச்சு
முயன்றுபார் வாதத்திற் குயிர்தா னுப்பே.

ஏமமெங்கே பிறந்த தென்றா லுப்பிற் குள்ளே
யெடுத்துரைத்தா ரெனை யாண்ட மூல நாயன்
காம மெங்கே பிறந்த தென்றா வெள்ளைப் பெற்ற
கருணை நிதி போகருமே காட்டினார் காண்
வாம மெங்கே பிறந்த தென்றால் வஸ்துக் குள்ளே
மருவி நின்ற தென்று சொன்னார் மயேச னப்பா
தாம மெங்கே பிறந்த தென்றாற் றாயு மீசன்
சகலருக்கு முப்பை விட்டால் குசியும் போச்சே.

உரிசை பெற் றுறங்கி நிற்கும் வாதிகாளே
யுப்பாலே யப்பாச்சு வப்புப் பாச்சு
வரிசைபெற வாத மெங்கே வுப்புக் குள்ளே
மகத்தான குளிகை யெங்கே வுப்புக் குள்ளே
பரிச மென்ற தம்பன மோகனத்தோ டெட்டும்
பேரான சத்து முதற் றுமவேதை
கரிச வென்ற வித்தை யெல்லா முப்புக் குள்ளே
காண்கிறதோர் குரு பதத்தைக் கலந்து போற்றே

"மைந்தனே வுப்புடைய பெருமை சொல்ல
வாக்குண்டோ மனமுண்டோ வாத வேலை
மைந்தனே வுப்பை விட்டால் வாதம் போச்சு
வாய் வாதத் திருடருடன் வாய் பேசாதே
மைந்தனே வுப்பதுவுஞ் சத்தியாச்சு
மருவிவிதைக் கட்டினபின் சிவனு மாச்சு
மைந்தனே வெகு கடினம் கட்டுதற்கு
வாய் திறந்து வுப்பென்ற வார்த்தை போடே"
(கொங்கண, வாத காவியம் 3000)

The above stanzas quoted from the work of Konganava (a great Siddha) on Alchemy will not fail to convince one of the importance of salt and the part played by it in Alchemy.

உப்பு கெதை, see **உப்புக் கதை**.

உப்புகை, உப்புதல், which see.

உப்புக் கசடு, சவுட் டுப்பு, black salt; **2. உப்பின் வண்டல்**, sediment of salt; precipitate of salt.

உப்புக் கட்டி, சிறு கட்டுக் கொடி a kind of milky medicinal creeper found commonly grown in Malabar. It is a useful remedy in dysentery; **2. உப்புத்திரளை**, a lump of salt; **3. உப்பைக் கட்டும் வஸ்து**, any substance or drug capable of consolidating salt.

NOTE.— It is so called from its supposed virtue of consolidating common salt.

உப்புக் கட்டு, மருந்துச் சரக்குகளினால் உப்பைக் கட்டி

நெருப்பிற்கு ஓடாமற் செய்தல், restraining the action of salt so that it may not disappear on application of heat. See also உப்பு.

உப்புக் கண்டம், உப்போது மற்றச் சரக்குகளும் கலந்து காயவைத்துப் பதப்படுத்திய மீன் அல்லது மாமிசத் துண்டு, a fish or piece of meat seasoned with salt and other spices; 2. உப்பு மாத்திர மூட்டிக் காயவைத்த மீன் அல்லது மாமிசத் துண்டு, a piece of salted-meat or salt-fish.

உப்புக் கதை, மெழுகைக் கட்டிக் கதையைப் போற் செய்து உப்பை யுருக்கி அதில் வார்த்து எடுத்த நீளத் தடி, a long stick obtained by casting melted salt into a mould made of wax.

NOTE.— This is an impossible task unless one is proficient in the art of consolidating salt or restraining the action of fire on salt.

உப்புக் கரிக்கப் போடல், மிகுதியாக வுப்பைச் சேர்த்தல், to add salt to make a substance more pungent; to add excess of salt.

உப்புக் கரித்தல், உப்பு மிகுதியாய் உவர்த்தல், to have an intensely saline taste.

உப்புக் கரி நீர் முள்ளி, கழுதை முள்ளி, holly leaved bear's breech; Sea-holly — Acanthus ilicifolius.

உப்புக் கலப்பு, உப்புக் கலந்த திரவம், a saline mixture; 2. உப்புக் கலத்தல், a mixture of salt in anything.

உப்புக் கல், சிறு உப்புக் கட்டி, a grain or a small piece of salt; 2. ஓர்வகைக் கல்லுப்பு, a hard sand-stone with sharp grains of salt formed on its upper surface found in the sea-bed; 3. சமுத்திர வுப்பு, beds of rock underneath the sea formed by the deposit of salt due to evaporation of sea-water.

உப்புக் கழி, see உப்பங் கழி.

உப்புக் களங்கம், கட்டிய வுப்பை எடுத்து உருக்கு முகத்தில், நாகம், சூதம், வீரம், கெந்தி முதலியவைகளைச் சேர்த்து வாத முறைப்படித் தயாரிக்கு மோர் மருந்து, an alchemical compound prepared by adding zinc, mercury, corrosive sublimate and sulphur to consolidated salt white in fusion.

உப்புக் காய்ச்சல், உடம்பில் உப்பு மிகுதியா லேற்படும் ஓர்வகைக் காய்ச்சல், fever arising from excess of salt in the system — Salt fever.

உப்புக் காரம், alkaline salt, see ஆண் சரக்கு.

உப்புக் கிண்ணி, உப்பைக் கட்டி உருக்கி வார்த்து எடுத்த ஓர் வாயகண்ட பாத்திரம். இது சாதாரண உப்பைப் போல் கரையாது, ஆகவே சித்தர்கள் காய கற்பத்திற்காக வேண்டி இப் பாத்திரத்தை உண் கலமாக வுபயோகிப்பார்கள். இம் மாதிரியே இரசக் கிண்ணி, காந்தக் கிண்ணி, அப்பிரகக் கிண்ணி, கந்தகக் கிண்ணி முதலியவைகளையும் செய்து உபயோகப் படுத்துவார்கள், a bowl obtained by melting consolidated salt and then casting it into a mould. It is insoluble in water unlike common salt. It is used by Siddhars as an eating-dish for purposes of rejuvenation. In the same way are used bowls made of mercury, magnet, mica, sulphur, etc.

NOTE.— This can only be accomplished by Siddhars or by one who is an expert in the art.

உப்புக் கீரை, நரி உமரிக் கீரை, common Indian saltwort, or Indian glosswort — Suaeda nudiflora.

உப்புக் குஞ்சம், கருஞ்சீரகம், black cummin seed, or small fennel — Nigella sativa.

உப்புக் குட்டி, கடற்கரையிலுள்ள ஓர்வகைச் சிறிய மரம். இது மலையாளத்தில் மிகுதியாய் விளையும். சிறிய மஞ்சட் பூ விருக்கும். விதைகள் மரத்தில் பழுத்துக்குள் ளிருக்கும் போதே அதனுள் ளிருந்து முளையைக் கிளப்பி 3 அல்லது 4 அடி வெளித்தள்ளிப் பிறகு பூமியில் விழுந்து புதுச் செடியாக முளைக்கும். இச்செடியின் அடித் தண்டைச் சுற்றிலும் தழைகள் 1 1/2 அடியிலிருந்து 2 அடி உயரம் வரைக்கும் அடர்த்தியாய் வளரும். சாறு பிசுபிசுப்பானது. பட்டை சிகப்பு, இதன் வேர் தாது புஷ்டியைக் கொடுக்கும். காயின் விதையைக் கட்டிகளுக்கு வைத்துக் கட்டலாம், தோல் கசப்பு. இம்மரத்தின் சாம்பல், வண்ணான் துணிக்கு போட்டு வெளுக்கவும், வர்ணக்காரர்களது வர்ணம் கெட்டியாய்ப் பிடிக்கவும், உதவும். இதன் விறகு அடுப்பெரிக்க வுதவும், common Indian mangrove — Avicennia officinalis alias Mangium album. It is a small tree found grown on the sea-shores and banks of tidal rivers of Malabar; flowers are small and dingy yellow; seeds germinate while in the fruit, on the tree and produce a shoot 3 to 4 ft. long and then fall on the ground to take a new centre for growth.

The plant sends up, in a wide radius all round its stem, a dense crop of shoots from 1 1/2 2 ft. high. It contains a juice which is very tenacious. The bark contains a red colouring matter. The ash of the bark is deliquescent; roots aphrodisiac; unripe seeds are used as poultice to hasten suppuration of boils; kernels bitter and edible. Ashes of wood are used by dhobies for cleansing clothes and painters use the same with colours to make them adhere fast.

உப்புக் குத்தி, ஓர் வகைக் குருவி, a kind of bird.

உப்புக் குயிர், விரம், corrosive sublimate as affording life to salt.

உப்புக் குரு, கொங்கணவன் வாத காவியத்தில் சொல்லிய முறைப்படி உப்பைக் கொண்டு தயாரிக்கு மோர் குரு மருந்து. இது வேதைக் குதவும், a reputed powder or solid substance prepared out of salt as per process described in the work of Konganava on Alchemy.

It is supposed by the achemists to possess the property of transmuting other metals into gold or silver and the discovery of which was the supreme object of alchemy.

உப்புக் குறுதி, நொறுக்காய்ப் புளி, sweet babool — Pithecolobium dulce.

உப்புக் கூர்த்தல், உப்புக் கரித்தல், having a saline taste.

உப்புக் கெதை, see உப்புக் கதை. It is used in alchemy for converting copper into gold.

உப்புச நாச மாக்கி, சிறுபூனைக் காலி, a variety of cowitch plant capable of curing tympanites.

உப்புசப் பில்லாமை, உருசியின்மை, tatelessness; insipidity.

உப்புச மாந்தம், குழந்தைகளுக்கு அசிரணத்தினால் வயி றுதிக் கொண்டு துன் புசறுத்து மோர் மாந்த நோய், see உப்பல் மாந்தம்.

உப்புகம், see உப்பசம்.

உப்பு செயநீர், உப்புச் சுண்ணத்தி லிருந்து வாதிகள் தயாரிக்கு மோர்வகை செய நீர், a universal solvent prepared out of the carbonate compounds of sodium chloride.

உப்புச் சத்து, மூலிகைகளி னின்றும், தாது அல்லது தாவர வர்க்கங்களை பெரித்து அவைகளி னின்றும், எடுக்கும் உப்பின் சாரம், an essence of salt chiefly potash extraced from the ashes obtained by burning herbs and other plants.

உப்புச் சரக்கு, உப்புச் சத்தடங்கிய காரமான சரக்கு; ஆண் சரக்கு, substances containing essence of salt — Alkali; substances having alkaline properties in a slight degree — Alkaloid; 2. சுண்ணச் சரக்கு, இது மஞ்சளுக்குச் சிவக்கும், any substance with the properties of soda or potash. It is a chemical basis which turns vegetable yellow into red.

உப்புச் சவுடு, see உப்பு மண்.

உப்புச் சாறு, கடல் நீர், sea - water; 2. உப்புச் சத்துள்ள நீர், any fluid containing essence of salt; 3. கன்னட தேசத்தி லுபயோகிக்கும் ஒரு வகைக் குழம்பு, a sauce used in South Canara.

உப்புச் சீடை, உப்பிட்ட சிடைப் பணிகாரம், salted and fried balls of pastry. It is used by the South Indian Brahmins.

உப்புச் சுண்ணம், கட்டிய வுப்பைக் கொண்டு கொங்கணவன் வாத காவியத்தில் குறித்த சுண்ண முறைப்படித் தயாரித்த ஓர் மருந்து. இது வாதத்திற் குபயோகப்படும். a calcium compound prepared from consolidated salt as per process laid down in the work of Konganava on Alchemy. It is said to contain alchemical virtues.

உப்புச் சுரம், மூத்திரத்தில் அதிக வுப்புச் சேரு வதனா லுண்டாகும் சுரம், a fever associated with excess of salt in the urine showing its existence abnormally in the system. It is due to the drawing away by the salt of the water normally eliminated by perspiration — Salt fever. See உப்புக் காய்ச்சல்

உப்புச் செந்தூரம், வைத்திய முறைப்படிச் சோற் றுப்பை மூவகைச் சாற்றா லரைத்துப் புடமிட்டெடுத்த செந்தூரம். இதனால் அசிரணம், வயிற்றுவலி, குன்மம் முதலிய நோய்கள் தீரும். (In Medicine) a red oxide of common salt prepared by grinding it with the juice of herbs and then calcining it in the fire as per process laid down in the Tamil medical science. 2. வாத முறைப்படிக் கல்லுப்பைக் கட்டி அதனின்று தயாரிக்கு மோர்வகைச் செந்தூரம். இது செம்பைப் பொன்னாக்குந் தன்மை வாய்ந்தது. (In Alchemy) a red oxide of salt prepared from consolidated salt by the process of calcination. This is said to convert copper into gold.

உப்புச் செறிவு, see உப் பூரணி.கஷ

உப்பு டாலி, கடற் கொழுஞ்சிச் செடி, இதன் இலை இரசத்தைக் காய்ச்சி யுப்புப் போட்டுக் கொடுக்க நீர்க் காசம் போம், a species of citrus — Ruellia Ringens. The juice of the leaf boiled and mixed with salt is prescribed for Asthma.

உப்புதல், ஊதுதல், to bloat; to puff up; 2. வீங்குதல், to swell as a boil or an abscess does; 3. பருத்தல், to become stout.

உப்புதிரி, சுரம் கண்டு பிறகு மூன்றாம் தலையில் குருத் தோன்றி உடம்பெல்லாம் பூர்த்து ஐந்தாம் நாளில் நீர்க் கோர்த்துக் குரு முழித்து ஏழாம் நாளில் இறங்கு மோர் வகை யம்மை, a kind of small pox marked by a distint remission, beginning with eruption on the head on the third day and then spreading all over the body and become vesicles on the fifth day. They are finally converted into pustles, and on the seventh day they dry up and break down forming crusts.

உப்புத் தண்ணீர், கடல் நீர், sea - water; 2. உப்புக் கரைத்த தண்ணீர், solution of salt of saline solution; 3. உப் பூறிய தண்ணீர், salt - water as opposed to நல்ல தண்ணீர் fresh water; 4. உவர் நீர், brine.

உப்புத் தரவை, உவர் நிலம், saline soil.

உப்புத் தரை, see உப்புத் தரவை.

உப்புத் தள்ளல், பத்தியத்தில் உப்பு நீக்கல், the removal of salt from the diet; salt free diet — Dechloridation.

See உப்பில்லாப் பத்தியம்.

உப்புத் தாரகி, ஆற்று முள்ளங்கி, which see.

உப்புத் திராவகம், பொதுவாகச் சோற்றுப்பைக் கொண்டு காய்ச்சி வடித் தெடுத்த தீ நீர், commonly, it is an acid prepared from common salt as the chief ingredient — Muriatic acid;

2. தமிழ் நூலின்படி வைத்தியர்களாற் தயாரிக்கப்படும் ஓர் திராவகம் அதாவது:—

உப்பு (சோற்றுப்பு),	8 பலம்
படிக்காரம்	6 பலம்
கடலைப் புளிப்பு நீர்,	8 பலம்

மேற்கண்ட அளடுவுப்படி எடுத்துக் கொண்டு உப்பை நன்றாகக் காய வைத்து, மற்றி ரண்டு சரக்குகளையும் சேர்த்துக் குப்பியி லடைத்து வாலையி லிட்டு இறக்க மற்றொரு குப்பியில் திரண்டு நிற்பது தான் உப்புத் திராவகம். இதை வைத்தியர்கள் சிரண சக்திக்கும் பலத்தைத் தருவதற்கும் கஷாயத்தோடு சேர்த்துக் கலந்து கொடுப்ப துண்டு. இச் சோற்றுப்புத் திராவகத்திற்குத் தான் கறியுப்புத் திராவகம் என்றும், வடமொழியில் இலவணத் திராவக மென்றும் பெயர். According to Tamil Medical science, Veidyans prepare it in the following manner:—

Common salt,	8 pallams
Alum	6 do
Bengal gram vinegar,	8 do

The common salt is at first well dried and then the other two ingredients are added to it and the whole is secured in a bottle and then distilled till the whole of the muriatic acid is disengaged and condensed in a receiver intended for the purpose — Acidum muriaticum. This is considered by the Native practitioners a stomachic and tonic and is prescribed in conjunction with an infusion of spices.

This Muriatic acid prepared from common salt is otherwise known as Hydrochloric acid or spirit of salt.

3. ஆங்கிலேய நூலின்படி இச் சோற்றுப் பைச் சுயமான கந்தகத் திராவகத்தோடு கலந்து வாலையி லிட்டுக் காய்ச்சியும் இத்திராவகம் வடிக்கப்படும். இது சிறிது மஞ்சளாயும், புளிப்பாயும், நெடி யுள்ளதாயுமிருக்கும். முகர்ந்தால் மூச்சடைக்கும், உடம்பிற் பட்டால் கொப்பளிக்குந் தன்மை வாய்ந்தது.

இதைச் சில சமயம், அழு கிரந்தி, வாய் வேக்காளம், வாயமுகல், பரு, முதலானவைகளுக்கு மேற்பூச்சு மருந்தாகவும் உபயோகிப்ப துண்டு. விளாவிய திராகவம் குணத்தில் மேற்கண்ட 2வது பிரிவில் சொல்லிய காட்டுத் திராவகத்தைப் போன்றதால் உள்ளுக்குக் கொடுக்கலாம். சன்னி பாத சுரம், விடாச் சுரம், குன்மம், கல்லடைப்பு, மேகக் கிரந்தி, கக்குவான் முதலானவைகளுக்கும், மற்றும் தொண்டை நோய்க் கொப்பளிக்கு நீராகவும் உபயோகப்படும். (In Modern Chemistry) This acid is known as Hydrochloric acid (HCl) — Acidum Hydrochloridum. It is always prepared by treating common salt with concentrated sulphuric acid (H_2SO_4), when the reaction takes place and the products obtained are Sodium Sulphate and Hydrochloric acid. The reaction is expressed as follows:—

$2\ NACL + H_2SO_4 = NA_2SO_4 + 2\ HCl.$

It is slightly yellow in colour (but colourless when pure) and strongly acid having a pungent odour. When smelt is suffocates, and raises blisters on the surface of the body when it comes in contact with it.

Uses — It is a powerful escharotic and corrosive poison; occasionally applied as an escharotic to phagedenic ulcerations, gangrenous stomatitis, can crum oris, and warts. It is admissible as an internal remedy like the Muriatic acid mentioned above in No.2 only in the diluted form. It has been found useful in typhus and typhoid fever, in cases of continued fever in childhood, in some forms of dyspepsia, in calculous affections, in syphilis and in the chronic stages of whooping cough.

It can also be used with advantage in affections of the throat and fauces, requiring a mild stimulant. It proves a valuable adjunct in gargles.

உப்புத் திரி, குழந்தைகளுக்கு மலம் போவதற்காக ஆசன வாயிலி லேற்றும் உப்பு நீரில் துவைத்த திரி, a twist soaked in a preparation of salt and inserted into the anus of a child to serve as a suppository for drawing out the fecal matter in cases of constipation.

உப்புத் தேகம், எப்பொழுதும் உப்பு நீர் கசிந்து கொண்டிருக்கும் உடம்பு, a condition in which saline fluid is always found oozing out from the surface of the body.

This should not be confounded with perspiration.

உப்பு நிலம், உவர் பூமி, saline soil.

உப்பு நீக்கி, இருப்பவல், which see **காட்டு மருக் கொழுந்து,** a species of wild mad's love.

உப்பு நீர், see **உப்புத் தண்ணீர்; 2. வியர்வை,** perspired water.

உப்பு நீர்ப் பாய்ச்சல், உப்பிற் கரைத்த நீரை உடம்பினுள் ளேற்றல், an injection of saline solution into the system — Saline injection.

உப்பு பாகம், பத்தியத்தில் உப்புக் கூட்டு முறை. சங்கிலை, பிரா யிலை இவ்விரண்டையும் உப்போடு சேர்த்து ஆவின் பால் தெளித்து வறுத்துக் கூட்டல், வாதி யென்றால் உப்பைக் கட்டிக் கொள்வான், the method of purifying salt for purposes of adding it in cookery, while observing diet is, to sprinkle cow's milk while frying the common salt mixed with the leaves of Sangu (four-spined monetia) and Pirai (Trophis aspera); but Alchemists and Yegis consolidate the salt before using it in their medicine and diet.

உப்பு பார்த்தல், கறிக்கு உப்பிட்டது சரியா வெனச் சோதித்தல், to test the sufficiency of salt in the preparation of curries.

உப்பு புளி தள்ளல், கடும் பத்தியம் காத்தல், to observe strict diet by abstaining from taking food with salt and tamarind.

உப்பு பேதி, மருந்துப்புக் கூடிய பேதி, a saline purgative.

உப்புப் படல், உப்புத் துண்டு, salt in flakes; **2. உப்பு விளைதல்,** to form salt naturally.

உப்புப் படுதல், உப்புத் தன்மை யுண்டாதல், அதாவது உவர்ப் புண்டாதல், partaking of the qualities of salt.

உப்புப் பண்டம், உப்பிட்ட வுணவுப் பண்டம், salted food or other curries.

உப்புப் பற்பம், மூலிகைச் சரக்குகளைக் கொண்டு சோற்றுப்பை அரைத்துப் புடமிட்டுப் பற்பமாகச் செய்தல், an oxide prepared out of common salt by the process of calcination with the aid of herbs.

உப்புப் பற்றல், see, **உப்புப் படுதல்.**

உப்புப் பாத்திரம், see **உப்புக்கிண்ணி.**

உப்புப் பார்த்தல், உருசி பார்த்தல், testing the soundness of preparation of curries etc., by tasting them.

உப்புப் பால், பெண்கள் பிரசவித்த மூன்று நாள் வரையிலும் சுரக்கும் உவர்ப்பான பால், the first milk secreted in the breasts of a woman during the first three days after delivery — Colostrum.

உப்புப் பிடித்தல், see **உப்புப் படுதல்.**

உப்புப் புல்லு, உவர்த் தரையில் முளைக்கும் புல், grass showing on saline soils. This is generally found on the banks near a back water.

உப்புப் புளிப்பு, see **உப்புத் திராவகம்; 2. உப்புச் சுவை கலந்த புளிப்பு,** a mixture of two tastes viz. sourness and saltishness.

உப்புப் பூத்தல், உப்புப் படிதல், formation of a coating of salt on any surface; **2. உடம்பிலுப்புப்**

படர்தல், becoming covered with a whitish crust on the skin, as from perspiration; a deposit of a white powdery substance on the surface of the body.

உப்புப் பை, புண்களுக் கிடுவதற்காகச் சல்லாத் துணியில் உப்பை வைத்துக் கட்டும் சிறிய பை, a small sac (made of gauze and containing salt) packed into a wound — Salt sac.

உப்புப் பொரிதல், see, உப்புப் பூர்த்தல்.

உப்புப் போடல், ஊறுகாய் போடல், to season with salt; 2. உப்புச் சேர்த்தல், to add salt to anything.

உப்பு மணி, உப்பைக் கட்டி உருக்கி மணியைப் போல் துவாரம் செய்து கோர்த்துத் தாழ் வடமாக அணியக்கூடிய, தந்தத்தைப் போற் கெட்டியான மணி — கல்லுப்பு மணி. இதைச் சித்தர்கள் பூசையில் செப மாலையைப் போ லுபயோகிக்க அனேகம் சித்திகளைப் பெறுவார்களெனக் கருதப்படும், a string of beads as hard as ivory, made of salt consolidated by a peculiar process known to Siddhars. It is used by them in meditation or while chanting mantrams on account of its efficacious virtues — Salt - beads.

உப்பு மண், உவர் நிலத்து மண், இது கால் வாய்க் கோமாரிக் குபயோகப்படும், earth giving educed or washed common salt. It is used for cattle affected by foot and mouth diseases.

உப்புமா, கருப் பிண்டத்தின் மேல் படிந்திருக்கும் மாவைப் போன்ற வுப்பு, a white coating of salt found on the foetus or child from the womb; an unctuous substance known as 'cheesy varnish' which covers the skin of the fetus — Vernix caseosa; 2. ஆண்குறி மலருக்குள்ளும் பெண்குறிச் சிற்றிதழைச் சுற்றிலும் படிந்து நிற்கும் மாப் போன்ற வெண்ணிற நாற்றமுள்ள உப்புத் தன்மை வாய்ந்த வஸ்து, a thich, cheesy, ill - smelling secretion found under the prepuce in males and around the labia minora in females — Smegma; 3. அரிசி, கோதுமை முதலியவற்றால் செய்த வோர்வகைச் சிற்றுண்டி, a confection prepared out of rice or wheat; 4. உடம்பிற் பூர்க்கு முப்பு, a whitish crust producing a sallow colour all over the body.

உப்பு மாந்தம், குழந்தைகட்கு வயிற்றை யுப்பச் செய்யு மோர்வகை மாந்த நோய், a disease in children marked by distension of the abdomen due to disorder of digestion.

உப்பு மார்க்கம், உப்பைக் கட்டி வாதத்திற் குபயோகிக்கு முறை, the obsolete process of consolidating salt for purposes of using it in Alchemy.

உப்பு மூலிகை, உப்புச் சத்துள்ள மூலிகைகள். அவை யாவன, herbaceous plants containing the essence of salt viz; —

1. எருக்கு, Madar — Calotropis gigantea.
2. துத்தி, Indian marsh mallow — Sida mauritiana.
3. குப்பைமேனி, Rubbish plant — Acalypha indica.
4. வாழை, plaintain tree — Musa paradisiaca.
5. முருங்கை, drumstick-tree — Hyperanthera moringa.
6. ஊமத்தை Dhatura — Dhatura stramonium.
7. நாயுருவி, Indian burr — Achyranthes aspera.
8. தென்னோலை, Cocoanut leaf — Cocosnucifera.
9. அறுகு, bent grass — Cynodon dactylon.
10. பிரண்டை, adamant creeper — Vitex quadrangularis.
11. எள்ளு, sessaman seed — Sessamum indicum.
12. பூவரசு, portia tree — Theepesia populnea.

உப்பு மெழுகு, கட்டிய வுப்பினாற் செய்த மெழுகைப் போன்ற வோர் மருந்து. இது நரை திரையைப் போக்கிச் சட்டை தள்ளி, உடம்பைச் செந்நிறமாக்கி ஒளியைக் கொடுக்கும். a medicinal wax-like preparation or salve obtained by a special process from the common salt. It is used to remove grey hairs and wrinkles on the body and to contribute youthful lustre and glossiness to the surface of the body.

உப்பு ரெண்டு, see உப் பிரண்டு.

உப்புல், செங்கள்ளி, a red species of square spurge — Euphorbia antiquorum.

உப்பு வகை, அனேக வகை யுப்பு அவையாவன — Euphorbia antiquorum.

உப்பு வகை, அனேக வகை யுப்பு அவையாவன — the different kinds of salts viz;

1. அமரி யுப்பு, urine salt.

2. இந்துப்பு, சைந்தவ லவணம், Rock-salt (produced in Sindh), an impure chloride of sodium occuring in large masses and procurable in all bazaars.

3. கறி யுப்பு, common salt (used in food) obtained naturally from earth or artificially by evaporation of sea - water.

4. கல்லுப்பு, salt in lumps referred to in Taml Medical Science. It is said that it is a natural salt obtained from underneath the sea where it is deposited in the form of a rock.

5. சவுட் டுப்பு, Alkali, salt from fuller's earth, see No.14.

6. காருப்பு, salt from Sesamum seed Black salt or wild salt that appears spontaneously, otherwise swamp salt. See No. 21

7. சங்கார காலத் துப்பு, a strong acid salt, same as No.1

8. பொட்டிலுப்பு அல்லது வெடி யுப்பு, salt petre (KNO_3), Nitrate of potash — Potassac nitras. It is obtained by solution and evaporation from the impure nitrate of commerce, which exists in a natural state in the soil in many parts of India.

9. சாம்ப லுப்பு, சச்சிக் காரம், உவர் மண் காரம் and பூங்காரம், Barilla or impure carbonate of soda prepared by burning plants as Anthrocnemum indicum, Salicornia brachiata etc. It is quite different from that made from the minerals.

10. மரவுப்பு, Potash (used as mineral dye) Salt obtained from the ashes of burnt trees.

11. வளையலுப்பு, glass - gall — Fel vitri, a very white salt with medical virtues obtained from பூ நீறு, and used in the manufacture of glass bangles.

12. வழலையுப்பு, உவர் மண்ணுப்பு, salt extracted from fuller's earth. It is a kind of bangle - salt used in Medicine and Alchemy.

13. அட்டுப்பு, common salt educed from soils, containing it either simple or in combination with other salts, by the process of filtration and subsequent evaporation or boiling.

